# சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

## சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம்

கொள்கை விளக்கக் குறிப்பு
2025–2026

மானியக் கோரிக்கை எண். 15

**தங்கம் தென்னரசு**
**நிதி மற்றும் சுற்றுச்சூழல் &
காலநிலை மாற்றத்துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2025

# அட்டவணை

## சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 2-4 |
| 2. | தொலைநோக்கு, பணிகள் மற்றும் செயல்திட்டங்கள் | 4-11 |
| 3. | சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான சட்டப்பூர்வ வழிமுறைகள் | 11-15 |
| 4. | துறையின் முன்னெடுப்புகள் | 15-58 |
| 5. | கடலோர மண்டல மேலாண்மை | 58-73 |
| 6. | மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் | 73-79 |
| 7. | தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை | 79-83 |
| 8. | சுற்றுச்சூழல் தகவல், விழிப்புணர்வு, திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதார திட்டம் (EIACP) | 84-86 |
| 9. | சுற்றுச்சூழல் விருதுகள் | 86 |
| 10. | நடைமுறையில் உள்ள திட்டங்கள் | 87-97 |

| | | |
|---|---|---|
| 11. | 2024–25–ம் ஆண்டின் சாதனைகள் | 97–101 |
| 12. | நிறைவுரை | 101–102 |


## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 103–106 |
| 2. | வாரியத்தின் பணிகள் | 107–109 |
| 3. | நிறுவன அமைப்பு | 109–111 |
| 4. | இசைவாணை செயல்முறை | 111–119 |
| 5 | சுற்றுப்புற நீர், காற்று மற்றும் ஒலிதர கண்காணிப்பு | 119–151 |
| 6 | கழிவு மேலாண்மை செயல்முறை | 152–194 |
| 7. | சட்ட அமலாக்க அமைப்பு | 194–197 |
| 8. | இதர செயல்பாடுகள் | 197–202 |
| 9. | நிலையான வளர்ச்சி இலக்குகள் | 202–210 |
| 10. | தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நான்காண்டு சாதனைகள் | 211–232 |

# சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2025–2026

*"நீர்அறம்நன்று, நிழல்நன்று, தன்இல்லுள்*

*பார்அறம்நன்று, பாத்து உண்பானேல் – பேரறம்*

*நன்று, தளிசாலை நாட்டல் பெரும்போகம்*

*ஒன்றுமாம் சால உடன்"*

*–சிறுபஞ்சமூலம் : 61*

நீர் நிலைகளை (குளம், கிணறு) அமைத்தல், மரம் நடுதல், உறைவிடம் அமைத்தல், பகிர்ந்து உண்ணல், பாதையோரங்களில் மரம் நடுதல் ஆகிய செயல்களே பேரின்பத்துக்கான வழிகளாகும்

## 1 . முன்னுரை

தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையானது தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை முன்னிறுத்தல், கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கைகள் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையினை செயல்படுத்துதல் ஆகிய நோக்கத்துடன் 1995–ம் ஆண்டு சென்னையில் ஒரு தலைமை அலுவலகத்துடன் தோற்றுவிக்கப்பட்டது.

எனினும், அண்மை காலமாக, உலகம் முழுவதும் சூழல் அமைப்புகள், பொருளாதாரம் மற்றும் சமூகங்களை பாதிக்கவல்ல பெரும் சவாலாக காலநிலை மாற்றம் உருவெடுத்துள்ளது. எனவேதான், 2015–ல் நடைமுறைப்படுத்தப்பட்ட பாரீஸ் ஒப்பந்தத்தின் போது இந்தியா தனது தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளை வழங்கியது. அதனைத் தொடர்ந்து, கிளாஸ்கவ்–வில் 26–வது

ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்ற மாநாட்டில் (COP26) அத்தீர்மானங்கள் மேலும் வலுப்படுத்தப்பட்டன. மேலும், அம்மாநாட்டில் 2070–க்கு முன்னர் இந்தியா நிகர பூஜ்ய உமிழ்வுகளை எட்டுவதற்கான உறுதிப்பாட்டினையும் ஏற்றுக்கொண்டது.

அதனைத் தொடர்ந்து, இந்தியாவின் மிகவும் தொழில்மயமாக்கப்பட்ட மற்றும் 1076 கி.மீ. நீள நீண்ட கடற்கரையையும் தன்னகத்தே கொண்டுள்ள மாநிலமும் காலநிலை மாற்ற பாதிப்புகள் மற்றும் கடல்மட்ட உயர்வு ஆகியவற்றின் பாதிப்பிற்கு அதிகம் ஆளாகக்கூடிய வாய்ப்புள்ள ஒரு மாநிலமுமான தமிழ்நாடு, இச்சவால்களை எதிர்கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கார்பன் சமநிலையை அடைவதற்கான தேசிய இலக்கைக் காட்டிலும் முன்னரே தமிழ்நாடு கார்பன் சமநிலையை அடையும் என தமிழ்நாடு அரசு அறிவித்திருப்பது, காலநிலை

மாற்றத்திற்கெதிரான நம் மாநிலத்தின் உறுதிப்பாட்டினை பறைசாற்றுகிறது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே, சுற்றுச்சூழல்துறையின் பெயரானது கடந்த 2021–ம் ஆண்டு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, நம் மாநிலத்தில் காலநிலை மாற்றத்திற்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

## 2. தொலைநோக்கு, பணிகள் மற்றும் செயல்திட்டங்கள்

### 2.1 தொலைநோக்கு

தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாட்டின் இயற்கை வளங்களை நீடித்த மற்றும் சமநிலையான பயன்பாடு மூலமாக காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளிலிருந்து மீட்டு, சிறந்த சமூகத்தை உருவாக்குவதே தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டமாகும்.

## 2.2 பணிகள்

இயற்கை மாறுபாடுகளுக்கு எதிரான அனைத்து இடர் தணிப்பு மற்றும் தகவமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மாநிலத்தின் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதும், இயற்கை வளங்கள் மற்றும் இயற்கை வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்குரிய திட்டங்களைத் தயாரிப்பதும் இத்துறையின் பணியாகும்.

## 2.3 செயல் திட்டங்கள்

1. தேசிய மற்றும் உலகளாவிய காலநிலைக் குறிக்கோள்களுடன் இயைந்து அனைத்து அரசுத் துறைகளிலும் காலநிலை தணிப்பு, ஏற்பு மற்றும் மீள்திறன் ஆகியவற்றை ஒருங்கிணைத்து விரிவான மற்றும் தொலைநோக்குடன் கூடிய காலநிலை மாற்றக் கொள்கைகளை உருவாக்குதல்.

2. இயற்கை சூழல் அமைப்பு மற்றும் பல்லுயிர் பாதுகாப்பினை வலுப்படுத்துதல்.

3. தமிழ்நாட்டின் 1076 கி.மீ நீளமுள்ள நீண்ட கடற்கரையை கடல்மட்ட உயர்வு, கடல் அரிப்பு மற்றும் தீவிர காலநிலை நிகழ்வுகளிலிருந்து பாதுகாப்பதற்கான மீள்திறனை மேம்படுத்த அறிவியல் பூர்வமான மற்றும் சமூகப் பங்கேற்பினை ஊக்குவிக்கக்கூடிய கடலோரப் பாதுகாப்புக் கட்டமைப்பினை உருவாக்குதல்.

4. கடற்கரைச் சுற்றுச்சூழல் மற்றும் அழகியல் மேலாண்மை அமைப்பு (BEAMS) மற்றும் நீலக்கொடிக் கடற்கரைகள் மூலம் சூழலியல் நுண்ணுணர்வுமிக்க மற்றும் குறைவான தாக்கங்களைக்கூடிய சுற்றுலாக்களை முன்னிறுத்தல்.

5. காலநிலை நிர்வாகம், திறன் வளர்ப்பு மற்றும் பரவலாக்கப்பட்ட தழுவல் மாதிரிகள் மூலம் தங்கள் பகுதிகளின் காலநிலைத் தாக்கங்களை எதிர்கொள்ள உள்ளூர் சமூகங்களுக்கு பயிற்சி அளித்தல்.

6. காலநிலைக் கல்வித்திட்டம் மற்றும் சூழல் மன்றங்கள் மூலம் குடிமக்கள் மற்றும் இளைஞர்களிடையே காலநிலைப் பொறுப்புணர்வினை வளர்த்தெடுக்க காலநிலைக் கல்வியை மேம்படுத்துதல்.

7. நம் மாநிலத்தின் கார்பன் குறைப்பு முன்னெடுப்பை மேம்படுத்தும் நோக்கில் புதைப்படிம எரிபொருள் பயன்பாட்டிலிருந்து பசுமை மற்றும் தூய்மையான போக்குவரத்திற்கு மக்கள் மாற வழிவகை செய்தல்.

8. ஆற்றல் சேமிப்பு, சீரான வெப்பநிலை மற்றும் காலநிலைத் திறன்மிகு உட்கட்டமைப்புகளை ஆதரிக்கக்கூடிய வகையில் ஆற்றல் திறன்மிகு கட்டடங்கள் மற்றும் நகர்ப்புறத் திட்டமிடல் தரத்தினை மேம்படுத்துதல்.

9. காலநிலை மாற்றம் சார்ந்த ஆய்வுச் சூழலை அதிகரிக்க கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைவுகளை மேற்கொண்டு பசுமைத் தொழில்நுட்பங்களை உருவாக்குதல்.

10. காலநிலை அபாய மதிப்பீடுகள், காலநிலை தாக்க மாதிரியாக்கம் மற்றும் தரவு சார்ந்த கொள்கைகளை உருவாக்க ஒருங்கிணைந்த காலநிலைத் தகவல் களஞ்சியத்தை உருவாக்குதல்.

11. தமிழ்நாட்டின் நிகரப் பூஜ்ய எதிர்காலம் மற்றும் மீள்திறன் உருவாக்கத்திற்காக அரசுத்துறைகள், கல்வி நிறுவனங்கள், தனியார் துறையினர், பொது சமூகம் மற்றும் பன்னாட்டு முகமைகளுடன் ஒருங்கிணைவுகளை ஏற்படுத்துதல்.

## 2.4. துறையின் பணிகள்:

- சுற்றுச்சூழல் தொடர்பான கொள்கைகளை தமிழ்நாடு அரசிற்காக வடிவமைத்தல்.
- பல்வேறு சுற்றுச்சூழல் தொடர்புடைய துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பினை ஏற்படுத்த மாநிலத்திற்கான சுற்றுச்சூழல் கொள்கை திட்டங்களை உருவாக்குதல்.
- தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான முகமைகளுடன் இணைந்து, அவற்றின்

பங்களிப்புடன் அறிவு மற்றும் அனுபவங்களை ஒருங்கிணைத்தல்.

- காலநிலை மாற்றத்திற்கேற்ப தகவமைத்துக் கொள்ளவும், அதன் பாதிப்புகளை குறைப்பதற்கும் தேவையான கட்டமைப்புகளை பல்வேறு பங்குதாரர்களுடன் (தொடர்புடைய துறைகள், நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சியாளர்கள், வல்லுநர்கள், அரசு சாரா நிறுவனங்கள், சூழல் மன்றங்கள்) இணைந்து உருவாக்குதல்.

- கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை ஆகியவற்றின் சட்டப்பூர்வ விதிகளை நடைமுறைப்படுத்துதல்.

மேலும் இத்துறை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் மேற்கொள்ளப்படாத, ஏனைய சூழல்

பாதுகாப்பு மற்றும் மேலாண்மைப் பணிகளை மேற்கொள்கிறது. காலநிலை மாற்றம் தொடர்பான அனைத்துத் திட்டங்களையும், தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தும் துறையாகவும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை செயல்படுகிறது. மேலும், தேசிய சூழல் மன்றங்கள் வாயிலாக கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் முக்கிய தொடர்பு நிறுவனமாகவும் இத்துறை செயல்படுகிறது.

## 3. சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான சட்டப்பூர்வ வழிமுறைகள்

ஒரு நிலைத்த பொருளாதாரத்திற்கான வழிகாட்டு நெறிமுறை என்பது எதிர்காலத்தின் தேவைகளை சமரசம் செய்துகொள்ளாமல் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கான வளர்ச்சிப் பாதையை உருவாக்குதலாகும். நிலைத்த வளர்ச்சி என்பது சுற்றுச்சூழல், சமூக மற்றும்

பொருளாதார அமைப்புகளிடையே உள்ள சார்புடைமையை அங்கீகரிப்பது மட்டுமின்றி மக்களுக்கு அதிகாரமளித்து சமத்துவம் மற்றும் நீதியை முன்னிறுத்தும் வகையில் உருவாக்கப்பட வேண்டும்.

**அ. அரசியலமைப்பில் வழிவகை**

உலகில் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை முதன் முதலாக அரசியலமைப்புச் சட்டத்தில் அங்கீகரித்த அரசுகளில் இந்திய அரசும் ஒன்றாகும். "சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதோடு, நாட்டின் காடுகள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாக்கவும் அரசு முயற்சிக்கும்" என அரசியலமைப்பின் 42–வது திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரிவு 48 (A)–ல் உள்ள அரசு வழிகாட்டு நெறிமுறைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதுபோல், "இயற்கைச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவது, இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனின்

கடமையாகும்" என அடிப்படைக் கடமைகளுக்கான பிரிவு 51 (A)(g)–ல் தெரிவிக்கிறது.

ஒரு மக்கள் நல அரசை உருவாக்குவதற்கான செயல் திட்டத்தை வரையறுத்துள்ள இந்திய அரசியலமைப்பு, மக்களின் நல்வாழ்வு மற்றும் சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் நாட்டின் இயற்கை வளங்களை சரியான அளவில் பயன்படுத்துவது அவசியமாகும் என்று தெரிவிக்கிறது. இதுவே, 'நிலையான வளர்ச்சி' என்ற கூற்றின் சாராம்சமாகும். இயற்கை வளங்கள் மற்றும் வாழ்வாதார அமைப்புகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாப்புடன் வளர்ச்சிப் பணிக்கான சூழலை ஏற்படுத்த வேண்டும்.

**ஆ. சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம்:** சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்புடைய அம்சங்களைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழலை மேம்படுத்தும்

நோக்கத்துடனும் 1986–ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

**இ. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006:** இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் புதிய திட்டங்கள், புதிய செயல்பாடுகள், தற்போதுள்ள செயல்பாடுகளின் விரிவாக்கம் அல்லது நவீனமயமாக்கம் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் போது அவற்றினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு அத்திட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் மற்றும் தடைகளை விதிக்கும் நோக்கத்துடன், ஒன்றிய அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**ஈ. கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை:** மீனவர் சமுதாயம் மற்றும் பிற உள்ளூர் சமுதாயங்களுக்கான வாழ்வாதாரப் பாதுகாப்பினை உறுதிசெய்யும் நோக்கில், ஒன்றிய அரசின், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற

அமைச்சகத்தினால், சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986ன் கீழ், முதலாவது கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 1991–இல் நடைமுறைக்கு வந்தது. இதன் தொடர்ச்சியாக, அறிவியல் அடிப்படையிலான, கொள்கைகள் இயற்கை இடர்கள் மற்றும் கடல்மட்டம் உயர்வதையும் கருத்தில் கொண்டு நிலையான வளர்ச்சியை அடைவதற்கான 2011 மற்றும் 2019–ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன.

## 4. துறையின் முன்னெடுப்புகள்

### 4.1. தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்

தமிழ்நாட்டில் காலநிலை மீள்திறனுடன் கூடிய வளர்ச்சி, சூழல் அமைப்புகளின் மீட்டெடுப்பு மற்றும் நிலையான வள மேலாண்மை போன்ற செயல்பாடுகளுக்கு நிறுவன கட்டமைப்புகளை வழங்க

ஒரு முன்னோடி அமைப்பாக தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் நீண்ட கால நிலைத்தன்மைக்கான குறிக்கோள்களை அடைவதற்காக அரசுத் துறைகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்வேறு பங்குதாரர்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களின் முயற்சிகளை ஒருங்கிணைக்கக்கூடிய அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனம் அரசு கூடுதல் தலைமைச் செயலர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அவர்களின் தலைமையில், கீழ்க்காண் உயர் அலுவலர்களை இயக்குநர்களாகக் கொண்ட ஒரு வாரியத்தால் நிருவகிக்கப்படுகிறது. அவர்கள்;

- அரசு செயலாளர், வேளாண்மை (ம) உழவர் நலத்துறை

- அரசு கூடுதல் தலைமைச் செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை
- அரசு கூடுதல் தலைமைச் செயலர், நீர்வளத்துறை
- அரசு முதன்மைச் செயலர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை
- அரசு முதன்மைச் செயலர், எரிசக்தித்துறை
- அரசு முதன்மைச் செயலர், நிதித்துறை
- தமிழ்நாடு வனத்துறையின் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
- தலைவர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்
- தலைமைச் செயல் அதிகாரி, தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்

மேற்கூறிய காலநிலைச் சவால்களை எதிர்கொள்வதற்காக, கீழ்க்கண்ட நான்கு மகத்தான இயக்கங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ளது. அவை:

1. பசுமை தமிழ்நாடு இயக்கம்
2. தமிழ்நாடு ஈர நில இயக்கம்

3. தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்
4. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்

தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம், இந்த நான்கு இயக்கங்களின் முன்னெடுப்புகளை சிறப்பான முறையில் செயல்படுத்த ஐந்து உத்திமிகு துறைகளை வடிவமைத்துள்ளது. அவை,

1. காலநிலை தடுப்பு, தழுவல் மற்றும் கடலோர மீள்திறன்.
2. பல்லுயிர்ப் பாதுகாப்பு, சூழல் அமைப்பு மற்றும் கடலோர மறுசீரமைப்பு
3. சுழற்சிப் பொருளாதாரம் மற்றும் நிலையான வள மேலாண்மை
4. மாசு கட்டுப்பாடு, நகர்ப்புற வெப்ப தணிப்பு மற்றும் சுற்றுச்சூழல் நலம்
5. திறன் வளர்ப்பு மற்றும் சமூகங்களின் பங்கேற்பு.

### 4.2. பசுமை தமிழ்நாடு இயக்கம்

தமிழ்நாடு அரசு, காடு மற்றும் மரங்களின் பரப்பளவை நம் மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 33 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்ற இலக்குடன் பசுமை தமிழ்நாடு இயக்கத்தைத் தொடங்கியது. இந்த இயக்கத்தின் கீழ், தமிழ்நாடு முழுவதும் தற்போது வரை, 10.86 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலும், அனைத்து மாவட்டங்களிலும் பொது மக்களின் பயன்பாட்டிற்காக 75 மரகதப் பூஞ்சோலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்திய மாநிலங்களின் வன அறிக்கை 2023–ன் படி, தமிழ்நாட்டின் நிலப்பரப்பில் 26,450.22 சதுர கி.மீ. பரப்பளவு வனப்பகுதியாக உள்ளது. இது நம் மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 20.34 சதவிகிதமாகும். இந்திய வன ஆய்வு 2023 அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் வன மற்றும் மரப் பரப்பின் கீழ் 31820.94 சதுர கி.மீ பரப்பளவு

உள்ளது, இது நம் மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 24.47 சதவிகிதமாகும்.

### 4.3. தமிழ்நாடு ஈர நில இயக்கம்

தமிழ்நாட்டில் ஈர நிலங்களை சூழல் அமைப்பின் அடிப்படையில் மீட்டெடுக்கும் நோக்கத்துடன், 100 ஈர நிலங்களை ஐந்தாண்டுகளில் கண்டறிந்து வரைபடம் தயாரித்து, வாழ்வாதாரத்தை மையமாகக் கொண்டு சுற்றுச்சூழல் சமநிலையை ஈர நிலங்களில் மீட்டெடுக்கும் நோக்குடன் தமிழ்நாடு ஈரநில இயக்கம் தொடங்கப்பட்டது. இவ்வியக்கத்தின் மூலம் நம் மாநிலத்திலுள்ள ஈர நிலங்களுக்கு உலகத்தர அங்கீகாரம் பெற மேற்கொண்ட தொடர் முயற்சியால் சமீபமாக சேர்க்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சக்கரக்கோட்டை மற்றும் தீர்த்தங்கல் பறவைகள் சரணாலயம் உட்பட 20 ராம்சர் தளங்களுடன் இந்தியாவிலேயே அதிக ராம்சர்

தளங்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

### 4.4. தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்

தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம் கடல்சார் வளங்களின் நிலைத்த பயன்பாட்டையும், காலநிலை மீள்திறனை பல்முனை அணுகுமுறை கொண்டு மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், பல்வேறு துறைகளின் ஒருங்கிணைவோடு மீள்திறன் மற்றும் நீல சுழற்சிப் பொருளாதாரத்தை நோக்கிய பாதையில், பசுமையான எதிர்காலத்திற்கான உள்ளூர் வாழ்வாதார மேம்பாட்டையும் திறன் வளர்ப்பையும் இத்திட்டம் கருத்தில் கொண்டுள்ளது. இக்குறிக்கோள்களை அடைய முக்கியத்துவமிக்க கருப்பொருளைக் கொண்ட ஐந்து முதலீட்டுப் பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை, கடல்சார் உயிர்ப் பன்மய மேம்பாடு, கடலோரப் பாதுகாப்பு,

வாழ்வாதார மேம்பாடு, மாசுக் கட்டுப்பாடு மற்றும் திட்ட மேலாண்மை ஆகியன.

### 4.5. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை எதிர்த்துப் போராடுவதும், அவற்றின் பாதிப்புகளை தணிப்பதும் தமிழ்நாடு போன்ற கடலோர மாநிலத்தில் மிகவும் கவனம் செலுத்த வேண்டிய அம்சமாகும். 2021–2022–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் போது, காலநிலை மாற்றத்திற்கேற்ற தகவமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதற்காக, தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் மொத்தம் ரூ.500 கோடி செலவில் ஐந்தாண்டிற்கு செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டு அரசாணை (நிலை) எண் 54, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (சு.சூ.2) துறை, நாள்.23.03.2022–ன்படி தொடங்கப்பட்டது. இந்திய மாநிலங்களைப்

பொறுத்தவரை, தமிழ்நாட்டில் தான் முதல் முறையாக இது போன்ற திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு, மாநில மக்களுக்கு நிலையான மற்றும் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற எதிர்காலத்தை உருவாக்க உறுதி பூண்டுள்ளது.

இவ்வியக்கம் காலநிலை மாற்ற தடுப்பு, தழுவல் மற்றும் நிலையான வளர்ச்சியின் இணை பலன்களை அதிகப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த, தரவுகளை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களைச் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது காலநிலை தாக்கங்கள் குறித்த துறை ரீதியான புரிதலை மேம்படுத்தவும், உமிழ்வு குறைப்பு, வள திரட்டல் மற்றும் நிலையான உள்கட்டமைப்பு மூலம் மேம்பட்ட மீள்தன்மை உள்ளிட்ட ஒருங்கிணைந்த பதில்களை வளர்க்கவும் முயல்கிறது.

மாநிலத்தின் காலநிலை மாற்றப் பிரச்சனைகளை மேற்பார்வையிடவும், ஒருங்கிணைக்கவும், சுற்றுச்

சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் அவர்கள் தலைமையில் இந்த இயக்கம் செயல்பட்டு வருகிறது.

### 4.5.1 தமிழ்நாடு காலநிலை மாற்ற ஆட்சிமன்றக் குழு

தமிழ்நாடு அரசு, அரசாணை எண்: 242, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்(சு.சூ2) துறை, நாள் 21.10.2022 –ன் படி தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான ஆட்சி மன்றக் குழுவினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் புகழ்பெற்ற ஆராய்ச்சியாளர்கள், பன்னாட்டு அமைப்புகளைச் சார்ந்த வல்லுனர்கள், தலைமைச் செயலாளர், அரசுச் செயலாளர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் பல்துறைப் பங்குதாரர்களை உறுப்பினர்களாகக் கொண்டு பின்வரும் குறிக்கோள்களுடன் உருவாக்கப் பட்டுள்ளது :–

i. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்திற்கான கொள்கை வழிகாட்டுதல்களை வழங்குதல்

ii. காலநிலை தழுவல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்கான அறிவுரைகளை வழங்குதல்

iii. காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு மாநில செயல் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல்

iv. மாநில காலநிலை மாற்ற இயக்கம் மற்றும் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கங்களுக்கு பல்வேறு காலநிலை முன்னெடுப்புகளைச் செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல்.

### 4.5.2. தமிழ்நாடு காலநிலை மாற்ற ஆட்சிமன்றக் குழுவின் அமைப்பு

**தமிழ்நாடு காலநிலை மாற்ற ஆட்சிமன்றக்** குழுவானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு மொத்தம் 26 உறுப்பினர்களை உள்ளடக்கியதாகும். பல்வேறு துறை அமைச்சர்கள், துறை சார்ந்த அரசு செயலர்கள் தேசிய

மற்றும் சர்வதேச நிறுவனங்களின் சிறந்த வல்லுனர்கள் இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

முதலாவது மற்றும் இரண்டாவது தமிழ்நாடு காலநிலை மாற்ற **ஆட்சிமன்றக்** குழு கூட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 03.03.2023 மற்றும் 05.12.2024 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

**4.5.3. தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 3.0**

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தால் சுமார் 2000-க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களுடன் நடத்தப்பட்ட தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 3.0, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த உச்சி மாநாடு பல்வேறு பங்குதாரர்கள். தோழமை அமைப்புகள், காலநிலை ஆர்வலர்கள், ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்கள் இடையே உரையாடல்களைப்

பரிமாறிக்கொள்வதற்கும், ஒருங்கிணைவுகளை ஏற்படுத்திக்கொள்ளவும் தமிழ்நாட்டில் காலநிலை மீள்திறனை முன்னிறுத்துவதற்கான வழிகளை உருவாக்கவும் ஒரு தளமாக விளங்கியது.

இம்மாநாட்டின் போது கீழ்க்கண்ட ஆவணங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டன :

1. இராஜபாளையம் நகருக்கான கரிம நீக்க வழித்தடங்களுக்கான செயல்திட்டம்.
2. காலநிலைக்கான வாழ்வியல் முறைகள் ஆவணம்
3. நீங்களும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியமும் 2025 புத்தகம்.
4. மீன்வலை முன்னெடுப்பு புத்தகம்
5. தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் காலநிலை தழுவலுக்கான சிறந்த நடைமுறைகளின் தொகுப்பு
6. ஈரநிலங்கள் குறித்த ஆவணம் மற்றும் நலம் குறித்த அட்டை
7. ஈரநிலங்கள் தொகுப்பு

8. மேலும் இணையவழி கழிவு பரிமாற்ற பணியகம்
9. தொழிற்சாலைகளுக்கான தன்னார்வ பசுமை தர வரிசை. மேலும், பல்வேறு பிரிவுகளின் கீழ், விருதாளர்களுக்கு சுற்றுச்சூழல் விருதுகள் வழங்கப்பட்டன.

### 4.5.4. நாள்தோறும் நல்வாழ்வு திட்டம்

நாள்தோறும் நல்வாழ்வு திட்டம், மனிதர்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் நலம் ஆகியவற்றிற்கிடையே உள்ள தொடர்பினை அங்கீகரித்து உருவாக்கப்பட்ட திட்டமாகும். தமிழ்நாட்டில் அதிகரித்துவரும் நகரமயமாக்கல், வேளாண் நடைமுறைகள் மற்றும் பல்லுயிரியம் ஆகியவை இணைந்து தனித்துவமிக்க சுகாதார சவால்களை உருவாக்கியுள்ளன. எனவே, இதனை எதிர்கொள்ள ஒருங்கிணைந்த உத்தி தேவைப்படுகிறது. இந்த முன்னெடுப்பு மாநிலம்

முழுவதும் பல்வேறு துறைகளுக்கிடையே ஒருங்கிணைவுகளை வளர்த்தெடுத்து, சமூகங்களிடையே சுகாதார ரீதியில் நேர்மறை விளைவுகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன:

1. அரசு முகமைகள், சுகாதார அலுவலர்கள், அரசு சாரா நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூகங்கள் ஆகியவற்றுக்கிடையே ஒருங்கிணைவுகளை உருவாக்க பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல்.
2. மனிதர்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் நலத்திற்கு இடையே உள்ள இணைப்புகளை கண்டறிய ஆய்வுத் திட்டங்கள் மற்றும் ஆய்வகங்கள் மூலம் தரவுகளைப் பகிர உறுதுணையாக இருத்தல்.

### 4.5.5. அரசுக் கட்டடங்களை மறுசீரமைத்தல்

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ராஜீவ் காந்தி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய இரண்டு அரசு மருத்துவமனைகளில் காலநிலை மீள்திறன் மற்றும் நிலைத்த நடைமுறைகளை உள்ளிணைத்துக் கொள்ள விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

### 4.5.6. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நீர்நிலைப் பாதுகாவலர் விருது

நம் வாழ்வு நிலையாக இருப்பதற்கு ஆதாரமாக விளங்குவது நீர். ஆனால், அதிகரித்து வரும் நகரமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கல் போன்ற செயல்பாடுகள் நீர் வளங்களின் மீது அதீத அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. இவை காலநிலை மாற்றத்தின் விளைவுகளுடன் இணைந்து ஒட்டு மொத்தமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நீர்ப் பற்றாக்குறைக்கு

வழிவகுக்கின்றது. சூழல் அமைப்புகளின் சேவைகளை பாதுகாக்கவும் அதிகரிக்கவும், இத்தகைய மதிப்புமிக்க வளங்களை சமூகங்கள் அறிவியல் செயல்முறைகளுடன் சீருடன் மேலாண்மை புரிவது அவசியமாகிறது.

எனவே, நம் மாநிலத்தின் நீர் நிலைகளைப் பாதுகாக்க தம் வாழ்வை அர்ப்பணித்துள்ள குடிமக்கள்/ நிறுவனங்கள்/ பொது சமூக அமைப்புகள் ஆகியவற்றை கவுரவிக்கும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நீர்நிலைப் பாதுகாவலர் விருது வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் தமிழ்நாடு விருதுகள் இணையதளம் மூலம் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பெறப்படுகின்றன. இவ்விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சியர்கள், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் தலைமைத் திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாநில அளவிலான

தேர்வுக் குழுவிடம் இணையவழியில் சமர்ப்பிப்பர். தேர்ந்தெடுக்கப்பட்ட விருதாளர்களுக்கு, விருதும், ரூ.1.00 லட்சம் ரொக்கப்பரிசும் வழங்கி கவுரவிக்கப்படும்.

### 4.5.7 தமிழ்நாடு புதுமைத் தொழில் முனைவோர் திட்டம் (Sustain TN)

காலநிலை மாற்றத்தால் நம் புவிக்கும், மக்களுக்கும் ஏற்படுகின்ற அச்சுறுத்தல்கள் அதன் விளைவுகளைத் தடுப்பதற்கும், மீள்திறனை உருவாக்குவதற்குமான தேவைகளை உருவாக்கியுள்ளது. எனவே, தமிழ்நாடு புதுமைத் தொழில் முனைவோர் திட்டமானது, தமிழ்நாட்டின் நிலையான மற்றும் காலநிலை – மீள்திறன் மிக்க எதிர்காலத்திற்கான சூழலுக்குகந்த புதுமையான தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள், பொதுமக்கள், குழுக்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டு நம் மாநிலம்

எதிர்கொண்டுவரும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலைச் சவால்களுக்கு புதுமையான தீர்வுகளை வழங்கும் தொழில்முனைவுகளை உருவாக்க உதவிகள் பெறலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் முனைவுகளுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் சந்தை வாய்ப்புகள் Startup–TN நிறுவனத்தால் வழங்கப்படும்.

### 4.5.8. நகரங்களுக்கான பசுமைக் குறியீடுகள்

அதிகரித்து வரும் நகரமயமாக்கல் நம் மாநிலத்தின் வள நுகர்வையும் உமிழ்வுகளையும் அதிகரித்து வருகிறது. மேலும் காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடுகளையும் அதிகரிக்கிறது. ஆதாரப்பூர்வமான மற்றும் உக்திசார் வழிமுறைகள் இல்லையெனில் காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் சமூக–பொருளாதார வளர்ச்சியை சீர்குலைத்து ஏற்றத் தாழ்வினை அதிகரித்துவிடும். எனவே, தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும், நகராட்சிகளிலும் காலநிலை சார்ந்த நிர்வாகங்களை

நிருவுவது அவசியமாகிறது. மாவட்டங்களின் சுற்றுச்சூழல் செயல்பாட்டை கண்காணித்து தரவரிசைப்படுத்த கண்காணிப்பு வலைதளம் உருவாக்கும் பணி இத்திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகிறது.

### 4.5.9. பசுமைக் கரங்கள் திட்டம் (புதியதோர் உலகம் செய்வோம்)

பசுமைக் கரங்கள் திட்டமானது தமிழ்நாட்டின் இயற்கைச் சுற்றுச்சூழலைப் மீட்டெடுத்துப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் இளம் தன்னார்வலர்களின் முயற்சிகள் ஒருங்கிணைக்கப்பட்டு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதோடு மட்டும் நின்றுவிடாமல் காலநிலை மாற்றத்திற்கெதிரான கொள்கை மாற்றங்களை நோக்கி நகரவும் இத்திட்டம் வழிவகுக்கும். இதற்கென தனியே "புதியதோர் உலகம் செய்வோம்" என்ற இணையதளம்

யுனிசெஃப் – யுவா என்ற நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து உருவாக்கப்படுகிறது.

### 4.5.10. காலநிலைக்கேற்ற வாழ்வியல் முறைகள்

தமிழ்நாடு அரசு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தினால் முன்னின்று செயல்படுத்தப்படும் இத்திட்டமானது சூழல் அமைப்புகளையும் நிலைத்தன்மையையும் பாதுகாக்கும் அதேவேளையில், நம் மாநிலத்தை காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கெதிராக வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் அடிப்படை நோக்கமானது கட்டடங்களுக்கான காலநிலைக்கேற்ற வாழ்வியல் முறை சான்றிதழ் வழங்கும் திட்டமொன்றை உருவாக்கி, விரிவான கட்டமைப்புகள் மூலம் அக்கட்டடங்களில் பின்பற்றப்படும் நிலையான நடைமுறைகளை அளவிடுவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. எனவே, இதற்கான வழிமுறைகள்

உருவாக்கப்பட்டு, சென்னையில் கடந்த 2025, பிப்ரவரி 4 & 5 நாட்களில் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 3.0 –வின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பசுமைக் கட்டடங்களைத் தரவரிசைப்படுத்தவும் சான்றளிக்கவும் அதற்கென வலைதளமொன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

**4.5.11. மாவட்டங்களை கார்பன் சமநிலை மையங்களாக மாற்றுதல்**

விரைந்து அதிகரிக்கும் நகரமயமாக்கலினால், பெரும்பாலான மக்கள் வாய்ப்புகளைத் தேடி நகரங்களை நோக்கி இடம்பெயர்கின்றனர், இதனால், நகரங்கள் காலநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய அபாயங்களுக்கும், பாதிப்புகளுக்கும் உள்ளாகின்றன. நகரங்கள் காலநிலை மாற்றத்தின் நுண் பாதிப்புகளை உணரக் கூடிய பகுதிகளாகவும், 60% விழுக்காட்டிற்கும் அதிகமான பசுங்குடில் வாயுக்கள் உமிழ்வுக்குக்

காரணமாகவும் அமைகிறது. எனவே, நகரங்களே கார்பன் சமநிலை இலக்கை நோக்கி மாநிலத்தை வழி நடத்துவதில் பெரும் பங்காற்றவிருக்கின்றன. நகராட்சிகள், தொழில்கள், குடிமக்கள் மற்றும் வல்லுநர்களை ஒன்றிணைத்து பசுங்குடில் வாயுக்களின் உமிழ்வுகளைக் குறைப்பதற்கான தீர்வுகளை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும்.

காலநிலை மாற்றத்திற்கெதிரான நடவடிக்கைகளில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக உள்ளது. இதன்படி, தமிழ்நாடு அரசு இராஜபாளையம், இராமேஸ்வரம், நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களை "கார்பன் சமநிலை மையங்களாக" மாற்ற தேர்ந்தெடுத்துள்ளது. நீலகிரி, கோயம்புத்தூர் மற்றும் இராஜபாளையம் ஆகிய இடங்களில் கார்பன் சமநிலை பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து மேற்கூறிய நான்கு நகரங்களிலும் கார்பன் சமநிலையை எட்டும் பொருட்டு, உமிழ்வுகளுக்கான

முக்கிய காரணிகளைக் கண்டறிவதற்கான அடிப்படை கள மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் பயனாக, இராஜபாளையம் நகருக்கான கரிமநீக்க வழித்தடங்களுக்கான செயல்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த பிப்ரவரி 2025 4 மற்றும் 5 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 3.0-வின் போது வெளியிடப்பட்டது.

### 4.5.12. நிலையான வாழ்விடம்

நம் வாழ்விடத்தின் சுற்றுச்சூழல் நலனை இனியும் புறக்கணிக்க முடியாது என்பதையும் நமது சுற்றுச்சூழலில் ஏற்படும் பாதிப்பைக் குறைக்க, பசுமைக் கட்டட நடைமுறைகளால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் உணர வேண்டிய காலம் தற்போது உருவாகியுள்ளது. அரசு மற்றும் தனியார் கட்டடங்கள், தனி வீடுகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள்

ஆகியவற்றில் ஆற்றல் சேமிப்பை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஆற்றல் உற்பத்தி மற்றும் நுகர்வினால் வெளியாகும் பசுங்குடி வாயுக்களின் உமிழ்வைக் குறைத்து காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் மட்டுப்படுத்த வேண்டும். இதனடிப்படையில், எரிசக்தியைச் சேமிக்கும் விளக்குகள் மற்றும் மின்சாரத்தின் அவசியத்தைப் பற்றி குடியிருப்பாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல், கட்டுமான பணி மேற்கொள்பவர்களுக்கு குறைந்த செலவில் காலநிலைக்கேற்ற கட்டடக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்காக கருத்தரங்குகள் மூலமாக பயிற்சி அளித்தல், ஆற்றல் திறன் கொண்ட வீடு கட்டும் திட்டங்களை உருவாக்குவதற்கு நிலையான வழிகாட்டு நடைமுறையை உருவாக்குதல் மற்றும் பசுமைக் கட்டட மதிப்பீட்டு முறையினை ஒரு முன்னோடித்

திட்டமாக உருவாக்குதல் ஆகியவை புதிதாக மேற்கொள்ளப்பட வேண்டிய பெரும்பணிகளாகும்.

கட்டுமானப் பணி மேற்கொள்பவர்கள் மற்றும் குடியிருப்புவாசிகளுடனான முறைப்படுத்தப்பட்ட தொடர்பானது போதுமான விழிப்புணர்வு மற்றும் நடத்தை மாற்றம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும். மேலும், இது சரியான கட்டுமானப் பொருட்கள் மற்றும் நுட்பங்கள், திறன்மிகு குளிரூட்ட அமைப்புகள் மற்றும் ஆற்றல் சீர்மிகு தொழில் நுட்பங்கள் குறித்த தீர்வுகளைக் குடியிருப்போர்களுக்கான வழங்குவதை ஊக்குவிக்கும்.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை, பெங்களூரைச் சார்ந்த இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹ்யூமன் செட்டில்மெண்ட்ஸ் நிறுவனத்துடன் இணைந்து கட்டுமானப் பணி மேற்கொள்பவர்கள் மற்றும் குடியிருப்போர்களுக்கான "ஆற்றல் திறன்மிகு

வாழ்விடங்கள்" எனும் தலைப்பில் ஆவடி, சென்னை, கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, ஓசூர், காஞ்சிபுரம், கரூர், கும்பகோணம், மதுரை, நாகர்கோவில், சேலம், சிவகாசி, தாம்பரம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருப்பூர், திருநெல்வேலி, திருச்சி மற்றும் வேலூர் ஆகிய இருபத்தோரு மாநகராட்சிகளில் கருத்தரங்கங்களை நடத்தியுள்ளது. இவ்வாறு சிறப்பாகத் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை மூலம் கட்டுமானத் தொழில் மட்டும் குடியிருப்போர் நலச் சங்கங்களைச் சார்ந்த சுமார் 3360 நபர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

### 4.5.13. கார்பன் செறிவூட்டல் திட்டம்

நிலத்தில் கார்பன் சேமிப்பு என்பது ஒரு முக்கியமான சுற்றுச்சூழல் சேவையாகும். இது மண்ணின் ஊட்டச்சத்துக்களை அதிகரிப்பதிலும், மண்ணின் நீர் தாங்கும் திறனை மேம்படுத்துவது மற்றும் கணிசமான அளவு கார்பனை சேமித்து

தாவரங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு முன்னோடித் திட்டமாக, பெருநகர சென்னை மாநகராட்சியினால் பெருங்குடியில் அமைக்கப்பட்டுள்ள உயிர்க்கழிவு அகழ்ந்தெடுக்கும் அமைப்பிலிருந்து பெறப்பட்ட மண்ணைக் கொண்டு மதுரப்பாக்கம் காப்புக் காடுகளில் சுமார் 6000 நாட்டு மரக் கன்றுகள் கடந்த அக்டோபர் 2023-ம் ஆண்டு நடப்பட்டன. 1:1 என்ற விகிதாசாரத்தில் உயிர்க்கழிவு செய்யப்பட்ட மண்ணில் வளர்க்கப்பட்ட மரக்கன்றுகள் சிறப்பான வளர்ச்சியைக் கொண்டிருந்தன. இத்திட்டத்தின் தாக்கங்கள் குறித்த விரிவான அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்தின் வெளிப்பாடுகள் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மையத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றன.

### 4.5.14. இயற்கை அடிப்படையிலான தீர்வுகள் மூலம் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப கடலோர வாழ்விடங்களை மறுசீரமைப்பு செய்தல்:

சவுக்கு, பனை, முந்திரி மற்றும் பிற சிறப்பு இன மரக்கன்றுகள், அலையாத்தி மரக்கன்றுகள் ஆகியவற்றை கடலோர மாவட்டங்களில் எங்கெல்லாம் அவை வளரக்கூடிய சூழல் அமைப்புகள் உள்ளனவோ, அங்கெல்லாம் அவற்றை நடவு செய்வதன் மூலமும், கடற்புற்கள் மற்றும் பவளப்பாறைகளைப் பாதுகாத்து அவற்றின் வளர்ச்சியை மேம்படுத்தல், நிலையான கடலோர மேலாண்மைக்கான வரைபடங்களை உருவாக்குதல் ஆகியன இத்துறையுடன் ஒருங்கிணைந்த பணிகளாகும்.

தற்போது வரை, தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் மொத்தம் 195 ஹெக்டேர் பரப்பளவில் அலையாத்தி செடிகளும், 375 ஹெக்டேர் பரப்பளவில் அலையாத்தி சூழல் அமைப்பு மீட்புப் பணிகளும் கடந்த 2023–2024–ம் நிதியாண்டில்

மேற்கொள்ளப்பட்டன. கூடுதலாக, கடந்த 2024–2025–ம் ஆண்டில் 90 ஹெக்டேர் பரப்பளவில் சவுக்கு கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4.5.15. காலநிலை மாற்ற பாதிப்பை மீட்டெடுக்கும் பசுமை புராதனச் சின்னங்கள்

நாகப்பட்டினம் அன்னை வேளாங்கண்ணி ஆலயம் மற்றும் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம், ஆகிய இரண்டு வழிபாட்டுத் தலங்கள், காலநிலை மாற்ற ஏற்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்த முன்னோடித் தலங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்தலங்களில் சூரிய சக்தி விளக்குகள், நீர் மேலாண்மை, வெப்ப மேலாண்மை, பசுமைப் பரப்புகளை உருவாக்குதல், கோயில் குளங்களின் சூழல் மறுசீரமைப்பு, நெகிழி மற்றும் நுண்நெகிழி அகற்றுவதற்கான செயல்பாடுகள் போன்ற காலநிலை மாற்றப் பாதுகாப்பு உட்கட்டமைப்புகளை

உருவாக்குவதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் இப்பணிகளை மேற்கொள்ள இந்து சமய அறநிலையத்துறையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதேபோல், அன்னை வேளாங்கன்னி பேராலயத்திற்கான விரிவான திட்ட அறிக்கை நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரிடமும், அன்னை வேளாங்கன்னி ஆலய தலைவரிடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 4.5.16. காலநிலைக் கல்வியறிவு

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் மாணவர்களுக்கு காலநிலை அறிவியல் குறித்து தெளிவுபடுத்துவதன் மூலம் காலநிலை மாற்றத்தின் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் ஏற்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகள், சிறந்த

செயல்முறைகள் மற்றும் காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்கான நடைமுறைத் தீர்வுகளை ஊடக மற்றும் இலக்கமுறை தகவல் தொடர்புத் தளங்கள் மூலம் கண்டறிதல் போன்றவற்றிலும் இவ்வியக்கம் கவனம் செலுத்தி வருகிறது. மாணவர்கள் காலநிலை மாற்ற விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள், குழு விவாதங்கள், எண்ணியல் பதாகை தயாரித்தல், தெருக்கூத்துகள், நாடகங்கள், வலையொளிகள் பொதுவெளிப் பிரச்சாரங்கள் போன்றவற்றில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

2023–2025–ம் ஆண்டு வரை காலநிலைக் கல்வியறிவு பகுதியின் கீழ் பின்வரும் செயல்கள் மேற்கொள்ளப்பட்டன. அவை:

- தமிழ்நாட்டிலுள்ள 500 அரசுப் பள்ளிகளுக்கு மாணவர்களுக்காக விளையாட்டு சாதனங்கள் மூலம் காலநிலை குறித்த கற்றல் முறைகள் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

- நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கான காலநிலைக் கல்வியறிவு குறித்த பாடத்தொகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- மக்களிடையே காலநிலைக் கல்வியறிவினை ஏற்படுத்தும் பொருட்டு, 120 சமூக வலைதள பதாகைகள், 60 குறுங்காணொலிகள் போன்றவை உருவாக்கப்பட்டுள்ளன.
- சேலம் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கத்தால் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சுற்றுச்சூழல்சார் பிரச்சினைகளுக்கு புதுமையான தீர்வுகளைக் காணும் விதமாக ஹேக்கத்தான் போட்டி நடத்தப்பட்டது.
- தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை சார்பில் காலநிலைக் கல்வியறிவு முன்னெடுப்பின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள 58,854 பள்ளிகளையும் காலநிலைச் செயல்பாடுகளில் ஈடுபடுத்தும்

நோக்குடன் விரிவான செயல்பாட்டு நாட்காட்டி உருவாக்கப்பட்டுள்ளது. இந்நாட்காட்டி மாணவர்களிடையே தொடர்ச்சியான செயல்பாடுகள், சுற்று ழல் கருத்துருக்கொண்ட நாட்களைக் கடைபிடித்தல் மற்றும் உறுதிமொழிகள் மூலம் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட கட்டமைப்பாகத் திகழ்கிறது.

- மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை வளர்த்தெடுக்க காலநிலை மாற்றம் மற்றும் நிலைத்தன்மை குறித்த தமிழ்நாடு முழுவதும் மாநிலம் தழுவிய வினாடி வினா போட்டி நடத்தப்பட்டது. தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் இரண்டு கட்டமாக நடத்தப்பட்ட இவ்வினாடி வினா போட்டியில், முதல்கட்ட போட்டிகள்

ஜனவரி 29, 2025-ல் தொடங்கியது. சுமார் 60,000 மாணவர்கள் பங்கேற்ற இப்போட்டியில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலிருந்து ஆறு அணிகள் இறுதிக்கட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்ற அணிகளுக்கு, பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டன. இந்தியாவில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பரப்புரைகளில் இதுவே மிகப்பெரிய சுற்றுச்சூழல் பரப்புரையாகும்.

- சுற்றுச்சூழல் பொறுப்புணர்வினையும், நிலையான வளர்ச்சி குறித்த விழிப்புணர்வினையும் மாணவர்களுக்கு ஏற்படுத்தும் வண்ணம், அனைத்து மாவட்டங்களிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கோடைகால மற்றும்

குளிர்கால இயற்கை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. சுமார் 11,400 மாணவர்கள் இம்முகாம்கள் மூலம் சூழலியல் மற்றும் சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் குறித்து கற்பிக்கப்பட்டுள்ளனர்.

- தமிழ்நாட்டிலுள்ள 21 கல்வி நிறுவனங்களில் காலநிலைக் கல்வியறிவு பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. அதில் பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சார்ந்த சுமார் 3,150 கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர். மேலும், திறன் வளர் பயிற்சிப் பட்டறைகள், இயற்கை உலா, சைக்கிள் பேரணிகள், பொது இடங்களில் தெரு நாடகங்கள் போன்றவை மூலம் காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சிகள் மூலம் சுமார்

12,000 நபர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**4.5.17. மாவட்ட அளவிலான காலநிலை மாற்ற இயக்கம்**

நாட்டிலேயே முதன்முறையாக, அடிப்படையளவில் காலநிலை மாற்றத்திற்கெதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்தும் நோக்கோடு, தமிழ்நாடு அரசு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகவும், மாவட்ட வன அலுவலர் அவர்களை மாவட்ட காலநிலை அலுவலராகவும் கொண்ட மாவட்ட காலநிலை மாற்ற இயக்கங்களை உருவாக்கியுள்ளது.

தமிழ்நாடு அரசு ரூ.3.80 கோடி ஒதுக்கியதன்மூலம், காலநிலை மாற்ற தடுப்பு மற்றும் தழுவல் நடவடிக்கைகளை மாவட்ட அளவிலான வளர்ச்சித் திட்டங்களில் ஒருங்கிணைக்கவும், நிறுவனத்திறனை மேம்படுத்தவும், காலநிலை மாற்ற

நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மாநில செயல்திட்டத்தைத் செயல்படுத்தவும், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் முன்னெடுப்புகளை செயல்படுத்தவும் மாவட்ட அளவில் அனைத்து துறைகளுடன் இணைந்து மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம் செயல்படும். கூடுதலாக, மாவட்ட அளவில் காலநிலை மாற்றத்திற்கேற்ப தகவமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாவட்ட அளவிலான பங்குதாரர்களுக்கான கருத்துப் பட்டறைகள் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கத்தின் உதவியுடன் நடத்தப்பட்டுள்ளன. இதுவரை அனைத்து மாவட்டங்களிலும் நம் மாநிலத்தில் தொலைநோக்குப் திட்டங்களான, குறைந்த கரிம உமிழ்வு மற்றும் காலநிலை மீள்திறன் மேம்பாடு ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கான இரண்டு திறன் வளர் பயிற்சிப்

பட்டறைகள் மற்றும் விழிப்புணர்வுப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன.

### 4.5.18. மாண்புமிகு தமிழ்நாடு முதல்வரின் பசுமைப் புத்தாய்வுத் திட்டம்

தமிழ்நாட்டில் காலநிலை மாற்றத்திற்கேற்ற தகவமைப்பு மற்றும் பாதிப்புகளை தணிப்பதற்காக எடுக்கப்படும் பல்வேறு புதிய முயற்சிகளில் சிறப்பாகச் செயல்படும் இளைஞர்களை ஈடுபடுத்துவது அவசியம் என அரசு உணர்ந்துள்ளது. இளைஞர்களின் கையில் எதிர்கால இந்தியா உள்ளது என்பதன் அடிப்படையில், தமிழ்நாடு அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பசுமைப் புத்தாய்வு திட்டம் மூலம் சுற்றுச்சூழல் குறித்த பல்வேறு பிரச்சனைகளை அணுகி தீர்வு காணும் வகையில், ஆர்வமுள்ள இளைஞர்களை அடையாளம் கண்டு வழிநடத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் பிரச்சனைகள் மற்றும் காலநிலை

மாற்றம் தொடர்பான பணிகளில் ஈடுபடுத்த முனைந்துள்ளது.

இளைய தலைமுறையினர் மற்றும் மாணவர்களை ஈர்ப்பதற்கான வழிமுறைகள் மூலம், காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கத்தை குறைக்கவும், இயற்கையைப் பாதுகாக்கவும் பசுமைக்கு வளம் சேர்க்கும் யோசனைகளை உருவாக்குவதும், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பாதிப்புகளை குறைப்பதும் இத்திட்டத்தின் இலக்காகும்.

மொத்தம் 40 பசுமைத் தோழர்கள் அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆற்றல் கல்வி நிறுவனம் (Institute of Energy Studies) மூலம் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களிலும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பசுமைப் புத்தாய்வு திட்டத்தில்

திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல், மேற்பார்வை மற்றும் கண்காணித்தல் ஆகிய அனைத்துப் பணிகளும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநரகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. இந்த பசுமைத் தோழர்கள் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கத்தின் காலநிலை மாற்றத்திற்கெதிரான ஏற்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளுக்கு உறுதுணையாகச் செயல்படுவர்.

இப்பசுமைத் தோழர்கள் மூலம் தற்போது வரை 1,284–ற்கும் மேற்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் (மீண்டும் மஞ்சப்பை, நெகிழி ஒழிப்பு, இயற்கைப் பாதுகாப்பு) நடத்தப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் சுமார் 4.60 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், க்ளைமேட் க்ரானிக்கல்ஸ் (Climate Chronicles) புத்தகத்தின் ஏழு பதிப்புகள், செய்திமடல்கள் மற்றும் விழிப்புணர்வுப் பிரசுரங்கள் உட்பட பல்வேறு

காலநிலைக் கல்வியறிவிற்கான வெளியீடுகள் மாவட்டங்களிலுள்ள அரசுத் துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. கூடுதலாக, தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், பசுமைத் தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு ஈரநில இயக்கம் ஆகிய மூன்று இயக்கங்களின் முன்னெடுப்புகளை மாவட்ட அளவில் செயல்படுத்த இப்பசுமைத் தோழர்கள் உறுதுணையாக உள்ளனர். இவர்களின் இப்பணி, மாவட்ட நிர்வாகங்களாலும், மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்களாலும் விருதுகள் வழங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### 4.5.19. பசுமை பள்ளிக்கூடத் திட்டம்

காலநிலை மாற்றம் என்பது ஒரு எதார்த்தம் என்பதால், இளைய தலைமுறையினர் மற்றும் சிறுவர்கள் அதனை ஏற்பதற்கும் அதன் பாதிப்புகளை தடுப்பதற்கும் தயாராக வேண்டியது அவசியமாகும். இப்பசுமைப் புரட்சியானது இளைய தலைமுறையில்

இருந்து உருவாக வேண்டும். மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், காலநிலை மீள்திறன் கொண்ட பள்ளி உட்கட்டமைப்புகளை உருவாக்கவும் இப்பசுமை பள்ளிக்கூடத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, தற்போது வரை 197 பள்ளிகள் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த பள்ளிகளில் சூரிய ஒளி விளக்குகள் மற்றும் சூரிய ஒளி பம்புகள் போன்றவற்றைப் பயன்படுத்தி எரிசக்தியை சேமித்தல், மழைநீர் சேமிப்பு, உரம் தயாரித்தல், காய்கறித் தோட்டம், மூலிகைத் தோட்டம் உருவாக்குதல் மற்றும் பழ மரங்கள் நடுதல், நீர் மேலாண்மை, கழிவுநீர் மறுசுழற்சி மற்றும் பிளாஸ்டிக் இல்லாத சூழலை உருவாக்குதல் போன்ற பல்வேறு பசுமையாக்க நடவடிக்கைகளை இப்பள்ளிகளில் மேற்கொள்ள ரூ.39.40 கோடி ரூபாய் (ஒவ்வொரு பள்ளிக்கும் தலா ரூ.20 இலட்சம்) வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை சிறப்புடன் செயல்படுத்தும் பொருட்டு, மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் பசுமைப் பள்ளிக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, நான்கு பசுமைப் பள்ளிகளில் மேற்கூறிய உட்கட்டமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு பசுமைப் பள்ளிகள் என சான்றளிக்கப்பட்டுள்ளது, மற்ற பள்ளிகளில் இத்திட்டத்தின் செயலாக்கம் நடைபெற்று வருகிறது, அப்பள்ளிகளுக்கு 2025–2026–ல் சான்றளிக்கப்படும்.

**5. கடலோர மண்டல மேலாண்மை**

தமிழ்நாடு 1076 கி.மீ. நீளமுள்ள, பரந்த கடற்பகுதியைக் கொண்டுள்ளது. இது இந்தியாவின் மொத்த கடலோரப் பகுதியில் 15 விழுக்காடு ஆகும். நம் மாநிலம் சதுப்புநிலங்கள், பவளப்பாறைகள், கடற்பாசிகள், கடற்புற்கள், உப்பு நிலங்கள், மணல் தேரிகள், மணல் குன்றுகள் போன்ற பல்வேறு

வகையான வளமிக்க கடலோர வாழ்விடங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

கடலோர மற்றும் கடல் பகுதிகளில் ஒருங்கிணைந்த மற்றும் நிலைத்த மேலாண்மையை ஊக்குவிக்க, பல்வேறு ஒழுங்காற்றுமுறைகளைப் பின்பற்றி. கடலோர செயல்முறைகள், கடற்கரை மேலாண்மை, கடலோர பாதிப்பு மற்றும் அபாயங்கள் தொடர்பான திறன்களை மேம்படுத்துதல் அவசியமாகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை, கடல் மற்றும் கடலோர சூழலமைப்புகளை நிலைத்த முறையில் பாதுகாக்கவும் மேலாண்மை செய்யவும் முக்கியத்துவமளிக்கும் நிலைத்தகு வளர்ச்சி இலக்கு 14: நீருக்கடியிலான வாழ்க்கை என்பதனை அடைய உறுதி பூண்டுள்ளது. அவை:

14.1 . கடலில் ஏற்படும் அனைத்து வகையான மாசுபாடுகளையும் தடுத்தல் மற்றும் குறிப்பிடத்தக்க அளவு குறைத்தல்.

14.2. கடல்சார்ந்த, கடலோர சமச்சீர் சூழலை குறிப்பிடத்தக்க பாதகமான விளைவுகளிலிருந்து பாதுகாப்பதற்காக நீடித்த மேலாண்மை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

14.3. அனைத்து நிலைகளிலும் மேம்பட்ட அறிவியல் வழிமுறைகள் மூலமாக கடல் அமிலமயமாவதால் உண்டாகும் தாக்கங்களைக் கண்டறிந்து அவற்றைக் குறைத்தல்

## 5.1. புவியியல் தகவல் அமைப்பு (Geographical Information System)

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் அவசரகால சுனாமி மறுசீரமைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையானது, ஒரு புவியியல் தகவல் அமைப்புப் பிரிவை 2011 ஆம் ஆண்டு உருவாக்கியுள்ளது. அவசர கால சுனாமி மறுசீரமைப்பு திட்டம்/ பேரிடர் அபாய குறைப்புத் திட்டத்தின் செயல்பாடுகளான தமிழகத்தின் கடலோரப்

பகுதிகளின் உயர் அலைக் கோட்டினை வரையறுத்தல், ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தயாரித்தல், கடலோர பாதிப்பு வரைபடங்கள் தயாரித்தல், உயர் அலை கோடுகளில் கல்தூண்கள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள், புவியியல் தகவல் அமைப்பு பிரிவு மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்படுகிற கடலோர ஒழுங்குமுறை மண்டல (CRZ) அறிவிப்பு 2011–ன்படி புவிசார் தகவல் பிரிவு (GIS Cell) கடலோர ஒழுங்குமுறை மண்டல மேலாண்மை திட்டத்தை (CZMP) நிலைத்தகு கடலோர மேலாண்மைக்கான தேசிய மையம் (NCSCM) மூலம் தயாரிக்கிறது மற்றும் உள்ளூர் அளவிலான கடலோரப் பகுதி மேலாண்மைத் திட்டத்தை (LLCZMP) தொலையுணர்வு மையம் (IRS) மூலம் தயாரிக்கிறது.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையானது, கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் ஒரு மாநில அமைப்பு ஆகும். கடலோர ஒழுங்குமுறை மண்டல பகுதிகளில் ஏற்படும் விதிமீறல்களைக் கண்காணிக்க, பசுமைப்படையுடன் (Green Squad) இணைந்து புவியியல் தகவல் அமைப்பு GPS கருவிகளை பயன்படுத்தி விதி மீறல் இடங்களை அடையாளம் காணவும் வரைபடம் உருவாக்கவும் புவியியல் தகவல் அமைப்பு செயல்படுகிறது. மேலும் கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் இடங்களை கண்டறிவதற்காக தொழில்நுட்ப வல்லுநர் குழுவுக்கும் உதவி புரிந்து வருகிறது.

## 5.2 கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் (Coastal Zone Management Plan)

கடலோரப் பகுதிகளைப் பாதுகாக்கவும் மற்றும் கடலோரப் பகுதிகளில் நிலையான வளர்ச்சியை ஊக்குவிக்கவும், சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் கீழ் வெளியிடப்பட்ட, கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் அறிவிக்கை எண்.19(E), நாள். 06.01.2011 மூலம் வெளியிடப்பட்டது.

இவ்வறிவிக்கையின்படி கடற்பகுதிகள் 5 வகை மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன:

கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–I (சூழல் முக்கியத்துவம் வாய்ந்தவை)

கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–II (வளர்ச்சியடைந்த பகுதி)

கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–III (ஊரகப் பகுதி)

கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–IV (கடல்நீர் பகுதியில் உயர் அலை கோட்டிலிருந்து, நாட்டின் கடல் எல்லை பகுதிக்கு (12 நாட்டிகல் மைல்கள்) இடைப்பட்ட கடல் பகுதி மற்றும் அலை தாக்கமுள்ள நீர்நிலைப்பகுதிகள்)

கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–V சிறப்புக்கவனம் செலுத்தி பாதுகாக்கப்பட வேண்டிய குறுகிய கடல் சூழல் பகுதிகள்

கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கையின் படி, மாநில அரசால் கடலோரப் பகுதி மேலாண்மைத் திட்டம் தயாரித்தல் என்பது அவசியமான ஒன்றாகும்.

கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011–ன் வழிமுறைகளின் படி, தமிழ்நாட்டில் உள்ள கடலோர மாவட்டங்களுக்கான வரைவு கடலோர

மண்டல மேலாண்மை திட்டம் தயாரிக்கும் பணி, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் ஒப்பளிப்பு பெற்ற நிறுவனமான சென்னையில் உள்ள நிலைத்தகு கடலோர மேலாண்மைக்கான தேசிய மையம் (National Centre for Sustainable Coastal Management) சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையால் வழங்கப்பட்டது.

தேசிய கடலோர மண்டல மேலாண்மைக் குழுமத்தின் பரிந்துரைகளின்படி, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் தமிழ்நாட்டிற்கான கடலோர மண்டல மேலாண்மை திட்டத்திற்கு 24.10.2018 அன்று ஒப்புதல் வழங்கியது. 117 வரைபடங்களை உள்ளடக்கிய அங்கீகரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை திட்டம் சுற்றுச்சூழல் துறையின் (www.environment.tn.nic.in) (http://tnenvis.nic.in) வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மைத் திட்ட வரைபடங்கள், மென் நகல் (Soft copy) மாவட்ட கடலோர மண்டல மேலாண்மைக் குழுமங்கள் மற்றும் தொடர்புடைய துறையினருக்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு அனுப்பப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2019 விதிகளின்படி, கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தினைத் தயாரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியது. அதன்படி, தமிழ்நாட்டிற்கான கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தினை 1:25000 என்ற அளவில் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2019ன் படி தயாரிக்கும் பணியினை, 1.82 கோடி ரூபாய் செலவில், ஒன்றிய அரசின் நிலைத்தகு கடலோர

மேலாண்மைக்கான தேசிய மையம் மேற்கொண்டு வருகிறது.

கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கை 2019–ன்படி தயாரிக்கப்படும் கடலோர மண்டல மேலாண்மை திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கும்வரை, கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011–ன்படி தயாரிக்கப்பட்ட, கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தினைப் பின்பற்றுமாறு ஒன்றிய அரசு, அனைத்து மாநிலங்களையும் அறிவுறுத்தியுள்ளது.

### 5.3 உள்ளூர் அளவிலான கடலோரப் பகுதி மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்

பேரிடர் அபாயக் குறைப்புத் திட்டத்தின் கீழ் உள்ளூர் அளவிலான ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மைத் திட்ட வரைபடங்களை 1:4000 என்ற அளவில், 2.99 கோடி ரூபாய் செலவில் தயாரிப்பதற்கான ஏற்பாணையினை, சென்னை

அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு மையத்திற்கு, தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அனுமதி அளித்தது. இப்பணியினை அண்ணா பல்கலைக்கழக தொலையுணர்வு மையம் முடித்துவைத்ததைத் தொடர்ந்து, கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கை, 2011ன்படி தயாரிக்கப்பட்ட உள்ளூர் அளவிலான வரைபடங்கள் கடற்கரை மேலாண்மை திட்டங்களை செயல்படுத்துவதற்காக, அனைத்து கடலோர மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள், தொடர்புத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட மற்ற அமைப்புகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 5.4 கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் ஒழுங்குமுறை விதிகளை நடைமுறைப்படுத்துதல்

கடலோரப் பகுதிகளில் தனித்துவமிக்க சுற்றுச்சூழல் மற்றும் கடல் பகுதிகளைப் பாதுகாக்கும் நோக்கில் அறிவியல் கொள்கைகளின் அடிப்படையில்

நிலையான வளர்ச்சியை மேம்படுத்த கடலோர ஒழுங்குமுறை மண்டல விதிமுறைகள் செயல்படுத்தப்பட்டது. இவ்விதிமுறைகள் கடலோரப்பகுதிகளில் வசிக்கும் மீனவ சமூகத்தினர் மற்றும் உள்ளூர் மக்களுக்கு வாழ்வாதாரப் பாதுகாப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் தமிழ்நாடு ஒரு கடலோர மாநிலமாக விளங்குவதால், இவ்விதிமுறைகள், மாநில மற்றும் மாவட்ட அளவில் உள்ள கடலோரப் மண்டல மேலாண்மை அமைப்புகள் மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

### 5.5 தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம் (Tamil Nadu State Coastal Zone Management Authority)

கடலோர ஒழுங்குமுறை மண்டல பகுதிகளில் வளர்ச்சி / கட்டுமான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவும், அப்பகுதிகளின் விதிமீறல்களைக் கண்காணிக்கவும், மாநில அளவிலான கடலோர

மண்டல மேலாண்மைக் குழுமம், ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தினால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் முதன்மைச் செயலாளர்/கூடுதல் தலைமைச் செயலாளரைத் தலைவராகவும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநரை உறுப்பினர் செயலராகவும் கொண்டு இக்குழுமம் செயல்படுகிறது. இதில், பல்வேறு துறைகளைச் சார்ந்த மூத்த அதிகாரிகள் மற்றும் தொழிநுட்ப வல்லுனர்கள்/அரசு சாரா அமைப்புகள் உறுப்பினர்களாக உள்ளனர். இது மாநில அளவிலான பரிந்துரைக்கும் அமைப்பாகும், கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதிக்கான திட்டத்தின் தன்மையின் அடிப்படையில் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்/சுற்றுச்சூழல் தாக்க

மதிப்பீட்டு ஆணையத்திற்கு முன்மொழிவை பரிந்துரைக்கிறது.

## 5.6. மாவட்ட கடலோர மண்டல மேலாண்மைக் குழுமங்கள் (District Coastal Zone Management Authorities)

தமிழ்நாட்டின் 14 கடலோர மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு, மாவட்ட அளவிலான கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம் அமைந்துள்ளது. இக்குழுமங்கள் கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின் படி, குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கூட்டங்களை கூட்டி, திட்டங்கள் கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு தீங்கு விளைவிக்காததை உறுதிசெய்த பிறகு, தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மைக் குழுமத்திற்கு திட்டங்களை பரிந்துரைக்கின்றன.

## 5.7. கடற்கரை ஒழுங்குமுறை மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்ட புதுமுயற்சிகள்

கடற்கரை ஒழுங்குமுறை மண்டலத்தின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக, சுற்றுச்சூழல் துறை தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மைக் குழுமத்திற்கு ஒரு வலைதளத்தை தொடங்கியுள்ளது (http:www.tnsczma.gov.in).

மாவட்ட கடலோர மண்டல மேலாண்மைக் குழுமங்களில், கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிப்புகளை திறம்பட செயல்படுத்துவதற்காக ஒவ்வொரு கடலோர மாவட்டத்திற்கும் ஒரு உதவியாளர் என 14 உதவியாளர் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளது.

கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி விண்ணப்பங்களுக்கான ஆய்வுக் கட்டணங்களை பெறுவதற்கு ஒரு இணையதள மின் கட்டண முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பாரம்பரிய வரைவோலை

மூலம் பணம் செலுத்துவதற்கு பதிலாக இம்முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை, சென்னை மற்றும் கடலூரில் இரண்டு மண்டல பயிற்சி பட்டறைகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளது. அவை சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய கடலோர மாவட்டங்களை உள்ளடக்கியது. இந்த பயிற்சி பட்டறைகள் கடலோர மாவட்டங்களில் உள்ள பங்குதாரர்களுக்கு கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பு, 2019ஐ திறம்பட செயல்டுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.

**6. மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (State Level Environment Impact Assessment Authority)**

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006–ன்படி, சில பசுமை திட்டங்கள் கட்டுமான மற்றும்

தொழில் திட்டங்களுக்கும் சுற்றுச்சூழல் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்பின் அடிப்படையில் சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறுவது கட்டாயமாகும். இவ்வறிக்கையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 'அ' பிரிவு இனங்களுக்கு, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திடமிருந்தும், 'ஆ' பிரிவு இனங்களுக்கு அதன் செயல்பாடுகளைச் சார்ந்து மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்தும் சுற்றுச்சூழல் அனுமதி பெறப்படல் வேண்டும்.

இந்த அறிவிக்கை சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மாசுபாடுகளைக் குறைப்பதற்கும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் தேவையான திட்டங்களை ஆராய்ந்து சுற்றுச்சூழல் அனுமதி வழங்க மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அதிகாரம் வழங்குகிறது

தற்போதைய 6 வது மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் அறிவிப்பு எண். 1098 (E) படி, மார்ச் 6, 2025 ன்படி மாற்றியமைக்கப்பட்டது. தமிழகத்தில் முதன்முறையாக மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு உதவுவதற்காக இரண்டு மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழுக்களை அமைத்துள்ளது.

தற்போதைய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், தலைவர், உறுப்பினர்–செயலர் மற்றும் ஒரு உறுப்பினரைக் கொண்டும் மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு 2 தலைவர்கள், 2 உறுப்பினர் செயலர்கள் மற்றும் 14 (SEAC–I மற்றும் SEAC–II) உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. இந்த ஆணையம் மற்றும் மதிப்பீட்டுக்குழு மூன்று ஆண்டுகளுக்கு செயல்படும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மாசுபாடுகளைக் குறைக்கத் தேவையான திட்டங்களை ஆராய்ந்து சுற்றுச்சூழல் முன் அனுமதி வழங்க மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA) மற்றும் அவ்வாணையத்திற்கு உதவ மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு (SEAC) ஆகியவற்றை அமைக்க சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006–ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு, இத்திட்டங்களை ஆய்வு செய்து அதன் பரிந்துரைகளை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு (SEIAA) வழங்கும். இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள சட்டப்பூர்வ விதிகளுக்குட்பட்டு திட்டங்களுக்கு, சுற்றுச்சூழல் அனுமதியை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் வழங்கும்.

**சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதில் எடுக்கப்பட்ட முன்னெடுப்புகள்**

- சுற்றுச்சூழல் அனுமதி சார்ந்த கோப்புகளை கையாளுவதில் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கவும், சுற்றுச்சூழல் அனுமதி சார்ந்த விண்ணப்பங்களை பரிசீலித்து சுற்றுச்சூழல் அனுமதி வழங்கவும் Parivesh என்ற வலைதளம் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சுற்றுச்சூழல் அனுமதியை, சராசரியாக 49 நாட்களில் விரைந்து வழங்குவதால், தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளக்குகிறது.

- சுற்றுச்சூழலைப் பாதுகாக்க சுற்றுச்சூழல் அனுமதி செயல்முறை முற்றிலும் காகிதமற்ற அமைப்பாக மாறியுள்ளது. ஜனவரி 1, 2025 முதல்,

விண்ணப்பங்களின் அச்சிடப்பட்ட நகல்களை, தமிழ்நாடு மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA) கோருவதில்லை. மின்னணு அலுவலகம் செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, சுற்றுச்சூழல் அனுமதி அளிக்க அலுவலக நடவடிக்கைகள் மற்றும் அதன் தொடர்புடைய கோப்புகளும் மின்னணு அலுவலக அமைப்பு மூலம் தனித்தன்மையாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. எனவே, அலுவலகம் அதிகாரப்பூர்வமாக காகிதமற்ற அலுவலகமாக செயல்படுகிறது.

- திட்ட ஆதரவாளர்களிடமிருந்து ரூ.10,000/- முதல் ரூ.10,00,000/- வரை செயலாக்க கட்டணம் இதுவரை வரைவோலையாக வசூலிக்கப்பட்டது. இந்த கட்டணத்தொகை தற்போது "seiaa.tn.gov.in" என்ற வலைத்தளம்

மூலம் பெறப்பட்டு வருவதால், திட்ட முன்மொழிபவர்களின் வேலை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

- சிறந்த வெளிப்படைத்தன்மையை அளிக்கும் நோக்கத்திற்காக, தமிழ்நாடு மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் வலைத்தளம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

## 7. தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை (Environment Management Agency of Tamil Nadu)

தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை ஒரு தன்னாட்சி நிறுவனம் என்பதால் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்குள் ஒரு தொடர்பை ஏற்படுத்தி திட்டங்களை திறம்பட செயல்படுத்த வழிவகை செய்கிறது. தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் உதவியுடன்

செயல்படுத்தப்படும் திட்டங்களைக் கண்காணிக்கவும், அவற்றை செயல்படுத்தவும் "தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை" தமிழ்நாடு அரசால், 2002–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டம் மற்றும் தேசிய ஏரிகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்ட பணிகள் 2005ம் ஆண்டில் முடிக்கப்பட்டன.

இம்முகமை, பள்ளிகளில் சுற்றுச்சூழல், கடலோரப் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் சூழல் மீட்புப் பணிகள் போன்ற நடவடிக்கைகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாநகராட்சிகள், நகராட்சிகள், அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மேற்கொண்டு வருகிறது.

மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதி, சுற்று ழல் தாக்க மதிப்பீட்டு நிதி, மாசுக் கட்டுப்பாடு வாரிய நிதி, அரசின் மானியம் உள்ளிட்ட நிதி

மூலமாக பல்வேறு ஒத்த துறைகள் / உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து, நீர்நிலைகளில் சூழல் மீட்புப் பணிகளை, தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை செயல்படுத்தி வருகிறது.

நிறுவனங்களிலிருந்து பெறப்படும் நிறுவனங்களின் சூழல் பொறுப்பு நிதியின் மூலம் பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் நீர்நிலைகளை சீரமைக்கும் பணிகளையும் சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை கண்காணித்து வருகிறது.

### 7.1 சுற்றுச்சூழல் கல்வி திட்டம் (Environment Education Programme)

மாணவர் சமுதாயம் தங்கள் இல்லங்களில் மிகவும் செல்வாக்குடையவர்கள் என்பதால் அவர்களை சுற்றுச்சூழல் மேம்பாட்டு நடவடிக்கைகளில் உற்சாகத்துடன் ஈடுபடுத்துவதற்காக, மாவட்டந்தோறும் அரசு மற்றும் அரசு நிதிபெறும் பள்ளிகளில்

மாவட்டத்திற்கு 100 பள்ளிகள் வீதம் 'தேசிய பசுமைப்படை' சூழல் மன்றங்கள் தமிழ்நாட்டில் 2002ம் ஆண்டு துவங்கப்பட்டது. சூழல் மன்றங்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கப்பட்டு தற்போது மாவட்டத்திற்கு 250 சூழல் மன்றங்கள் வீதம் 9500 தேசிய பசுமைப்படை சூழல் மன்றங்கள் 38 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. அரசு மற்றும் அரசு நிதிபெறும் பள்ளிகளின் எண்ணிக்கை குறைவு என்பதால், மெட்ரிக்குலேசன், மத்திய அரசின் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் சூழல் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேசிய பசுமைப்படை என்று முன்னால் அழைக்கப்பட்ட திட்டம் 2023–2024–ம் ஆண்டு முதல் சுற்றுச்சூழல் கல்வி திட்டம் என புத்தாக்கம் செய்யப்பட்டுள்ளது.

2024–2025–ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் கல்வித் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சகம்

சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக ரூ.5.53 கோடி விடுவித்தது. நிலைத்த வாழ்வியல் பட்டறை, புதுமையான விழிப்புணர்வு திட்டம், சுழல் மன்றங்கள் அளவில் பல்வேறு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பணிகள், வாகனங்கள் மூலம் விழிப்புணர்வு பிரச்சாரம், கண்காட்சி, நெகிழிக்கு பதிலாக துணிப்பைகள் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் துணிப்பைகள் வழங்குதல், இயற்கை முகாம் உள்ளிட்ட விழிப்புணர்வு பணிகள் 38 மாவட்டங்களிலும் 2024–2025–ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

400 வகையான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம் 10 இலட்சம் பொதுமக்களும் மாணவ மாணவியார்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

## 8. சுற்றுச்சூழல் தகவல், விழிப்புணர்வு, திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதார திட்டம் (EIACP)

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால், 1982–ல் ஒன்றிய அரசு திட்டமான 'சுற்றுச்சூழல் தகவல் மையம்' என்ற அமைப்பு தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் தகவல் மையம் (ENVIS) ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் நிதியுதவியுடன் 2002–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் சுற்றுச்சூழல் துறையில் இயங்கி வருகிறது.

தமிழகத்தின் சுற்றுச்சூழல் மற்றும் அதன் தொடர்புடைய பல்வேறு தகவல்களை இம்மையம் வழங்கி வருகிறது. தகவல்கள் சேகரித்தல், ஒப்பிடுதல், சேமித்தல், சீர்படுத்துதல் மற்றும் www.tnenvis.nic.in என்ற வலைதளத்தின் மூலம் சுற்றுச்சூழல் தகவல்களைப் பரப்புதல் ஆகிய பணிகளில் இம்மையம் ஈடுபட்டுள்ளது.

சுற்றுச்சூழல் நிலை அறிக்கை (SoER) தயாரித்தல், பசுமைத் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் (GSDP) கீழ் சான்றிதழ் படிப்புகளை நடத்துதல், வலை அடிப்படையிலான தரவுத்தளத்தை உருவாக்குதல், செய்திமடல்களை வெளியிடுதல், விழிப்புணர்வு பிரசுரங்களைத் தயாரித்தல் மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு திட்டங்களை நடத்துதல் ஆகியவை EIACP PC HUB இன் கீழ் நடந்து வரும் திட்டங்களாகும்..

"சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, கொள்கை, திட்டமிடல் மற்றும் வெளிப்பாடுகளின் மதிப்பீடு ஆகியவற்றுக்கான உதவி அமைப்பு" என்ற திட்டத்தின் கீழ் செயல்பட்டு வந்த சுற்றுச்சூழல் தகவல் மையம் தற்போது சுற்றுச்சூழல் கல்வி, விழிப்புணர்வு, ஆராய்ச்சி மற்றும் திறன் மேம்பாடு" என்ற திட்டத்துக்குள் உட்படுத்தப்பட்டுள்ளது. "சுற்றுச்சூழல் தகவல்கள், விழிப்புணர்வு, பசுமைத்திறன் கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார திட்டங்கள்" ஆகியவை இந்த

மறுசீரமைக்கப்பட்ட திட்டத்தின் கூறுகளில் ஒன்றாகும்.

## 9. சுற்றுச்சூழல் விருதுகள்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மேலாண்மை மற்றும் விழிப்புணர்வுப் பணிகளில் ஈடுபாட்டுடன் சிறந்த பங்களிப்பு செய்த அரசுசாரா அமைப்புகள், நிறுவனங்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தனிநபர்களைக் கண்டறிந்து பல்வேறு பிரிவுகளில் 10 சுற்றுச்சூழல் விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த 2024–25–ம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் விருதுகள், 2025 பிப்ரவரி 4 மற்றும் 5 ஆகிய தேதிகளில் நடைபெற்ற காலநிலை உச்சிமாநாடு 3.0–ன் போது வழங்கப்பட்டன.

## 10. நடைமுறையில் உள்ள திட்டங்கள்

### 10.1. காலநிலை அரங்கம் (Climate Studio) :

தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை, அண்ணா பல்கலைக்கழகத்தில் "காலநிலை மாற்ற ஏற்பு ஆராய்ச்சி மையம் (காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மையம் என பெயர் மாற்றப்பட்டுள்ளது) காலநிலை மாற்றம் குறித்த புரிதலை வலுப்படுத்தவும், அதனை ஏற்றுக்கொள்ளக்கூடிய திறனை அதிகரிக்கவும் காலநிலை மாற்றத்திற்கான ஆராய்ச்சி மையம் ஒன்றை இத்துறை அமைத்துள்ளது. இந்த காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மையமானது காலநிலை மாதிரியாக்கத்திற்கான உயர் செயல்திறன் கணக்கீட்டு வசதிகள் தரவுகள் சேமிப்பதற்கான துணைக் கருவிகளுடன் கூடிய அமைப்புடன் உருவாக்கப்பட்டுள்ளது.

**காலநிலை அரங்கத்தின் நோக்கங்கள்**

- தமிழ்நாடு முழுமைக்குமான, நுண் அளவு கொள்கை திட்டமிடலுக்குத் தேவையான உயர்தரமிக்க, நுணுக்கமான, மண்டல அளவிலான காலநிலை தொடர்பான தகவல்களைத் திரட்டி அளித்தல்.
- காலநிலை மாற்றத்திற்கான அரசுகளுக் கிடையேயான குழு (IPCC – Intergovernmental Panel on Climate Change)–யின் தொடர் மதிப்பீடு அறிக்கைகளின் அடிப்படையில் வேளாண்மை, நீர் வளம், வனம் மற்றும் பல்–உயிரியம் மற்றும் கடலோர மண்டல மேலாண்மை போன்ற இயற்கை வளங்களின் மீது காலநிலை மாற்றத்தின் பாதிப்பு குறித்து குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை மதிப்பீடு செய்தல்.
- மேற்படி மதிப்பீடுகளை மேற்கொள்ள புவி தகவல் தரவு அடிப்படையில் தகவல்கள் பெறப்பட்டு,

அவற்றிலிருந்து அறிவியல் வழியிலான அறிக்கைகள் தயாரிக்க நீர் வளத்துறையில் MIKE SHE மற்றும் SWAT, வேளாண்மை துறையில் DSSAT மற்றும் கடலோர மேலாண்மையில் SimCLIM மற்றும் வனத்துறையில் MAXENT எனப்படும் மென்பொருட்களைப் பயன்படுத்தி காலநிலை மாற்றம் தொடர்பான ஒரு தெளிவை அடைவதுடன், காலநிலை மாற்றத்தினால் எதிர்காலத்தில் ஏற்படும் தாக்கங்கள் மற்றும் அழிவுகளைக் கணித்தல் மற்றும் இயற்கை வளங்கள், சூழல் அமைவிடங்களில் நிகழும் மாற்றங்களைக் கணக்கிடுதல்.

- திட்டமிடல் நிபுணர்கள் மற்றும் அறிவியலாளர்கள், தன்னார்வு நிறுவனங்கள் மற்றும் சமூகத்தினர் ஆகியோர் இப்பொருள் குறித்து அறிந்து கொள்வதற்காக மாநில மொழிகளில் தகவல்களை அளித்தல்.

**காலநிலை அரங்கத்தின் செயல்பாடுகள்**

- தேசிய, மாநில மற்றும் உள்ளூரளவில், காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த தகவல்களை உரிய ஆதாரங்களுடன் வழங்குதல்.
- நீர்வளம், வேளாண்மை, வனவியல், கடலோர, நகர்ப்புற வாழ்விடம், சுகாதாரம் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கம் போன்ற துறைகளில் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கான பயிற்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.
- காலநிலை மாற்றம் தொடர்பான திட்டமிடல் மற்றும் பாதிப்புகளை ஈடுசெய்யத்தக்க பணிகளுக்கு தேவையான அறிவியல் திறனை உருவாக்குதல்.
- காலநிலை மாற்றம் தொடர்பான தகவல்கள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பரிமாறிக்கொள்ளவும் ஒருங்கிணைந்து ஆய்வு

நடவடிக்கையில் ஈடுபடவும், காலநிலை ஆய்வுகளில் ஈடுபட்டுவரும் அனைத்து ஆய்வு நிறுவனங்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தகவல் மையமாக உருவாக்குதல்.

- சமீபத்திய காலநிலை மாற்றம் குறித்த தகவல்களை வழங்கும் பொருட்டு பன்னாட்டுக் காலநிலைத் தரவுகளை உடனுக்குடன் சேகரித்து, ஒரு வலைதளம் மூலமாக காலநிலை மாற்றம் தொடர்பான தகவல்களை அனைவரும் எளிமையாக பெறுதல்
- காலநிலை மாற்றம் தொடர்பான அனைத்து நிறுவனங்களையும், ஆய்வு நிலையங்களையும் ஒருங்கிணைத்து, தொழில்நுட்பம் மற்றும் தரவுகளை பரிமாறிக் கொள்வதுடன், அவற்றுடன் ஒருங்கிணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

- காலநிலை குறித்த ஆய்வுகளில் தொடர்புடைய அனைத்து பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான அறிவியல் மையங்களிலிருந்து தகவல்களைப் பெற்று ஒருங்கிணைத்தல்.

## 10.2. நீலக்கொடி கடற்கரை சான்றளிப்புத் திட்டம் (Blue Flag Beach Certification Programme)

நிலையான சுற்றுலா மற்றும் ஆரோக்கியமான கடலோர நிருவாகத்தைத் திட்டமிடவும், மேம்படுத்தவும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டுள்ள கடற்கரை சுற்றுச்சூழல் மற்றும் அழகியல் மேலாண்மை அமைப்பு [Beach Environment and Aesthetic Management System (BEAMS)] எனும் ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மை திட்டம், கடற்கரைகளில் இருக்கும் மாசுகளைக் குறைக்கவும் சர்வதேச தர அளவீட்டிற்கு இந்தியாவின் கடற்கரைகளை உயர்த்தவும் தேவையான அம்சங்களுடன் செயல்படுத்தப்படுகிறது.

கடற்கரைகள் மற்றும் படகுத்துறைகளுக்கு அளிக்கப்படும் நீலக்கொடி சான்றிதழானது, டென்மார்க்கைச் சார்ந்த சர்வதேச, அரசு சாரா, இலாப நோக்கமற்ற சுற்றுச்சூழல் கல்வி நிறுவனத்தால் (Foundation for Environmental Education) அளிக்கப்படுகிறது. மேலும், தரம், சுற்றுச்சூழல் கல்வி மற்றும் தகவல்கள், பாதுகாப்பு மற்றும் சேவைகளை வழுங்குதல் மற்றும் பொது சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகிய 4 தலைப்புகளின் கீழ் உள்ள நீலச் சான்றிதழுக்கான 33 தகுதிகளைக் கொண்டுள்ள கடற்கரைகளுக்கே இச்சான்றிதழ் வழங்கப்படும். நீலக்கொடியானது, உள்ளூர், மண்டல மற்றும் தேசிய அளவில் சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் துறைகளை ஒன்றிணைக்கும் வகையில் மிகவும் மதிப்புமிக்க, சிறப்பு வாய்ந்த மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுற்றுச்சூழல் அடையாளமாக மாறியுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கோவளம் கடற்கரை நீலக்கொடி தரத்தின்படி, நீரின் தரம் மற்றும் பாதுகாப்பு அளவுகளைப் பூர்த்தி செய்யும் வகையில், தமிழ்நாட்டில் ஒரு முன்னோடித் திட்டமாக தேர்வு செய்யப்பட்டது. ஒன்றிய அரசின், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின், ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மைச் சங்கம் (Society of Integrated Coastal Management (SICOM)) மூலமாக செயல்படுத்தப்பட்டது.

கோவளம் கடற்கரையில் நீலக்கொடி கடற்கரைத் திட்டத்தினைக் கண்காணிக்கவும், மேற்பார்வையிடவும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தலைமையில் கடற்கரை மேலாண்மைக் குழு (Beach Management Committee) அமைக்கப்பட்டுள்ளது. இந்த கோவளம் கடற்கரைக்கு அக்டோபர் 2021 முதல் மே 2022 வரை 21.09.2021 அன்று நீலக்கொடி சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு ஆண்டும்

நீலக்கொடி சான்றிதழ் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. தற்போது, 25.01.2025 அன்று 2024–2025 ஆண்டுக்கான நீலக்கொடி சான்றிதழ் புதுபிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை 2021–22 உரையில், அடுத்த 5 ஆண்டுகளில் 10 கடற்கரைகளுக்கான மதிப்புமிக்க நீலக்கொடி சான்றிதழைப் பெறுவதற்கான திட்டத்தை ரூ.100 கோடி செலவில் அரசு அறிவித்துள்ளது. தற்போது, சென்னை மெரினா கடற்கரை, ராமநாதபுரம் அரியமான் கடற்கரை, நாகப்பட்டினம் காமேஸ்வரம் கடற்கரை மற்றும் கடலூர் சில்வர் கடற்கரை ஆகியவற்றில் திட்டத்தை செயல்படுத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 2025–26 நிதியாண்டில், இந்தத் திட்டத்தின் கீழ் ரூ.24 கோடி செலவில் மீதமுள்ள ஆறு

கடற்கரைகளுக்கான அடிப்படை ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கப்பட்டு வருகிறது.

**10.3. காலநிலை மாற்றம் குறித்த உத்திசார் அறிவுக்கான தேசிய இயக்கம் National Mission on Strategic Knowledge on Climate Change (SCCC–NMSKCC):**

தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையானது, "தமிழ்நாட்டில் காலநிலை மாற்றம் குறித்த உத்திசார் அறிவுக்கான தேசிய இயக்கத்தின் (SCCC–NMSKCC) கீழ் மாநில காலநிலை மாற்ற மையத்தை நிறுவுதல் / வலுப்படுத்துதல்" என்ற திட்டத்தை 2017 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் வெற்றிகரமாக செயல்படுத்தியது. இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, இத்திட்டத்தின் (NMSKCC) இரண்டாம் கட்டத்தை, தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல்

மற்றும் காலநிலை மாற்றத் துறை மூலம், "Climate Smart Integrated Decision Support System (CSIDSS) Tools for Cadastral Level Adaptation" என்ற தலைப்பில் செயல்படுத்துவதற்காக ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாட்டில் இவ்விரண்டாம் கட்ட திட்டத்தின் ஐந்தாண்டு காலத்திற்கு விவசாயம் மற்றும் நீர்வளத் துறைகளில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை மதிப்பிடுவதற்காக அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை ரூ.2.05 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

## 11. 2024–25 –ம் ஆண்டின் சாதனைகள்

- சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் அலுவலகம், அதிகரித்து வரும் பிரிவுகள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு சென்னையில் நந்தனத்தில் உள்ள மெட்ரோ

பவன் 9வது தளத்தில் உள்ள புதிய அலுவலகத்திற்கு வெற்றிகரமாக மாற்றப்பட்டது.

- நிதி ஆயோக்கின் நிலைத்தகு வளர்ச்சி இலக்குகள் இந்தியா தரவரிசை 2023–24–ல், பதிமூன்றாவது இலக்கான காலநிலை நடவடிக்கையில் தமிழ்நாடு 81 மதிப்பெண்கள் பெற்று முதலிடம் வகிக்கிறது. கடந்த முறை வகித்த 11வது இடத்திலிருந்து குறிப்பிடத்தக்க வகையில் முன்னேறியிருப்பது நம் மாநிலம் காலநிலை மாற்றச் சவால்களை எதிர்கொள்வதில் காட்டி வரும் முனைப்பைப் பறைசாற்றுகிறது. காலநிலை நடவடிக்கை மட்டுமின்றி, ஏழாவது இலக்கான மலிவான மற்றும் தூய்மையான ஆற்றலிலும் 100 மதிப்பெண்கள் பெற்று முதலிடம் வகிக்கிறது. இச்சாதனைகள், தேசிய இலக்கிற்கு முன்னர் நிகர பூஜ்ய உமிழ்வுகள் நிலையை எட்டுவதை

நோக்கமாகக் கொண்ட தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் மற்றும் பன்னாட்டு ஒருங்கிணைவுகள் உட்பட தமிழ்நாட்டின் பல்வேறு செயல்திறன்மிக்க முன்னெடுப்புகளை வெளிக்காட்டுகிறது.

- கடந்த பிப்ரவரி 2025–ல் 4 மற்றும் 5 ஆகிய தேதிகளில் காலநிலை மற்றும் பல்லுயிரியம் சார்ந்த பிரச்சினைகளுக்கு தேசிய மற்றும் சர்வதேச அளவிலான சிறந்த நடைமுறைகளை அறிந்து கொள்ளும் வண்ணம் பன்னாட்டு வல்லுனர்கள், தோழமை அமைப்புகள், மதிப்புமிக்க நிறுவனங்கள் மற்றும் சார்புடைய துறைகளின் பங்கேற்போடு தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 3.0 வினை நடத்தி இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பசுமைப் புத்தாய்வுத் திட்டத்தின் மூலம் சிறப்பாகத் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்ட 1,284 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் வாயிலாக சுமார் 4.60 இலட்சம் மக்களுக்கு சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.
- சுற்றுச்சூழல் கல்வி திட்டத்தின் மூலம் சுமார் 10 இலட்சம் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 400 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.
- கடலோர ஒழுங்குமுறை மண்டலங்களில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்த தமிழ்நாடு மாநில கடலோர ஒழுங்குமுறை மண்டல மேலாண்மை ஆணையத்திற்கென பிரத்யேகமான வலைதளம் (http://www.tnsczma.gov.in) சுற்றுச்சூழல்

மற்றும் காலநிலை மாற்றத்துறையால் தொடங்கப்பட்டுள்ளது.

## 12. நிறைவுரை

தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையானது சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை நடவடிக்கைகளில் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருப்பதோடல்லாமல் தொடர்ச்சியான நடவடிக்கைகள், வலிமையான தலைமை மற்றும் உறுதிப்பாட்டுடன் திகழ்கிறது. மேலும் இத்துறை, பிரத்யேகமான இயக்கங்களின் செயலாக்கத்தின் மூலம் புதுமையான திட்டங்கள், திறன் வளர்ப்பு, அடிமட்ட அளவில் பொதுமக்களின் பங்கேற்பு என காலநிலை மீள்திறன், நிலையான மற்றும் சமத்துவமிக்க எதிர்காலத்திற்கு வலிமையான அடித்தளமிட்டுள்ளது. மேற்கூறப்பட்ட சாதனைகள் தமிழ்நாட்டின் பசுமையான மற்றும் நிலையான கனவுகளை நோக்கிய

பணிகளில் அரசுத் துறைகள், உள்ளூர் சமூகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பொது சமூகங்களின் ஒருங்கிணைந்த முயற்சிகளை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயற்கைச் சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல், காலநிலைக் கல்வியறிவினை மேம்படுத்தல், இயற்கை சார்ந்த தீர்வுகளுக்கு உறுதுணையாக இருத்தல், மாவட்டங்கள் மற்றும் சமூகங்களை இயற்கையின் பணியாளர்களாக்க உறுதி கூறுகிறது. தொடர்ச்சியான கவனம், ஒருங்கிணைவு மற்றும் புதுமையான நடைமுறைகள் மூலம் எதிர்காலத் தலைமுறையினருக்கு மீள்திறன்மிகு எதிர்காலத்தை உருவாக்குவதில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரமாகத் திகழ்கிறது என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை.

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
**வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.**

**குறள் 737**

"ஆறு, கடல் எனும் இருபுனலும், வளர்ந்தோங்கி நீண்டமைந்த மலைத் தொடரும், வருபுனலாம் மழையும், வலிமைமிகு அரணும், ஒரு நாட்டின் சிறந்த உறுப்புகளாகும்."

### 1. முன்னுரை

நம் சுற்றுச்சூழல் என்பது ஒன்றோடொன்று பின்னி பிணையப்பட்ட மிகச் சிக்கலான வாழ்க்கை வலையமைப்பாகும். இது நம்முடைய வாழ்வின் பின்னணியாய் மட்டுமல்லாமல் வாழ்வின் அடிப்படை மற்றும் அசைக்க முடியாத ஓர் அங்கமாகும். நாம் சுவாசிக்கும் காற்று, குடிக்கும் நீர், வாழும் நிலம், மற்றும்

இந்த உலகில் உள்ள தாவர, விலங்கினங்கள் என அனைத்தும் நம்மைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழலாகும். இவற்றின் துணையின்றி நாம் வாழ்வது மிகக் கடினமாகும்.

இயற்கைச் சூழல் சீர்குலையாமல் பாதுகாக்கப்படுவது மிகவும் இன்றியமையாததாகும் மற்றும், இதைச் செய்வதற்கான ஒரே வழி சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது இயற்கையை பாதுகாத்து, அதன் நிலையை மேம்படுத்துவதன் மூலம் எல்லா உயிரினங்களுக்கும் நிலையான எதிர்காலத்தை உறுதி செய்வதற்கான முயற்சியாகும்.

தொழிற்மயமாதல், நகர்ப்புற வளர்ச்சி, காடுகள் அழிப்பு, மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாடு ஆகியவற்றின் காரணமாக உலகம் அசாதாரண சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொண்டு வருகிறது. காலநிலை

மாற்றம், வாழ்விட அழிவு, மற்றும் பல்லுயிர் இழப்பு போன்றவை இதன் முக்கியமான விளைவுகளாகும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது தனியொருவரின் பொறுப்பாக மட்டுமல்லாமல், பரிணாம சமநிலையை பராமரிப்பதும், இயற்கை வளங்களை வருங்கால சந்ததியினருக்காய் பேணி பாதுகாப்பதும் நம் தலையாய கடமையாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது இயற்கையைப் பாதுகாப்பதும், அதனை மேலோங்கச் செய்ய மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளைக் குறிக்கிறது. இதில் காலநிலை மாற்றத்துக்கு தகுந்து வாழும் முறைகளைச் செயல்படுத்துதல், அதனுடைய தீவிரத்தைக் குறைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், மற்றும் சுற்றுச்சூழல் மீது மனிதர்கள் ஏற்படுத்தும் தீங்கினைத் தடுத்தல் ஆகியவை அடங்கும்.

மேற்கண்ட நோக்கத்திற்காக, தமிழ்நாடு அரசு 27.02.1982 அன்று சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம்

மற்றும் வனத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தை (TNPCB) நிறுவியது. மாநிலத்தின் சுற்றுச்சூழல் சார்ந்த சட்டங்களை நடைமுறை படுத்தும் பொறுப்பு சட்டபூர்வ அமைப்பாகிய தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியமானது, தலைவர், உறுப்பினர் செயலர், மாநில அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து நபர்கள், விவசாயம், மீன்வளம், தொழில் அல்லது வர்த்தகம் போன்றவற்றின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அலுவல் சார மூன்று நபர்கள் மற்றும் மாநில அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் அல்லது கழகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு நபர்கள் ஆகியவர்களை வாரிய உறுப்பினர்களாக கொண்டு செயல்படுகிறது.

## 2. வாரியத்தின் பணிகள்:

- மாநிலத்தில் நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் மற்றும் குறைக்கவும் விரிவான திட்டங்களைத் திட்டமிடுதல்.
- நீர் மற்றும் காற்று மாசுபாட்டைத் தடுப்பது, கட்டுப்படுத்துவது அல்லது குறைப்பது தொடர்பான எந்தவொரு விஷயத்திலும் மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
- நீர் மற்றும் காற்று மாசுபாடு மற்றும் அதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது குறைத்தல் தொடர்பான தகவல்களை சேகரித்து பரப்புதல்.
- நீர் மாசுபாடு மற்றும் நீர் மாசுபாட்டைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது குறைத்தல் தொடர்பான பிரச்சனைகள் தொடர்பான விசாரணைகள் மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பது, நடத்துவது மற்றும் பங்கேற்பது.

- அன்றாட கழிவுநீர் மற்றும் தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அவற்றின் செயல்திறனுக்காக ஆய்வு செய்தல் மற்றும் திட்டங்களை மறுபரிசீலனை செய்தல், திருத்த நடவடிக்கைகளுக்கான விவரக்குறிப்புகள் தயாரித்தல்.
- தொழிற்சாலை அல்லது உற்பத்தி செயல்முறை ஆகியவற்றை ஆய்வு செய்து ஏதேனும் கட்டுப்பாட்டு சாதனங்களை பொருத்தி காற்று மாசுபாட்டைத் தடுப்பது, கட்டுப்படுத்துவது அல்லது குறைப்பது போன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கான வழிமுறைகளை வழங்குதல்.
- காற்று மாசு கட்டுப்பாடு பகுதிகளை காற்றின் தரத்தை மதிப்பிடும் நோக்கத்திற்காக ஆய்வு செய்தல் மற்றும் அத்தகைய பகுதிகளில் காற்று மாசுபாட்டைத் தடுக்க, கட்டுப்படுத்த அல்லது குறைக்க நடவடிக்கை எடுத்தல்.

- மாநில அரசு அல்லது ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தால் பரிந்துரைக்கப்படும் பிற செயல்பாடுகளைச் செய்தல்.


**3. நிறுவன அமைப்பு**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் திறம்பட மற்றும் பயனுள்ளவாறு செயல்படுவதற்காக (i) சென்னையில் உள்ள தலைமை அலுவலகம் (ii) ஒன்பது மண்டல அலுவலகங்கள் (iii) நாற்பத்து நான்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் ஆகியவற்றைக் கொண்ட மூன்று அடுக்கு அமைப்பினைக் கொண்டுள்ளது. இது தவிர, ஈரோடு, திருப்பூர், செங்கல்பட்டு, சேலம், மணலி, எண்ணூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் சுற்றுச்சூழல் பொறியாளர்களை தலைமையாக கொண்டு ஏழு பறக்கும் படை அலுவலகங்களும் மற்றும் அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் நிறைந்த பல்லாவரம்

மற்றும் மேட்டூர் பகுதிகளில் உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

15.03.2024, தேதியிட்ட சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசாணை எண்.43–ன் படி மணலி சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் மற்றும் மணலி பறக்கும் படை அலுவலங்கள் உருவாக்கப்பட்டன.

மேலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தனது கண்காணிப்புக்கு உதவிட மற்றும் பணிகளை திறம்பட செய்ய நீர் மற்றும் கழிவுநீர் மாதிரிகள் மற்றும் தொழிற்சாலைகளின் புகை வெளியேற்றத்தின் மாதிரிகளை ஆய்வு செய்ய 18 சுற்றுச்சூழல் ஆய்வகங்களை தலைமையகம் உட்பட பல மாவட்டங்களில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிறுவியுள்ளது.




## 4. இசைவாணை செயல்முறை

### 4.1. தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளின் வகைப்பாடு

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உத்தரவுகளின் அடிப்படையில், மாசு குறியீடு மதிப்பின் அடிப்படையில் தொழிற்சாலைகள் சிவப்பு, ஆரஞ்சு, பச்சை மற்றும் வெள்ளை என வகைப்படுத்தப்பட்டுள்ளன.


மேலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளை அதன் மாசு குறியீடு மற்றும் மொத்த நிலையான சொத்துக்களின் (Gross Fixed

Assets) அடிப்படையில் கண்காணிப்பு நோக்கத்திற்காக பின்வருமாறு வகைப்படுத்துகிறது:

| மொத்த நிலையான சொத்துக்களின் அடிப்படையிலான வகைப்பாடு | மொத்த நிலையான சொத்துக்கள் (ரூபாய் கோடியில்) | மாசுபடுத்தும் தன்மையை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாடு | | | |
|---|---|---|---|---|---|
| | | சிவப்பு | ஆரஞ்சு | பச்சை | வெள்ளை |
| பெரிய வகை | > 10 | அதிக மாசுபாடு | நடுத்தர மாசுபாடு | குறைவான மாசுபாடு | மிகக் குறைவான மாசுபாடு |
| நடுத்தர வகை | > 5 – < 10 | | | | |
| சிறிய வகை | < 5 | | | | |
| மாசு குறியீட்டு மதிப்பு | | >60 | 41–59 | 21–40 | <21 |

இவற்றில் சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை என வகைப்படுத்தப்பட்ட தொழிற்சாலைகள் மட்டும் இசைவாணையின் கீழ் வருகின்றன. வெள்ளை வகை தொழிற்சாலைகள் வாரியத்தின் இசைவாணை செயல்பாட்டின் கீழ் வருவதில்லை, அவைகளின் இருப்பை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் தெரிவித்தலே போதுமானதாகும்.

31.03.2025 வரை வாரியத்தின் இசைவாணை முறையின் கீழ் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:




## 4.2. தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்குவதற்கான அளவுகோல்கள்

ஒரு தொழிற்சாலையின், தொழிற்துறை செயல்பாடுகளை நிறுவுவதற்கு, "நிறுவுவதற்கான இசைவாணை", உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு அமைப்புகளுக்கு தேவையான உள்கட்டமைப்புகள் மற்றும் இயந்திரங்களை நிறுவுதற்கும், தேவையான

கண்காணிப்பு சாதனங்களுடன் கழிவுகளை (திட/திரவ/காற்று) மேலாண்மை செய்வதற்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் வழங்கப்படுகிறது.

'நிறுவுவதற்கான இசைவாணை' (CTE) ஆனது தகுந்த துறையிடமிருந்து பெறப்படும் ஒப்புதல்களையும், மற்றும் அடிப்படை அளவுகோல்களையும் (siting criteria) முறையாக மதிப்பீடு செய்த பிறகு வழங்கப்படுகிறது. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) அறிவிப்பு 2006 திட்டங்களின் கீழ் வரும் தொழிற்சாலைகளுக்கு பத்து ஆண்டு செல்லுபடியாகும்படியும் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) அல்லாத திட்டங்களுக்கு ஐந்தாண்டு செல்லுபடியாகும்படியும் நிறுவுவதற்கான இசைவாணை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் வழங்கப்படுகிறது. இதனை தொடர்ந்து, நிறுவும் செயல்பாடுகள் முடிந்த பிறகு தொழிற்சாலையானது இயக்குவதற்கான இசைவாணைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

தொழிற்சாலைக்கு வழங்கப்பட்ட 'நிறுவுவதற்கான இசைவாணையில்' (CTE) குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் இணக்கத்தினை உறுதிசெய்த பிறகு, தொழிற்சாலைக்கு 'இயக்குதலுக்கான இசைவாணை' (CTO) வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், அரசாங்கத்தின் எளிதாக வணிகம் செய்வதற்கான கொள்கையின் கீழ் 2021–22–ஆம் நிதியாண்டிலிருந்து தேவையான ஒப்புதல் கட்டணத்தைப் பெற்று சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை வகைத் தொழிற்சாலைகளுக்கு முறையே 5/ 10/ 14 ஆண்டுகள் நீட்டிக்கப்பட்ட காலத்திற்கு தொகுப்பு இசைவாணை வழங்கப்படுகிறது.

மேலும், அரசாங்கத்தின் எளிதாக வணிகம் செய்வதற்கான கொள்கையின் ஒரு பகுதியாக, மாநிலத்தில் தொழில்களை ஊக்குவிப்பதற்கு, நகர மற்றும் ஊரமைப்பு இயக்குனரகம் / சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் / உள்ளூர் திட்டக்குழுமம் மூலம்

அமைக்கப்பட்டுள்ள தொழில்துறை பயன்பாட்டு மண்டலம் / தொழிற்பேட்டையில், உத்தேசிக்கப்பட்ட பச்சை வகை தொழிற்சாலைகளுக்கு நிறுவுவதற்கான இசைவாணையின்றி இயக்குவதற்கான இசைவாணையை வாரியம் நேரடியாக (CTO direct) வழங்குகிறது. இவ்வாறு இயக்குவதற்கான இசைவாணை இல்லாமல் நேரடியாக நிறுவுவதற்கான இசைவாணை வழங்குவதற்கு "நேரடி–இயக்குவதற்கான இசைவாணை" (CTO Direct) என அழைக்கப்படுகிறது.

## 4.3. இணையவழி மூலம் இசைவாணை வழங்குதல்

19.01.2015 முதல் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (Online Consent Management and Monitoring System – OCMMS) என்ற இணைய செயலியை **www.ocmms.tn.gov.in** என்ற இணையதள முகவரியில் செயல்படுத்தியுள்ளது. மேலும், இதனை தொழிற்சாலைகள் எளிதாக பயன்படுத்தும் வண்ணம் அனைத்து மாவட்ட

அலுவலகங்களிலும் பராமரிப்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.


சட்டங்கள் மற்றும் விதிகளை திறம்பட செயல்படுத்துதல் மற்றும் கண்காணிப்புக்காக இசைவாணை வழங்குவதற்கான அதிகாரம் பல்வேறு வகை தொழிற்சாலைகளுக்கு வாரியத்தால் அமைக்கப்பட்ட பல்வேறு படிநிலை குழுக்களால் தீர்மானிக்கப்படுகிறது.

நிறுவுவதற்கான இசைவாணை (CTE) மற்றும் இயக்குவதற்கான இசைவாணைகளை (CTO) தவிர வாரியமானது, தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள், மருத்துவ கழிவுகள், திடக்கழிவுகள், மின்னணுக் கழிவுகள், நெகிழிக் கழிவுகள், கட்டுமானம் மற்றும் இடிமான கழிவுகளை மேலாண்மை செய்வதற்கும் அங்கீகாரம் வழங்குகிறது.

## 4.4. தானியங்கு இசைவாணை

வாரியம் சிறிய சிவப்பு வகை மற்றும் அனைத்து ஆரஞ்சு மற்றும் பச்சை வகைத் தொழிற்சாலைகளுக்கு 'தானியங்கு புதுப்பித்தல்' (Auto Renewal) என்ற இசைவாணை வழங்கும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, தொழிற்சாலைகளின் சுயசான்றிதழின் அடிப்படையில் ஆய்வுகளின்றி இசைவாணை புதுப்பிக்கப்படுகிறது. இணையவழி மூலம் விண்ணப்பத்தைப் பெற்ற ஏழு நாட்களுக்குள் இசைவாணை புதுப்பிக்கப்படுவதை இது உறுதி செய்கிறது. மேலும், நிறுவுவதற்கான இசைவாணையில் கால அளவினை நீட்டித்து வழங்குவதையும் தானியங்கு புதுப்பித்தல் மூலம் செயல்படுத்தி வருகிறது. ஒற்றைச் சாளர இணையவழி (Single Window Portal) மூலம் பெறப்படும் விண்ணப்பங்களும் உடனடியாக பரிசீலிக்கப்பட்டு இசைவாணை வழங்குகிறது.

## 01.04.2024 முதல் 31.03.2025 வரை தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட நிறுவுதல், இயக்குதல் மற்றும் புதுப்பித்தல் இசைவாணைகள்




### 5. சுற்றுப்புற நீர், காற்று மற்றும் ஒலிதர கண்காணிப்பு

சுற்றுச்சூழல் மாசினை கண்காணிப்பதற்கும் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகளை உருவாக்குவதற்கும், மாற்றுவதற்கும், மாசினை ஏற்படுத்தும் காரணங்களைக் கண்டறியவும் சுற்றுச்சூழல் காரணிகளின் தரத்தை கண்காணிப்பதும் மற்றும் புள்ளி விபரங்களை பகுப்பாய்தலும், சேகரித்தலும் மிகவும் அவசியமானதாகும். நீர் மற்றும் காற்று சட்டங்களின் கீழ், வரையறுக்கப்பட்ட

அதிகாரங்களின் அடிப்படையில் வாரியம், மாநிலத்தின் நீர் ஆதாரங்கள், சுற்றுச்சூழல் காற்று மற்றும் ஒலிதரத்தினை பல்வேறு திட்டங்களின் வாயிலாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்துவருகிறது.

**5.1. ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம்**

இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம் 14.08.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இம்மையம், கிண்டியிலுள்ள வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் செயல்படுகிறது. இந்தியாவிலேயே முதன்முறையாக செயல்படும் இந்நிலையமானது, சிமெண்ட், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், பெட்ரோ கெமிக்கல்ஸ், அனல் மின் நிலையங்கள், உரங்கள், இரும்பு மற்றும் எஃகு உள்ளிட்ட தொழிற்சாலைகள் வெளியிடும் மாசினை

இணையவழியில் கண்காணிப்பதோடு அபாயகரமான கழிவுகள், மருத்துவக் கழிவுகள், மின் கழிவுகளின் கண்காணிப்பு மற்றும் இசைவாணை மேலாண்மை போன்ற பல்வேறு தொகுதிகளை ஒருங்கிணைக்கும் காட்சி சித்தரிப்பு மையமாக இது நிறுவப்பட்டுள்ளது. காற்றின் தர அளவுருக்கள் நிர்ணயிக்கப்பட்ட தரத்தை மீறு பட்சத்தில், தானாக உருவாக்கப்படும் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல்கள் உடனடியாக தொழில்துறையினருக்கும், சம்பந்தப்பட்ட மண்டல இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களுக்கும் அனுப்பப்பட்டு, குறைபாடுகள் இருந்தால் அவற்றை சரிசெய்து உடனடியாக நடவடிக்கை எடுத்து தொழிற்சாலைகளின் சுய கண்காணிப்பு மற்றும் திருத்தம் ஆகியவற்றை உறுதி செய்கிறது.

இன்றைய நிலவரப்படி, அடுக்கு உமிழ்வு கண்காணிப்பு மற்றும் சுற்றுப்புற காற்றின் தரத்தை

கண்காணிப்பதற்காக 820 தொழில் நிறுவனங்கள் இந்த மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

மேலும், நீர் தர கண்காணிப்பு தொகுதியையும் வாரியம் இம்மையத்தில் இணைத்துள்ளது. தோல் பதனிடும் தொழிற்சாலைகள், எரிசாராய ஆலைகள், சர்க்கரை ஆலைகள், மருந்து மற்றும் பூச்சிக்கொல்லி உற்பத்தி நிறுவனங்கள், ஜவுளி தொழிற்சாலைகள் மற்றும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் போன்ற முக்கிய நீர் மாசுபாடு ஏற்படுத்தக்கூடிய நிறுவனங்கள் இந்த மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இணைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் தரம், நிகழ்நேர அடிப்படையில் கண்காணிக்கப்படுகிறது. இதுவரை 390 தொழிற்துறை நிறுவனங்கள் இந்த மையத்துடன் இணைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

## 5.2. நீர் மாசு கண்காணிப்பு முறைகள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மிகவும் மாசுபடுத்தும் 17 வகை / சிவப்பு– பெரிய தொழிற்சாலைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், பல்லடுக்கு ஆவியாக்கி (MEE), அஜீடேடட் தின் ஃபிலிம் ட்ரையர் (ATFD) / தரை மட்டத்திலிருந்து உயர் நிலையில் அமைக்கப்பட்ட சூரிய ஆவியாக்கும் கலன்கள் அமைத்து, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மறு உபயோகத்திற்கு பயன்படுத்தும் நோக்கத்துடன் பூஜ்ஜிய கழிவுநீர் வெளியேற்றும் அமைப்புகளை அமைக்க வலியுறுத்துகிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகள், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் அன்றாடக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவைகளின் செயல்பாடுகளை கண்காணித்து வருகிறது. மேலும், அன்றாடக் கழிவுநீர் மற்றும் தொழிற் கழிவுநீர் நிலம், நீர்நிலைகள் மற்றும்

கடலில் வெளியேற்றப்படுவதற்கு முன்னர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவிற்குள் சுத்திகரிக்கப்படுவதையும் கண்காணிக்கிறது.

**5.3. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (Common Effluent Treatment Plant – CETP)**

தமிழ்நாட்டில் சிறு தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் நோக்கில் கீழ்க்கண்ட பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளது:

| வ. எண் | தொழிற்சாலை வகை | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 13 |
| 2 | துணி சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் | 19 |
| 3 | மின் முலாம் பூசும் தொழிற்சாலைகள் | 2 |
| 4 | உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 1 |
| 5 | மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை | 1 |
| | **மொத்தம்** | **36** |

மேற்கண்ட, 19 சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளுக்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மட்டுமின்றி, உத்தேசிக்கப்பட்ட 10 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், நிறுவுவதற்கான இசைவாணையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வழங்கியுள்ளது. ஒன்றிய அரசின் ஜவுளித்துறை அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த செய்முறை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒன்றிய அரசின் ஜல்சக்தி அமைச்சகத்தின் "நடந்தாய் வாழி காவேரி" திட்டம் ஆகியவற்றின் நிதியுதவியை கோரியுள்ளது.

### 5.4. ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் உள்ள சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தில் கசிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

தமிழ்நாடு அரசு, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வணிகத் துறையின் 20.11.2023 நாளிட்ட அரசாணை எண்.218 வாயிலாக நாளொன்றுக்கு 2000

கிலோலிட்டர் கசிவுநீரை சுத்திகரிக்கும் திறன் கொண்ட கசிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஏற்படுத்திட உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த நிலையத்தில் ரூ.40 கோடி செலவில் நவீன தொழில்நுட்ப வசதியுடன் கூடிய பூஜ்ய கழிவுநீர் சுத்திகரிப்பு முறை அமல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் சிப்காட் தலா ரூ.10 கோடியும், சிப்காட் தொழில் கூட்டமைப்பு (ஜவுளி, தோல் பதனிடுபவர்கள் மற்றும் பொது தொழில்கள்) ரூ.20 கோடியும் வழங்கும். இந்த கசிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் சிப்காட் மூலமாக செயல்படுத்தப்படும்.

### 5.5. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் தற்போதைய நிலை

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் நிறுவப்படும் அனைத்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களும் (Sewage Treatment Plant) தமிழ்நாடு மாசு

கட்டுப்பாடு வாரியத்தால் சிவப்பு வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவையனைத்தும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் வழங்கப்படும் நிறுவுவதற்கான இசைவாணை (Consent to Establish) மற்றும் இயக்குதலுக்கான இசைவாணை (Consent to Operate) பெற வேண்டும்.

மாநிலத்தில் தற்போது, 119 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பாடு மற்றும் சோதனை ஓட்ட நிலையில் உள்ளன. இதில் 102 நிலையங்கள் வாரியத்திடம் இயக்குவதற்கான இசைவாணை மற்றும் 17 நிலையங்கள் நிறுவுவதற்கான இசைவாணை பெற்றுள்ளன.

தற்போது இயக்கத்தில் இருக்கும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை திறம்பட கண்காணிக்க "இணையவழி தொடர் கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு" (Online Continuous Effluent Monitoring System) மற்றும்

கைப்பேசி செயலி பயன்பாட்டை நிறுவுவதற்கான வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 5.6. சுத்திகரிக்கப்படாத கழிவுநீர், நீர்நிலைகளில் வெளியேற்றப்படுவதைத் தடுக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், பேரூராட்சி ஆணையரகம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் ஆகியவற்றிற்கு பாதாள சாக்கடை இல்லாத பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைப்பை நிறைவு செய்யவும், சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் ஆறுகளில் அல்லது நீர்நிலைகளில் வெளியேற்றப்படாமல் இருப்பதை உறுதி செய்ய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவி இயக்குவதற்கு வாரியத்தின் செல்லுபடியாகும் இசைவாணையை பெறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இசைவாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அல்லது வாரியத்தின் பிற அறிவுறுத்தல்களுக்கு இணங்காத

உள்ளாட்சி அமைப்புகளுக்கு வாரியத்தால் சுற்றுச்சூழல் இழப்பீடு விதிக்கப்படுகிறது.

நீர்நிலைகளில் முறைகேடாக கழிவுநீரை வெளியேற்றும் டேங்கர் லாரிகளின் பதிவு எண்களை ரத்து செய்ய போக்குவரத்து துறைக்கு வாரியம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அக்டோபர் 2024 வரை இவ்வாறு முறைகேடாக செயல்பட்ட 44 லாரிகளின் பதிவு எண்களை ரத்து செய்ய வாரியம் பரிந்துரை செய்துள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளிடம் பதிவு செய்யப்பட்ட கழிவுநீர் டேங்கர் லாரிகளில் ஜிபிஎஸ் (GPS) கண்காணிப்புடன் கூடிய டிஜிட்டல் லாக் (Digital Lock) அமைப்பை நிறுவவும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், பேரூராட்சி ஆணையரகம் மற்றும் நகராட்சி நிர்வாக

இயக்குநரகம் ஆகியவற்றிற்கு வாரியத்தால் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

**5.7 சுற்றுச்சூழல் கண்காணிப்பில் ஆய்வகங்களின் பங்கு:**

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பல்வேறு நிதி உதவி பெற்ற திட்டங்களின் ஒரு பகுதியாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 8 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள், 10 மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் என மாநிலம் முழுவதும் 18 ஆய்வகங்களை நிறுவியுள்ளது. இதன் மூலம் நீர், காற்று மற்றும் ஒலி அளவீடுகளை ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய வழிமுறைகளின்படி கண்காணித்து வருகிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் "தேசிய சோதனை மற்றும் அளவீட்டு ஆய்வகங்களுக்கான" அங்கீகாரத்தினை பெற்றுள்ளது. மேலும், தொழில்சார்

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மேலாண்மை அமைப்புகளுக்கான சர்வதேச தரநிலை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக சான்றிதழ் பெற்றுள்ளது. சென்னையில் உள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், 2023 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தின் அனைத்து மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களிலும் நுண்ணுயிரியல் பகுப்பாய்வு பிரிவு 2024 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, அனைத்து மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களிலும் நுண்ணுயிரியல் பகுப்பாய்வு பிரிவு நிறுவுவதற்கான பணிகள் நடைபெற்றுவருகின்றன. 2024 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட சுற்றுச் சூழல் ஆய்வகங்கள் மொத்தம் 5,692 நுண்ணுயிரியல்

மாதிரிகளை பகுப்பாய்வு செய்துள்ளன. ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் (CPCB) வழிகாட்டுதல்களின்படி, தற்போது மொத்த கோலிஃபார்ம்கள் (TC), மல கோலிஃபார்ம்கள் (FC) மற்றும் ஸ்ட்ரெப்டோகாக்கி (Streptococci) போன்ற நுண்ணுயிரியல் அளவுருக்கள், வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களால் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

### 5.8. நீர்நிலைகள் கண்காணிப்பு

#### 5.8.1. தேசிய நீர்தர கண்காணிப்பு திட்டம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தேசிய நீர்தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் உள்நாட்டு நீர் நிலைகளின் நீர் தரத்தை 70:30 (70% வாரிய நிதி மற்றும் 30% ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய நிதி) என்ற விகித நிதியுதவியுடன் கண்காணித்து வருகிறது. மாதாந்திர/அரையாண்டு மாதிரிகளை சேகரிப்பதன் மூலம் 2024–25 ஆம் ஆண்டில் 158 இடங்களில்

கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இவைகளின் விரிவான தகவல்கள் பின்வருமாறு;

| நீர்நிலை | எண்ணிக்கை | இருப்பிட விவரங்கள் |
|---|---|---|
| ஆறுகள்– 12 | 71 | காவிரி, தாமிரபரணி, பவானி, வைகை, பாலாறு, திருமணிமுத்தாறு, சரபங்கா, வெண்ணாறு, வஷிஸ்டா, அமராவதி, கூவம் மற்றும் அடையாறு. |
| ஏரிகள்–8 | 8 | உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வீராணம், போரூர், பூண்டி, பழவேற்காடு மற்றும் செங்குன்றம். |
| நிலத்தடி நீர்–8 | 22 | ஈரோடு, நாமக்கல், கரூர், சேலம், திருநெல்வேலி, திருச்சி, தூத்துக்குடி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் |
| கடல் நீர் –14 கடலோர மாவட்டங்கள் | 34 | கடலோர பகுதி – 32<br>கடற்கரை – 2 |
| கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் | 16 | சென்னை, கடலூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், ஈரோடு (பெருந்துறை) மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள் |
| வடிகால் | 4 | சென்னை |
| கால்வாய் | 2 | சென்னை |
| குளம் | 1 | திருவள்ளூர் |
| **மொத்தம்** | **158** | |

இவ்வாறு சேகரிக்கப்பட்ட கடல்நீர், ஆற்றுநீர், ஏரிநீர் மற்றும் நிலத்தடிநீர் மாதிரிகள், பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வறிக்கை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளம் (https://tnpcb.gov.in/water-quality.php) மற்றும் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளம் (https://cpcb.nic.in/nwmp-data/) ஆகியவற்றில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

### 5.8.2. மாசடைந்த ஆறுகளின் பகுதிகள்

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம், தேசிய நீர்தர கண்காணிப்புத் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் நாடு முழுவதும் 311 ஆறுகளின் பகுதிகளை மாசடைந்த பகுதிகள் என 2022 ஆம் ஆண்டில் அறிவித்துள்ளது. ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழகத்தில் பத்து மாசடைந்த ஆறுகளின் பகுதிகளை உயிரிவேதியியல் ஆக்சிஜன்

தேவை BOD அளவின் அடிப்படையில் அடையாளம் கண்டு, ஐந்து பிரிவுகளாக பிரித்துள்ளது:

| வ. எண். | முன்னுரிமை வகுப்பு | (BOD mg/L) |
|---|---|---|
| 1. | I | > 30 |
| 2. | II | 20 – 30 |
| 3. | III | 10 – 20 |
| 4. | IV | 6 – 10 |
| 5. | V | 3 – 6 |

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் தமிழ்நாட்டில் அறிவிக்கப்பட்ட பத்து மாசடைந்த ஆறுகளின் விவரங்கள் மற்றும் முன்னுரிமைகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:

| வ. எண் | ஆற்றின் பெயர் | ஆற்றின் நீளம் (கி.மீ) | மாசுபட்ட ஆற்றின் பகுதிகள் | முன்னுரிமை வருடம் 2022 |
|---|---|---|---|---|
| 1. | சரபங்கா | 70 | தாத்தயம்பட்டி முதல் டி. கோனகாப்பாடி வரை -(15 கி.மீ) | II |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | திருமணிமுத் தாறு | 120 | சேலம் முதல் பாப்பாரப்பட்டி வரை – (15 கி.மீ) | I |
| 3. | வசிஷ்டா | 87 | மணி விழுந்தான் முதல் தியாகனூர் வரை –(10 கி.மீ) | I |
| 4. | காவேரி | 253 | மேட்டூர் முதல் மயிலாடுதுறை வரை– (200 கி.மீ) | III |
| 5. | பவானி | 217 | சிறுமுகை முதல் காளிங்கராயன் வரை– (60 கி.மீ) | V |
| 6. | தாமிரபரணி | 128 | பாப்பன் குளம் முதல் ஆறுமுகனேரி வரை – (80 கி.மீ) | IV |
| 7. | கூவம் | 70 | ஆவடி முதல் சத்யாநகர் வரை– (31.70கி.மீ) | I |
| 8. | அடையாறு | 42.50 | தாம்பரம் முதல் நந்தனம் வரை – (30.10கி.மீ) | I |
| 9. | அமராவதி | 282 | மடத்துக்குளம் முதல் கரூர் வரை– (108கி.மீ) | V |
| 10. | பாலாறு | 222 | கொடையாஞ்சி முதல் மரப்பட்டு வரை – (16.30கி.மீ) | V |

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் ஆறுகளில் கலப்பது, திடக்கழிவுகள் கொட்டுதல், போன்ற செயல்பாடுகள் காரணமாக ஆறுகள் மாசு அடைவதாக கண்டறியப்படுகிறது.

ஆகவே, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சம்பந்தப்பட்ட துறைகளுடன் இணைந்து, அனைத்து பத்து மாசுபட்ட ஆற்றின் பகுதிகளின் புனரமைப்புக்காகவும், கழிவுநீர் மற்றும் திடக்கழிவு கலப்பதை தடுக்கவும் செயல் திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு நகராட்சி நிர்வாக இயக்குநரகம், பேரூராட்சி இயக்குநகரம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநரகம்,

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்ந்தது. திட்ட நடவடிக்கையின் செயலாக்கம், ஒன்றிய நீர்வளத்துறைச் செயலாளர், ஜல் சக்தி அமைச்சகம், தமிழக அரசாங்கத்தின் தலைமைச்செயலாளர் மற்றும் நதிகள் சீரமைப்புக்குழுவின் கண்காணிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நதிகள் சீரமைப்புப் பணிகள் நடைபெறுவதாலும், தமிழக அரசு பல்வேறு பணிகளை மேற்கொண்டதாலும் சரபங்கா, காவிரி, பவானி, தாமிரபரணி, பாலாறு மற்றும் அமராவதி ஆற்றில் ஓடும் நீரின் தரம் கணிசமாக மேம்பட்டுள்ளது.

### 5.8.3. நிகழ்நேர நீர் தர கண்காணிப்பு நிலையங்கள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாநிலம் முழுவதும் எட்டு இடங்களில் நிகழ்நேர நீர் தர கண்காணிப்பு நிலையங்களை அமைத்துள்ளது. இந்த அமைப்புகள், நீர் தர அளவுகளான, கார அமிலத் தன்மை (pH), வெப்பநிலை, நீரில் கரைந்துள்ள ஆக்ஸிஜன் (Disolved

Oxygen), நீரின் கலங்கல் தன்மை (Turbidity), மின்கடத்துத் திறன்(Conductivity), மொத்தக் கரைந்த திடப்பொருள்கள் (TDS), மொத்த இடை மிதக்கும் திடப்பொருட்கள் (TSS), உயிரி வேதியியல் ஆக்சிஜன் தேவை (BOD), வேதியியல் ஆக்சிஜன் தேவை (COD) முதலியவற்றை அளவீடு செய்து வருகிறது.

நிகழ்நேர நீர் தர கண்காணிப்பு நிலையங்களிலிருந்து (RTWQM) பெறப்பட்ட நிகழ்நேர நீர் தரவுகளின்படி, ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் (CPCB) நியமிக்கப்பட்ட சிறந்த பயன்பாட்டிற்கான அளவுகோல்களின்படி, கண்காணிப்பு இடங்களில் உள்ள ஆற்று நீரின் தரம் பின்வரும் பிரிவின் கீழ் வருகிறது:

| ஆறுகள் | இருப்பிடம் | நீர் தர அளவுகோல்கள் |
|---|---|---|
| பவானி | மேட்டுப்பாளையம்<br>தி/ள். கேஜி டெனிம் லிமிடெட் | A<br>B |
| காலிங்கராயன் கால்வாய் | தி/ள்.பயனியர் மில்ஸ் பிராஸஸிங்<br>தி/ள்.எஸ்சிஎம் டெக்ஸ்டைல்ஸ் | E<br>E |
| நொய்யல் | தி/ள். கோகுல் டையிங் பேக்டரி<br>காசிபாளையம் பாலம் அருகில்<br>காசிபாளையம் பாலம் | E<br>E<br>D |

| | | |
|---|---|---|
| தென்பெண்ணை | சொக்கரசனபள்ளி | நிறுவப்பட்டுள்ளது (செயல்பட உள்ளது) |
| CPCB நீர் தர அளவுகோல்கள்<br>A – குடிநீர் ஆதாரம் வழக்கமான சுத்திகரிப்பின்றி ஆனால் நோய்கிருமி நீக்கியப்பின்.<br>B – வெளிபுறக் குளியல் (முறைபடுத்தப்பட்ட).<br>C – குடிநீர் ஆதாரம் வழக்கமான சுத்திகரிப்புடன் மற்றும் நோய்கிருமி நீக்கம்.<br>D – வன மற்றும் மீன்வள அபிவிருத்திக்கு உகந்தது.<br>E – பாசனம், தொழிற்சாலை குளிரூட்டும், கட்டுப்பாடுடன் கழிவுநீர் வெளியேற்றத்துடன் உகந்தவை | | |

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் உள்ள நீர் தரக் கண்காணிப்பு மையத்தில் மேற்கண்ட இடங்களிலிருந்து தரவுகள் பெறப்படுகின்றன. இவை மாசு ஏற்படுவதற்கான மூல ஆதாரங்களை கண்டறியவும் மற்றும் மாசு அளவினை குறைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவுகின்றன.

## 5.9. சுற்றுப்புற காற்றுதர கண்காணிப்பு இயங்குமுறை

### 5.9.1. தேசிய காற்றுதர கண்காணிப்பு திட்டம்

தேசிய சுற்றுப்புற காற்றின் தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாநிலத்தில் 85 நிலையங்களில் உள்ள முக்கிய நகரங்கள் மற்றும் தொழில்துறை கூடங்களில்

சுற்றுப்புற காற்றின் தரத்தை வாரத்திற்கு இரண்டு மாதிரிகள் என்ற அடிப்படையில் ஆண்டிற்கு 104 மாதிரிகள் சேகரித்து நுண்துகள்கள் ($PM_{10}$ மற்றும் $PM_{2.5}$), சல்பர்டை ஆக்ஸைடு ($SO_2$), நைட்ரஜன்டை ஆக்ஸைடு ($NO_2$) மற்றும் அம்மோனியா ($NH_3$) ஆகியகாரணிகள் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதலின் படி கண்காணிக்கப்படுகிறது.

| **தேசிய சுற்றுப்புற காற்றுத்தர கண்காணிப்பு திட்டம் – 85 நிலையங்கள்** |
|---|
| **தற்போதுள்ள 52 நிலையங்கள்**<br>சென்னை (8), கோயம்புத்தூர் (3), மதுரை (3), சேலம் (1), திருச்சி (5), தூத்துக்குடி (3), மேட்டூர் (2), கடலூர் (3), தருமபுரி (3), நாகர்கோவில் (3), பெரம்பலூர் (3), சிவகங்கை (3), திருவாரூர் (3), தேனி (3), விழுப்புரம் (3) மற்றும் திருவண்ணாமலை (3). |
| **2024–2025 ஆம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்பட்ட 33 நிலையங்கள்***<br>ஆலந்தூர் (2), கடலூர் (2), திண்டுக்கல் (2), வேலூர் (2), ஆவடி (2), திருப்பூர் (2), திருநெல்வேலி (2), தஞ்சாவூர் (2), சேலம் (2), நாகப்பட்டினம் (2), காஞ்சிபுரம் (2), ராஜபாளையம் (2), ஈரோடு (3) மற்றும் மேட்டூர் (1). மேலும் மேட்டுப்பாளையம், ஓசூர், தென்காசி, திருத்தணி மற்றும் திருவெங்காட்டில் தலா 1 கிராமப்புற நிலையம் உள்ளது.<br><br>*குறிப்பு: ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து மேற்குறிப்பிட்டுள்ள 33 நிலையங்களுக்கு நிலையக் குறியீடு பெறுவதற்காக தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம் காத்திருக்கிறது. |

காற்றின் தரக் குறியீடு (AQI) திருப்திகரமாக இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது (குறியீடு 51–100 என்ற AQI மதிப்புடன்).

**5.9.2. தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையங்கள்:**

சுற்றுப்புற காற்றின் தரத்தினை, தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாநிலத்தில் மொத்தம் 34 இடங்களில் தொடர் சுற்றுப்புற காற்று தரகண்காணிப்பு நிலையங்களை (Continuous Ambient Air Quality Monitoring System) அமைத்துள்ளது. இந்நிலையங்களின் மூலம் காற்றில் கலந்துள்ள 10 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள், 2.5 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண் துகள்கள், சல்பர்–டை–ஆக்ஸைடு, நைட்ரஜன்–டை–ஆக்ஸைடு, அமோனியா, ஓசோன், கார்பன் மோனாக்சைடு, பென்சீன், டொலுவின் மற்றும் சைலீன் ஆகிய வாயு காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. நிகழ்கால சுற்றுப்புற காற்றுதர

விபரங்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் வெளியிடப்படுகிறது. மேலும் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய மின்னணு காற்று தர தரவு அமைப்பிலும் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

### 5.9.3. காற்று தர குறியீட்டினை எட்டாத நகரங்கள் (Non–Attainment Cities)

நாடு முழுவதும் தேசிய காற்று தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில், காற்றில் 10 மைக்ரான் நுண் துகள்களின் (PM10) அளவு (60 $\mu g/m^3$) மேல் இருக்கும் மொத்தம் 130 நகரங்கள், காற்று தர குறியீட்டினை எட்டாத நகரங்கள் என ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் வகைப்படுத்தியுள்ளது.

நுண்துகள்கள், தர அளவுகளை விட அதிகமாக இருப்பதற்கு வாகன போக்குவரத்து, சாலைகளில் புழுதி மேலெழும்புதல், திடக் கழிவுகளை எரித்தல், கட்டுமான பணிகள் மேற்கொள்ளுதல், குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்களில் பயன்படுத்தப்படும் எரிபொருட்கள்

மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் காற்று மாசு ஆகியவை காரணங்கள் ஆகும்.

தமிழ்நாட்டில் தூத்துக்குடி, திருச்சி, மதுரை மற்றும் சென்னை நகரங்கள் காற்று தர குறியீட்டினை எட்டாத நகரங்கள் வரிசையில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேற்படி நகரங்களில் காற்று தரத்தினை மேம்படுத்தும் வகையில் மேற்கண்ட நகரங்களுக்கு திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து வாகனங்களிலிருந்து வெளியேறும் மிக அதிகமான புகை, கட்டுமான வேலைகள், பழுதடைந்த சாலைகள், மற்றும் புதைபடிவ எரிபொருட்களை எரித்தல் ஆகியவை தூசி (நுண் துகள்கள்) போன்ற காரணங்களால் ஏற்படும் காற்று மாசை கட்டுப்படுத்தும் நோக்கில் தேசிய தூய்மையான

காற்று திட்டத்தின் கீழ் காற்று மாசு குறைப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 30.07.2024 தேதியிட்ட அறிவிப்பின் மூலம், டீசல் ஜெனரேட்டர் (DG) செட்களை இயக்கும் அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கும், மறுசீரமைக்கப்பட்ட உமிழ்வு கட்டுப்பாட்டு சாதனத்தை நிறுவுவதன் மூலம் துகள்களைக் குறைக்க அறிவுறுத்தியுள்ளது.

இந்நகரங்களில் காற்றின் தரத்தினை மேம்படுத்துவதற்கான செயல் திட்டங்களை சம்பந்தப்பட்ட துறைகளால் நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றன.

### 5.9.4.விரிவான சுற்றுச்சூழல் மாசு குறியீடு (Comprehensive Environmental Pollution Index (CEPI)

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மாநிலத்தில் உள்ள எட்டு மாசுபட்ட தொழிற்சாலை பகுதிகளில் நிலம், காற்று மற்றும் நீர் தரத்தை பருவமழைக்கு

முந்தைய மற்றும் பிந்தைய காலங்களில் சோதனை மற்றும் அளவீடுகள் மேற்கொள்ளும் ஆய்வகங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் தேசிய வாரியத்தால் (NABL) அங்கீகரிக்கப்பட்ட அரசு சாரா ஆய்வகங்கள் மூலமாக கண்காணித்து வருகிறது.

விரிவான சுற்றுச்சூழல் மாசுக் குறியீடு (CEPI) மதிப்பெண் பின்வருமாறு:

| (CEPI) மதிப்பெண் | >70 | 60–70 | 50–60 | 40–50 |
|---|---|---|---|---|
| வகை | மிகக் கடுமையாக மாசுபட்ட பகுதி | கடுமையாக மாசுபட்ட பகுதி | பொதுவாக மாசுபட்ட பகுதி | மற்ற மாசுபட்ட பகுதி |

மேலும் 11 மாசுபட்ட தொழிற்சாலை பகுதிகளுக்கான CEPI மதிப்பெண்கள் பின்வருமாறு. 2023–2024 ஆண்டுக்கான கடுமையாக மாசுபட்ட பகுதிகள் (Critically Polluted Areas) மற்றும்

## மிகக்கடுமையாக மாசுபட்ட பகுதிகள் (Severely Polluted Areas) ஆகியவற்றிற்கான CEPI மதிப்பெண்கள்

| வ. எண் | இருப்பிடம் (PIA) | 2023 பருவமழைக்கு முன் | 2023 பருவமழைக்கு பின் | 2024 பருவமழைக்கு முன் |
|---|---|---|---|---|
| 1. | மணலி | 30.01 | 30.81 | 29.31 |
| 2. | ராணிப்பேட்டை | 18.37 | 18.42 | 14.96 |
| 3. | திருப்பூர் | 42.14 | 24.29 | 23.31 |
| 4. | மேட்டூர் | 23.75 | 20.99 | 20.99 |
| 5. | தூத்துக்குடி | 25.77 | 25.09 | 2.734 |
| 6. | கோயம்புத்தூர் | 35.26 | 21.38 | 4.317 |
| 7. | கடலூர் | 36.35 | 30.32 | 23.72 |
| 8. | ஈரோடு | 39.40 | 41.03 | 19.68 |
| 9. | பெருந்துறை | 25.85 | 19.76 | 7.80 |
| 10. | பள்ளிபாளையம் | 24.91 | 22.12 | 12.42 |
| 11. | குமாரபாளையம் | 22.69 | 12.42 | 12.42 |

11 மாசுபட்ட தொழிற்சாலை பகுதிகளில் 2023 பருவமழைக்கு முந்தைய மற்றும் 2024 பருவமழைக்கு முந்தைய பருவங்களின் விரிவான சுற்றுச்சூழல் மாசுக் குறியீடு (CEPI) மதிப்பெண்களை ஒப்பிடுகையில், சுற்றுச்சூழல் மாசுக் குறியீடு (CEPI < 40–50) மதிப்பெண்கள் குறைந்து காணப்படுகிறது.

### 5.10 சுற்றுப்புற ஒலி கண்காணிப்பு செயல் முறை

சுற்றுப்புற ஒலி கண்காணிப்பு திட்டத்தின் கீழ், ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியமானது அமைதி மண்டலம், குடியிருப்பு மற்றும் தொழில்துறை பகுதிகளை உள்ளடக்கிய கீழ்க்கண்ட பத்து இடங்களில் நிகழ்நேர சுற்றுப்புற ஒலி கண்காணிப்பு நிலையங்களை நிறுவியுள்ளது :-

| வ. எண் | இடம் | வகைப்பாடு | சராசரி மதிப்பு பகல் | தர நிலைகள் பகல் | சராசரி மதிப்பு இரவு | தர நிலைகள் இரவு |
|---|---|---|---|---|---|---|
| 1. | எழும்பூர் (கண் மருத்துவமனை) | அமைதி மண்டலம் | 65 | 50 | 64 | 40 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | தியாகராயா நகர் | வணிகப் பகுதி | 71 | 65 | 66 | 55 |
| 3. | பெரம்பூர் | வணிகப் பகுதி | 58 | 65 | 55 | 55 |
| 4. | கிண்டி | தொழில்துறை பகுதி | 66 | 75 | 65 | 70 |
| 5. | திருவல்லிக்கேணி | குடியிருப்பு பகுதி | 64 | 55 | 59 | 45 |
| 6. | அண்ணா நகர் | அமைதி மண்டலம் | 62 | 50 | 53 | 40 |
| 7. | பள்ளிக்கரணை | வணிகப் பகுதி | 67 | 65 | 67 | 55 |
| 8. | சௌகார்ப் பேட்டை | குடியிருப்பு பகுதி | 56 | 55 | 54 | 45 |
| 9. | வேளச்சேரி | குடியிருப்பு பகுதி | 69 | 55 | 60 | 45 |
| 10. | வண்ணாரப் பேட்டை | வணிகப் பகுதி | 69 | 65 | 67 | 55 |

இந்தத் தரவு நிகழ்நேர அடிப்படையில் ஒன்றிய மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு பதிவேற்றப்படுகிறது. கண்காணிப்புத் தரவுகளின் படி, சென்னை நகரில் சுற்றுப்புற இரைச்சல் அளவு நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகளை விட அதிகமாக இருப்பதை வெளிப்படுத்துகின்றன, இதற்கு முக்கிய காரணம் வாகனப் போக்குவரத்து மற்றும் கட்டுமான நடவடிக்கைகள் ஆகும்.

2024 ஆம் ஆண்டில், ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் ரூ.1.36 கோடி நிதி ஒதுக்கி, பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் (ஒவ்வொரு நகரத்திலும் 4 நிலையங்கள்) எட்டு ஒலி கண்காணிப்பு நிலையங்களை நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**5.11 பத்து லட்சத்திற்கு மேல் மக்கள்தொகை கொண்ட நகரங்களில் ஒலி வரைபட ஆய்வு**

தமிழ்நாட்டில் பத்து லட்சத்திற்கு மேல் மக்கள்தொகை கொண்ட நகரங்களான சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகியவற்றில், போக்குவரத்து சந்திப்புகள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், வணிகப் பகுதிகள் மற்றும் மாநகராட்சி எல்லைக்குள் உள்ள தொழில்துறை பகுதிகள் போன்ற அடையாளம் காணப்பட்ட இடங்களில் சென்சார் அடிப்படையிலான

கண்காணிப்பைப் பயன்படுத்தி புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள் / நிபுணர்களால் ஒலி வரைபட ஆய்வு மேற்கொள்ள வாரிய நிதியிலிருந்து ரூ.3.00 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

சென்னை நகரில் 60 இடங்களில் ஒலி வரைபட ஆய்வை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (மெட்ராஸ்) ரூ.50 லட்சம் செலவில் ஆய்வு பணிகளை மேற்கொண்டுவருகிறது.

உணர் கருவி அடிப்படையிலான நிகழ்நேர இணைப்புடன் கூடிய ஒலி மாசு கண்காணிப்பு கருவிகள் நிறுவப்பட்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு நிலையத்துடன் இணைக்கப்பட உள்ளது.

## 6. கழிவு மேலாண்மை செயல்முறை

### 6.1. மருத்துவக் கழிவு மேலாண்மை

மருத்துவக் கழிவுகள் என்பது மனிதர்கள் அல்லது விலங்குகளுக்கு சிகிச்சை அளித்தல், நோய்த்தடுப்பு மருந்துகள், ஆராய்ச்சி நடவடிக்கைகள், உயிரியல் ஆய்வகங்களில் உற்பத்தி மற்றும் சோதனை ஆகியவற்றின் போது உற்பத்தியாகும் கழிவுகள் ஆகும்.

மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள், 2016–ன் படி மருத்துவமனைகள் மற்றும் பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு இணைய வழி மூலம் வாரியம் அங்கீகாரம் வழங்குகிறது மற்றும் இவ்விதிகளின்படி பல்வேறு சாராம்சங்கள் கடைப்பிடிக்கப்படுவதையும் கண்காணிக்கிறது. இவ்விதிகள் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்க, அரசு, மாநில அளவில் ஆலோசனைக் குழு ஒன்றையும் அமைத்துள்ளது.

தமிழ்நாட்டில், இதுவரை 31,135 படுக்கை மற்றும் படுக்கையில்லா தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கும், கால்நடை நிறுவனங்கள், நோய்குறி ஆய்வகங்கள் (Pathological Labs), இரத்த சேமிப்பு வங்கிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வாரியம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அங்கீகாரத்தின் கால அளவு, இசைவாணையின் கால அளவுடன் ஒத்திசைக்கப்படுகிறது.

### 6.1.1. பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு வசதிகள்

பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள் மருத்துவக் கழிவுகளை தனிப்பட்ட மருத்துவ அமைப்புகளிடமிருந்து சேகரித்தல், கொண்டு செல்லுதல், சுத்திகரிப்பு மற்றும் அறிவியல் பூர்வமாக அகற்றுவதற்காக செயல்படுகின்றன. 2024 ஆம் வருடம் நாளொன்றுக்கு மருத்துவக் கழிவு உற்பத்தி 59.26 டன் ஆகும். தமிழ்நாட்டில் 12 பொது மருத்துவக்

கழிவு சுத்திகரிப்பு அமைப்புகளில் மொத்த நிறுவப்பட்ட திறன் நாளொன்றுக்கு 101.62 டன்களாகும். மேலும், 3 பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள் திருப்பூர், சிவகங்கை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் நிறுவப்பட உள்ளன.

## தமிழ்நாட்டில் அமைந்துள்ள பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகளின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களின் பெயர் மற்றும் முகவரி | செயல்திறன் எரிப்பான் (கிலோகிராம்/ நாள் ஒன்றுக்கு) | கிருமிகள் அழிப்பான் (கிலோகிராம்/நாள் ஒன்றுக்கு) | மாவட்டங்கள் |
|---|---|---|---|---|
| 1 | தி/ள். ஜி.ஜே.மல்டிகிளேவ் (இந்தியா) லிமிடெட், செங்கல்பட்டு மாவட்டம் | 10800 | 8000 | சென்னையின் ஒரு பகுதி மற்றும் காஞ்சிபுரம் |
| 2 | தி/ள். ரிசஸ்டைனபிலிட்டி ஐ.டபிள்யு.எம் சொல்யுஷன்ஸ் லிமிடெட், செங்கல்பட்டு மாவட்டம் | 4400 | 3240 | கடலூர், சென்னை (வ), காஞ்சிபுரத்தின் ஒரு பகுதி, திருவள்ளூர் |
| 3 | தி/ள் மெடிகேர் என்விரோ சிஸ்டம்ஸ், தஞ்சாவூர் மாவட்டம் | 3300 | 2000 | தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி, நாகப்பட்டனம், புதுக்கோட்டை சிவகங்கை, |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பெரம்பலூர் மற்றும் அரியலூர் |
| 4 | தி/ள். கென் பயோ லிங்ஸ் பிரைவேட் லிமிடெட், வேலூர் மாவட்டம் | 6000 | 3600 | வேலூர் மற்றும் திருவண்ணாம லை |
| 5 | தி/ள். ரிசஸ்டைனபிலிட்டி ஹெல்த்கேர் சொல்யுஷன்ஸ் லிமிடெட், சேலம் மாவட்டம் | 3300 | 825 | சேலம், நாமக்கல், ஈரோடு &கரூர் |
| 6 | தி/ள். டெக்னோதெர்ம் இண்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர் மாவட்டம் | 6000 | 9000 | கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் திருப்பூர் |
| 7 | தி/ள் அசப்டிக் சிஸ்டம் பயோ மெடிக்கல் வேஸ்ட் மெனேஜ்மென்ட் கம்பெனி, திருநெல்வேலி மாவட்டம் | 4000 | 3200 | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 8 | தி/ள். ரிசஸ்டைனபிலிட்டி ஹெல்த்கேர் சொல்யுஷன்ஸ் லிமிடெட் விருதுநகர் மாவட்டம் (தற்காலிகமாக செயல்பாட்டில் இல்லை) | 3300 | 1600 | மதுரை, விருதுநகர், திண்டுக்கல், தேனி மற்றும் ராமநாதபுரம் மாவட்டம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | தி/ள். கோவை பயோவேஸ்ட் மேனேஜ்மெண்ட் (பி) லிமிடெட், கோயம்புத்தூர் | 5500 | 4400 | கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் நீலகிரி |
| 10 | தி/ள். பாண்டிச்சேரி சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட், கடலூர் மாவட்டம் | 12000 | 2560 ($10.24\ m^3$) | கடலூர், விழுப்புரம், பெரம்பலூர், அரியலூர், கள்ளக்குறிச்சி |
| 11 | தி/ள். ரிசஸ்டைனபிலிட் டி ஐ.டபிள்யு.எம் சொல்யுஷன்ஸ் லிமிடெட், கிருஷ்ணகிரி மாவட்டம் | 6000 | 450 | தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி |
| 12 | தி/ள். ரிசஸ்டைனபிலிட் டி ஐடபுள்யூ சொல்யுஷன்ஸ் லிமிடெட், திருவள்ளூர் மாவட்டம் | 4000 | 1000 | சென்னை மற்றும் திருவள்ளூர் |

- மாநிலத்தில், தனிப்பட்ட மருத்துவ அமைப்புகளிலிருந்து பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு மருத்துவக் கழிவுகள் எடுத்துச் செல்லும் வாகனங்களின் இயக்கத்தினை உலகளாவிய நிலைப்படுத்துதல் அமைப்பின் மூலம்

கண்காணிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு இயக்கத்தில் உள்ளது.

### 6.2. மின்கலக்கழிவு மேலாண்மை

சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986–ன் கீழ் திருத்தம் செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டின் மின்கலக்கழிவு (மேலாண்மை) விதிகளை அறிவித்துள்ளது.

இந்த விதிகள் மின்கலன் உற்பத்தியாளர், முகவர், நுகர்வோர், சேகரிப்பு, பிரித்தல், போக்குவரத்து மற்றும் மறுசுழற்சி செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள பங்குதாரர்களுக்கும், வேதியியல், வடிவம், அளவு, எடை, பொருள் கலவை மற்றும் பயன்பாடு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து வகையான மின்கலன்களுக்கும் பொருந்தும்.

இவ்விதியின் படி, உற்பத்தியாளர் (தயாரிப்பாளர்கள், இறக்குமதியாளர்கள்) அவர்கள் சந்தையில் அறிமுகப்படுத்தும் பேட்டரிக்கு விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பின் (EPR) கடமைகளை மேற்கொள்ள வேண்டும் மற்றும் உற்பத்தியாளர் சேகரிப்பு மற்றும் மறுசுழற்சிக்கான இலக்குகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

மேலும் விதிகளின்படி, பேட்டரியை உற்பத்தி செய்பவர்கள், மறுசுழற்சி செய்பவர்கள் மற்றும் புதுப்பிப்பவர்கள் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தால் (CPCB) உருவாக்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட இணைய முகப்பில் (PORTAL) (https://eprbatterycpcb.in) பதிவு செய்ய வேண்டும். விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பின் (EPR) கடமைகளை நிறைவேற்றுவதில் உள்ள பொறுப்பு, கண்காணிப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு இந்த இணைய முகப்பு (PORTAL)

உதவுகிறது. இந்த இணைய முகப்பு (PORTAL) திருத்தம் செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டின் மின்கலக்கழிவு (மேலாண்மை) விதிகளை செயல்படுத்துவது தொடர்பான உத்தரவுகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு ஒற்றை புள்ளி தரவு களஞ்சியமாக செயல்படும்.

இதுவரை, திருத்தம் செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டின் மின்கலக்கழிவு (மேலாண்மை) விதிகள் படி 9 மின்கலக்கழிவு மறுசுழற்சி அமைப்புகள் மற்றும் 247 மின்கலக்கழிவு உற்பத்தியாளர்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தில் பதிவு செய்துள்ளனர். அதன் விவரங்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய வலைத்தளம் (https://tnpcb.gov.in) மற்றும் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வலைத்தளத்தில் உள்ளது. (www.cpcb.nic.in ), https://eprbatterycpcb.in.

மேலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) தயாரிப்பாளர்கள், மறுசுழற்சியாளர்கள் மற்றும்

புதுப்பிப்பாளர்களுக்கான விரிவான வழிகாட்டியாகச் செயல்படும் பேட்டரி கழிவு மேலாண்மைக்கான EPR வழிகாட்டு கையடக்க நூலை வெளியிட்டுள்ளது. இந்த கையடக்க நூல் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளத்தில் (https://tnpcb.gov.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**6.3. திடக்கழிவு மேலாண்மை**

வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் நடவடிக்கைகளால் உருவாகின்ற மக்கும் மற்றும் மக்காத கழிவுகள் திடக்கழிவுகளாகும். திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016–ன் திடக்கழிவுகளை மேலாண்மை செய்வது குறித்த உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்புகளை திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016–ல் வரையறுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் மொத்தம் 21 மாநகராட்சிகளும் 138 நகராட்சிகளும் மற்றும் 490 பேரூராட்சிகளும்

உள்ளன. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் படி, தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் நாளொன்றிற்கு 5 டன்களுக்கு மேல் திடக்கழிவுகள் உருவாகும் 232 உள்ளாட்சி அமைப்புகளுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன் படி, முறையாக பின்பற்றாத உள்ளாட்சி அமைப்புகளுக்கு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986, பிரிவு 5 இன் கீழ் இடைக்கால சுற்றுச்சூழல் இழப்பீட்டு தொகை செலுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு வருகிறது.

### 6.3.1. குப்பை கிடங்குகளில் உயிரி நிலப்பரப்பு மீட்டெடுத்தல் (Bio Mining)

திடக்கழிவுகள் மேலாண்மை விதிகளின்படி, உள்ளாட்சி அமைப்புகள் பழைய குப்பை கிடங்குகளில் உயிரி நிலப்பரப்பு மீட்டெடுத்தல் நடவடிக்கைகளை

மேற்கொண்டு நிலங்களை மீட்டெடுக்க வேண்டும். இதன்படி, 287 நெடுங்கால குப்பைக் கிடங்குகளில், உள்ளாட்சி அமைப்புகளால் குப்பைக் கழிவுகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதில் 171 இடங்களில் பணிகள் நிறைவடைந்துள்ளன. மற்றும் மீதம் உள்ள 120 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 952 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

### 6.4. பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை

அதிவிரைவு நகரமயமாக்கல், மக்கள் தொகை பெருக்கம், பொருளாதார நிலை மற்றும் தொழில்துறை வளர்ச்சி ஆகியவை பிளாஸ்டிக் கழிவுகளின் உற்பத்தி அதிகரிக்க காரணமாகின்றன.

நகர உள்ளாட்சி அமைப்புகளால் சமர்ப்பிக்கப்பட்ட 2023-24 ஆம் ஆண்டறிக்கையின் படி, தமிழ்நாட்டில் 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகளிலிருந்து நாளொன்றிற்கு

மொத்தம் 1758.90 டன் நெகிழிக் கழிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 86% (1529.97டன் / நாள்) கழிவுகள் சேகரிக்கப்பட்டு மறுசுழற்சி மற்றும் பிற நோக்கங்களுக்காக அனுப்பப்படுகிறது. சேகரிக்கப்பட்ட கழிவுகள் பின்னர் பிரிக்கப்பட்டு கழிவுகள் வளமீட்பு மையங்களுக்கு அனுப்பப்படுகின்றன, அங்கு அவை தரம் பிரிக்கப்பட்டு மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள், பதிவு செய்யப்பட்ட மறுசுழற்சியாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகள் சிமென்ட் உற்பத்தியாளர்களுக்கு இணைசெயலாக்கத்திற்கு அனுப்பப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், 2016–ன் கீழ், தமிழ்நாட்டில் 277 அங்கீகரிக்கப்பட்ட நெகிழிக் கழிவு மறுசுழற்சியாளர்கள் மற்றும் 38 அங்கீகரிக்கப்பட்ட மக்கும் நெகிழி தயாரிப்பாளர்கள் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தில் பதிவு செய்துள்ளனர்.

### 6.4.1. ஒரு முறை பயன்பாட்டிற்கு பிறகு தூக்கி எறியும் நெகிழிப் பொருட்கள் மீதான தடை

தமிழ்நாடு அரசு, 25.06.2018 நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசாணை எண்.84–ல், தடிமன் மற்றும் உருவளவு வரைமுறையின்றி நெகிழி தூக்குப்பைகள் உட்பட, ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் சில வகை நெகிழிப் பொருட்கள் பயன்படுத்த தடையினை அறிவித்தது. இத்தடையானது 01.01.2019 முதல் நடைமுறையில் உள்ளது.

இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலைமாற்ற அமைச்சகம், 12.08.2021 தேதியிட்ட அறிவிக்கையின் வாயிலாக, ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் 19 வகையான நெகிழிப் பொருட்களின் தயாரிப்பு, இறக்குமதி, இருப்பு வைத்தல், விநியோகம், விற்பனை மற்றும் உபயோகப்படுத்துதல்

மீதான தடையை அறிவித்தது. இத்தடையானது 01.07.2022 முதல் அமலில் உள்ளது.

தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களின் விபரங்கள்:

| **வ. எண்** | **தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்பாட்டிற்கு பிறகு தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள்** | **வ. எண்** | **தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்பாட்டிற்கு பிறகு தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள்** |
|---|---|---|---|
| 1. | உணவுப் பொருட்களை கட்ட உபயோபடுத்தப்படும் பிளாஸ்டிக் தாள் உறை | 15. | காது மொட்டுகளுக்கான பிளாஸ்டிக் குச்சிகள் |
| 2. | உணவு அருந்தும் மேஜையின் மீது விரிக்கப்படும் பிளாஸ்டிக் தாள் | 16. | பலூன்களுக்கான பிளாஸ்டிக் குச்சிகள் |
| 3. | பிளாஸ்டிக் தெர்மக்கோல் தட்டுகள் | 17. | மிட்டாய்களுக்கான பிளாஸ்டிக் குச்சிகள் |
| 4. | பிளாஸ்டிக் பூசப்பட்ட காகித தட்டுகள் | 18. | ஐஸ்கிரீம்களுக்கான பிளாஸ்டிக் குச்சிகள் |
| 5. | பிளாஸ்டிக் பூசப்பட்ட காகித குவளைகள் | 19. | அலங்காரத்திற்காக பயன்படுத்தப்படும் பாலிஸ்டிரீன் [தெர்மாகோல்] |
| 6. | பிளாஸ்டிக் குவளைகள் | 20. | பிளாஸ்டிக் முட்கரண்டிகள் |
| 7. | பிளாஸ்டிக் கோப்பைகள் | 21. | பிளாஸ்டிக் கரண்டிகள் |
| 8. | தெர்மக்கோல் குவளைகள் | 22. | பிளாஸ்டிக் கத்திகள் |
| 9. | பிளாஸ்டிக் பைகள் (எந்த அளவிலும், எந்த தடிமனாக இருப்பினும்) | 23. | மெல்லிய பிளாஸ்டிக் கொண்டு போர்த்தப்படும் அல்லது பேக்கிங் செய்யப்படும் இனிப்பு பெட்டிகள் |
| 10. | பிளாஸ்டிக் பூசப்பட்ட பைகள் | 24. | மெல்லிய பிளாஸ்டிக் கொண்டு போர்த்தப்படும் அல்லது பேக்கிங் செய்யப்படும் அழைப்பிதழ் அட்டைகள், |

| | | | |
|---|---|---|---|
| 11. | நெய்யாத பிளாஸ்டிக் தூக்குப் பைகள் | 25. | மெல்லிய பிளாஸ்டிக் கொண்டு போர்த்தப்படும் அல்லது பேக்கிங் செய்யப்படும் சிகரெட் பாக்கெட்டுகள் |
| 12. | பிளாஸ்டிக் தண்ணீர் பாக்கெட்கள் | 26. | 100 மைக்ரானுக்கு குறைவான பிளாஸ்டிக் அல்லது பிவிசி பேனர்கள் |
| 13. | பிளாஸ்டிக்காலான உறிஞ்சு குழாய்கள் | 27. | பிளாஸ்டிக் கிளறிகள் |
| 14. | பிளாஸ்டிக் கொடிகள் | 28. | பிளாஸ்டிக் தட்டுகள் |

### 6.4.2. பிளாஸ்டிக் தடை மீதான அமலாக்கம்

ஜனவரி 2019 முதல் மார்ச் 2025 வரை, தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களான நெய்யப்படாத தூக்குப்பைகள், நெகிழி தூக்குப்பைகள், தண்ணீர் பைகள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த 259 தொழிற்சாலைகளை மூடவும் மற்றும் மின் இணைப்புகளை துண்டிக்கவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் அடிக்கடி ஆய்வுகள் நடத்தப்பட்டு, ஒருமுறை பயன்படுத்தும் நெகிழியை பயன்படுத்துபவர்களுக்கு எதிராக அபராதம் விதிக்கப்படுகிறது. 2019 முதல் 16,94,945

சோதனைகள் நடத்தப்பட்டு, 2,563 டன் தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, ரூ.21.24 கோடி ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**6.4.3. சிறப்பு அமலாக்க நடவடிக்கைகள்**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒருமுறை பயன்படுத்தும் நெகிழித் தடையை கடுமையாக அமல்படுத்துவதற்கு, அக்டோபர் 2022 முதல் டிசம்பர் 2024 வரை ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுறுத்தல்களின்படி தெருவோர வியாபாரிகள், பூ மற்றும் பழக்கடைகள், உள்ளூர் சந்தைகள் மற்றும் மொத்த விற்பனை சந்தைகள், தொழில்துறை பகுதிகள் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான எல்லைகளில் சிறப்பு ஆய்வுகளை தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொண்டது.

இச்சிறப்பு ஆய்வின் போது, 93,272 நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றில் 25,660

விதிமீறல்களைக் கண்டறிந்து 141.446 டன் தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு ரூ.10.710 இலட்சம் அபராதத் தொகை உள்ளாட்சி அமைப்புகளால் வசூலிக்கப்பட்டது.

### 6.4.4. நெகிழித் தடை குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள்

கீழ்கண்ட நடவடிக்கைகள் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

- தடைசெய்யப்பட்ட நெகிழிப் பொருட்களை சேமித்தல், விநியோகம் செய்தல், கொண்டு செல்லுதல், விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவற்றைத் தடுப்பதை உறுதி செய்யும் பொறுப்பில் உள்ள மாவட்ட ஆட்சியர்களுடன் ஒருங்கிணைந்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனைத்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களும் விழிப்புணர்வு பிரச்சாரத்தினை

மேற்கொண்டு வருகின்றனர். பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு பிரச்சாரத்தில், வாகனப்பிரச்சாரம், பொதுமக்களுக்கு துண்டுப்பிரசுரங்கள் விநியோகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மாவட்ட அலுவலகங்கள், அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், வணிக நிறுவனங்கள் போன்றவற்றில் சுவரொட்டிகள் வைத்தல், மருத்துவமனைகள், உணவகங்கள், தொழிற்பேட்டைகள், வணிகவளாகங்கள், பேருந்து நிலையம், ரயில் நிலையம், திரையரங்குகள் போன்ற மக்கள் கூடும் பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டுதல், காட்சிப்படுத்துதல் போன்றவை அடங்கும்.

- ஒருமுறை பயன்படுத்தும் நெகிழியின் தீமைகள், ஒரு முறை பயன்பாட்டிற்கு பிறகு தூக்கி எறியப்படும் நெகிழிப் பொருட்கள் மீதான

தடையை அமல்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் மற்றும் அதை அகற்ற மக்களின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் கோரி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆங்கிலம் மற்றும் தமிழ் செய்திதாள்களில் செய்தி வெளியிட்டுள்ளது.

### 6.4.5. நெகிழி பொட்டலம் கட்டுவதற்கான விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (EPR)

விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பொறுப்பு (EPR), இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் 2022 இல் திருத்தப்பட்ட நெகிழிக் கழிவு மேலாண்மை விதிகள், 2016ன் கீழ் செயல்படுத்தப்படுகிறது. விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (EPR) செயல்முறையை சீராக்க, உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் வணிக குறியீட்டு உரிமையாளர்கள் (Brand Owners) தங்களின் நெகிழிப் பொட்டலக் கழிவுகளை மறுசுழற்சி, மறுபயன்பாடு அல்லது அவற்றின் வாழ்நாள் முடிவில்

அகற்றுதல் (நெகிழிக் கழிவிலிருந்து ஆற்றல் கொண்டு வருதல், எண்ணெய் தயாரித்தல், சாலை அமைக்க பயன்படுத்துதல், சிமெண்ட் தொழிற்சாலைகளில் இணை செயலாக்கத்திற்கு பயன்படுத்துதல்) போன்றவற்றின் மூலம் செயலாக்குவதை உறுதி செய்வது அவர்களின் பொறுப்பாகும்.

விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பொறுப் (EPR) வழிகாட்டுதல்களின்படி, உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் வணிக குறியீட்டு உரிமையாளர்கள் (Brand Owners), ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தால் (CPCB) உருவாக்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட ஆன்லைன் இணைய முகப்பின் (PORTAL) மூலம் பதிவு செய்ய வேண்டும். இந்தத் தளமானது விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பொறுப்பு (EPR) கடமைகளை எதிர்கொள்வதில்

பொறுப்புகூறல், கண்டறியும் தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த உதவுகிறது.

ஒன்று அல்லது இரண்டு மாநிலங்களில் செயல்படும் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் வணிக குறியீட்டு உரிமையாளர்கள், அந்தந்த மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களில் இருந்து பதிவைப் பெற வேண்டும் மற்றும் இரண்டுக்கும் மேற்பட்ட மாநிலங்களில் செயல்படும்/வர்த்தகம் செய்யும் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் வணிக குறியீட்டு உரிமையாளர்கள், ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து பதிவைப் பெற வேண்டும்.

உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், பிளாஸ்டிக் மூலப்பொருட்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் மைக்ரோ மற்றும் சிறியவகை உற்பத்தியாளர்களை மையப்படுத்தப்பட்ட இணைய

முகப்பில் பதிவு செய்வது 04, டிசம்பர் 2024 முதல் செயல்பாட்டுக்கு வந்தது.

நெகிழிக்கழிவினை முறைப்படுத்துபவர்கள் (Processors), தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில், ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் உருவாக்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட EPR வலைதளத்தில் (https://eprplastic.cpcb.gov.in/) பதிவு செய்து கொள்ள வேண்டும். உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் வணிக குறியீட்டு (Brand Owners) உரிமையாளர்கள், ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் EPR வலைதளம் மூலம் நெகிழிக்கழிவினை முறைப்படுத்துபவர்களிடமிருந்து, EPR சான்றிதழ்களை வாங்குவதன் மூலம் தங்கள் EPR கடமையை நிறைவேற்றுவர்.

இதுவரை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 944 உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் வணிக குறியீட்டு (Brand Owners)

உரிமையாளர்களுக்கும் மற்றும் 106 நெகிழிக்கழிவினை முறைப்படுத்துபவர்களுக்கும் (மறுசுழற்சியாளர்கள், மறுபயன்பாடு மற்றும் அகற்றுபவர்கள்) பதிவு வழங்கியுள்ளது.

### 6.4.6. மாநில அளவிலான சிறப்பு பணிக்குழு

ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிப் பொருட்கள் மீதான தடையை அமல்படுத்துவதைக் கண்காணிப்பதற்காக, 07.02.2022 அன்று அரசு, மாநில அளவிலான சிறப்புப் பணிக்குழுவை, தலைமைச் செயலர் தலைமையிலும் மற்றும் மாவட்ட அளவிலான பணிக்குழுவை மாவட்ட ஆட்சியர் / ஆணையர் (சென்னை பெருநகர மாநகராட்சி) தலைமையிலும் அமைத்துள்ளது. தமிழ்நாட்டில் இத்தடை மாபெரும் வெற்றியை அடைவதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ள, சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளும் சீரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 6.5. கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவு மேலாண்மை

கட்டுமானம் மற்றும் இடிமானக் (Construction & Demolition) கழிவுகள் மேலாண்மை 2016–ன் படி கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகளை முறையாக மேலாண்மை செய்யப்படுகின்றதா என்பதை உள்ளாட்சி அமைப்புகள் உறுதிசெய்ய வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில், கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கிடங்குகளில் நாளொன்றிற்கு தலா 400 டன் திறன் கொண்ட கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகளை கையாளும் இரண்டு அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகளைப் சேகரிப்பதற்காக 15 மண்டலங்களில் சேகரிப்பு மையங்களை மாநகராட்சி நிறுவியுள்ளது.

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதல்களின்படி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (CMDA), நகர் மற்றும் ஊரமைப்பு

இயக்குநரகம் (DTCP), பொதுப்பணித்துறை (PWD), தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் (TNHB), தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஆகியவை கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகளில் இருந்து வரும் பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டும் எனவும், நகராட்சி மற்றும் அரசு ஒப்பந்த பணிகளில் இதனை கட்டாயமாக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

**6.6 மின்னணு கழிவு மேலாண்மை:**

1986 ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மின்னணு கழிவு (மேலாண்மை) விதிகள், 2016 சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம், திருத்தியமைத்து, நவம்பர் 2022–ஐ மின்னணு கழிவு (மேலாண்மை) விதிகளை அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகள் ஏப்ரல் 1, 2023 முதல் அமலில் உள்ளன.

மின்கழிவுகளை சுற்றுச் சூழலுக்கு உகந்த முறையில் நிர்வகிக்கவும், மேலும் உற்பத்தியாளர்கள், தயாரிப்பாளர்கள், புதுப்பிப்பவர்கள் மற்றும் மறுசுழற்சி செய்பவர்கள் போன்றோரை மேம்படுத்தப்பட்ட விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பொறுப்பு (Extended Producer Responsibility) கீழ் கொண்டு வரவும் இவ்விதி வழிவகைசெய்கிறது. இவ்விதிகளின்படி மேற்கூறியோர் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தால் உருவாக்கப்பட்டுள்ள இணைய முகப்பில் (Portal) (https://eprewastecpcb.in) பதிவு செய்யவேண்டும். மேலும் காலாண்டு மற்றும் ஆண்டு அறிக்கைகளை இந்த இணையமுகப்பில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

திருத்தப்பட்ட மின்னனு கழிவு மேலாண்மை விதிகள், 2022 ன் படி இதுவரை மொத்தம் 14 மின்னனு கழிவு மறுசுழற்சி செயபவர்கள் மற்றும் 839 மின் மற்றும் மின்னனு உபகரணங்கள் தயாரிப்பாளர்கள்

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தில் பதிவு செய்துள்ளனர்.

### 6.7 தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மை

தீங்கு விளைவிக்கும் கழிவுகள், தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை தாண்டிய இயக்கம்) விதிகள், 2016–ன் படி நிர்வகிக்கப்படுகின்றன. இன்றைய நிலவரப்படி தீங்கு விளைவிக்கும் கழிவுகளை உருவாக்கும் 4825 தொழிற்சாலைகளை வாரியம் கண்டறிந்து, இந்த விதியின் கீழ் அங்கீகாரம் வழங்கியுள்ளது. தமிழகத்தில் 2023–2024 ஆம் ஆண்டு 13.19 இலட்சம் டன் தீங்கு விளைவிக்கும் கழிவுகள் உற்பத்தியாகியுள்ளன. அவற்றில் 1.09 இலட்சம் டன் (8.26%) கழிவுகள் நிலத்தில் பாதுகாப்பாக நிரப்பப்படக்கூடிய கழிவுகளாகும், 0.27 இலட்சம் டன் (2.05%) கழிவுகள் எரிப்பான் மூலமாக எரிக்கப்படுபவையாகவும், 7.43 இலட்சம் டன் (56.33%) கழிவுகள் மறுசுழற்சி

செய்யப்படுபவையாகவும், 4.39 இலட்சம் டன் (33.28%) பயன்படுத்தக் கூடியவையாகவும் உள்ளன.

**6.7.1 பொது தீங்கு விளைவிக்கும் கழிவு அகற்றும் வசதி (நிலத்தில் பாதுகாப்பாக கொட்டப்படக்கூடிய மற்றும் எரிப்பான் மூலமாக எரிக்கப்படும்)**

தீங்கு விளைவிக்கும் கழிவுகளை அறிவியல் பூர்வமாக சேகரித்து, சுத்திகரிப்பு செய்து, சேமித்து மற்றும் அகற்றும் மூன்று பொது தீங்கு விளைவிக்கும் கழிவு அகற்றும் வசதிகள் (HW–TSDFs)–ன் விவரங்கள் பின்வருமாறு:

| இருப்பிடம் | வசதி பற்றிய விவரங்கள் | | ஒவ்வொரு வசதியின் அங்கீகரிக்கப்பட்ட திறன் (டன்களில்) | ஒட்டு மொத்தமாக அகற்றப்பட்ட அபாயகரமான கழிவுகளின் விவரம் (டன்களில்) |
|---|---|---|---|---|
| | வசதியின் வகை | தொடங்கப்பட்ட ஆண்டு | | |
| கும்மிடிப்பூண்டி திருவள்ளூர் மாவட்டம் | நிலப்பரப்பில் நிரப்புதல் | நவம்பர் 2007 | 3 லட்சம் | 8.44 லட்சம் |
| | எரியூட்டல் | நவம்பர் 2009 | 0.12 லட்சம் | 0.49 லட்சம் |
| | மறு பயன்பாடு | மார்ச் 2023 | 0.50 லட்சம் | 0.013 லட்சம் |
| விருதுநகர் மாவட்டம் | நிலப்பரப்பில் நிரப்புதல் | டிசம்பர் 2016 | 2.4 லட்சம் | 1.14 லட்சம் (31.3.2023 முதல் செயல்படவில்லை) |
| | மறு பயன்பாடு | ஏப்ரல் 2022 | 0.1 லட்சம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி மாவட்டம் | நிலப்பரப்பில் நிரப்புதல் | ஜூன் 2023 | 0.909 லட்சம் | 0.092 லட்சம் |
| | மறு பயன்பாடு | ஜூன் 2023 | 0.303 லட்சம் | -- |

## 6.7.2 தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு

### 6.7.2.1 சிமெண்ட் ஆலைகளில் அபாயகரமான கழிவுகளை இணை செயலாக்கம் செய்தல்

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதலின்படி, சிமெண்ட் சூளைகளில் தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவுகளை இணை செயலாக்கத்திற்கான (Co–Processing) மூலப்பொருளாகவோ அல்லது எரிசக்தி மீட்புக்கான எரிபொருளாகவோ பயன்படுத்த வாரியம் அனுமதித்துள்ளது. குறிப்பிடப்பட்ட இணக்க அளவுகோல்களுக்கு உட்பட்டு, 15 சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு, ஆண்டுதோறும் 14.63 லட்சம் டன்கள் பயன்படுத்தக்கூடிய கழிவுகளை சிமெண்ட்

சூளைகளில் இணைச் செயலாக்கம் செய்ய அபாயகரமான மற்றும் பிற கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை தாண்டிய இயக்கம்) விதிகள், 2016ன் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2023-24 ஆம் ஆண்டில், சுமார் 2.90 லட்சம் டன்கள் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை மாற்று மூலப்பொருளாகவோ அல்லது மாற்று எரிபொருளாகவோ மாற்றப்பட்டு தமிழ்நாட்டின் பல்வேறு சிமெண்ட் தொழிற்சாலைகளில் இணை செயலாக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 6.7.2.2 தீங்கு விளைவிக்கும் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் தொழிற்சாலைகள்

வாரியம், மொத்தம் 107 தொழிற்சாலைகளுக்கு 7 வகையான தீங்குவிளைவிக்கும் கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கான அங்கீகாரத்தை

வழங்கியுள்ளது. அவற்றின் விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | மறுசுழற்சி செய்யப்பட்டும் கழிவுகளின் வகைப்பாடு | அங்கீகாரம் வழங்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | அங்கீகாரம் கொடுக்கப்பட்ட அளவு (ஆண்டு ஒன்றுக்கு டன்களில்) |
|---|---|---|---|
| 1 | பித்தளை கழிவுகள் | 2 | 925.00 |
| 2 | துத்தநாகக் கழிவுகள் | 8 | 9535.60 |
| 3 | தாமிரம் கலந்த கழிவுகள் | 10 | 48780.00 |
| 4 | காரியம் கழிவுகள் மற்றும் காரிய பேட்டரிகள் | 23 | 386011.35 |
| 5 | பெயின்ட் கழிவுகள் | 3 | 3280.00 |
| 6 | பயன்படுத்தப்பட்ட எண்ணெய் | 34 | 130371.48 |
| 7 | கழிவு எண்ணெய் | 27 | 82694.49 |
| | **மொத்தம்** | **107** | **661597.92** |

### 6.7.2.3 தீங்கு விளைவிக்கும் கழிவுகளை முன்–செயலாக்கம் செய்யும் தொழிற்சாலைகள்

சிமெண்ட் சூளைகளில் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை இணை செயலாக்கத்தை ஊக்குவிப்பதற்காக, 9 முன்–செயலாக்க வசதிகளுக்கு (Preprocessing facility) தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவுகளை முன்கூட்டியே செயலாக்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன, இந்த நிறுவனங்கள் இணை செயலாக்கத்திற்கு ஏற்றவாறு கழிவுகளை கொண்டு ஒருமைப்படுத்தப்பட்ட கலவையை உருவாக்குகிறது. இவை சிமெண்ட் சூளைகளில் மூலப்பொருளுக்கு மாற்றாக அல்லது துணை எரிபொருளாக நேரடி பயன்பாட்டில் உபயோகப்படுத்தப்படுகிறது. இந்த வசதிகள் 2023–2024–இல் 88,511 டன் தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவுகளை முன்கூட்டியே செயலாக்கி, சிமெண்ட் தொழிற்சாலைகளில் இணை செயலாக்கத்திற்கு அனுப்பியுள்ளன.

### 6.7.2.4 தீங்கு விளைவிக்கும் கழிவுகளை மறு பயன்பாடு செய்யும் தொழிற்சாலைகள்


வாரியம் கழிவுகளை மறுபயன்பாடு செய்வதற்கு 38 தொழிற்சாலைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | மறு பயன்பாட்டிற்கு உகந்த தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் | அங்கீகாரம் வழங்கப்பட்ட வசதிகள் | அங்கீகாரம் வழங்கப்பட்ட அளவு (ஆண்டு ஒன்றுக்கு டன்களில்) |
|---|---|---|---|
| 1 | பயன்படுத்தப்பட்ட கரைப்பான்கள் (Spent Solvent) | 9 | 20956.0 |
| 2 | பயன்படுத்தப்பட்ட அமிலங்கள் (Spent Acid) | 2 | 15600 |
| 3 | பயன்படுத்தப்பட்ட டிரம்ஸ் மற்றும் கொள்கலன்கள் (Contaminated Barrels and Conatiners) | 20 | 46215.0 |
| 4 | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய (ETP) கசடுகள் | 7 | 181545 |
| | **மொத்தம்** | **38** | **264316.0** |

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாடு செய்யக்கூடிய தொழிற்சாலைகளை அதிக எண்ணிக்கையில் ஊக்குவித்து வருவதால், நிலத்தில்

நிரப்பக்கூடிய / எரிக்கக்கூடிய கழிவுகளின் அளவு குறைந்துள்ளது மற்றும் மறுசுழற்சி செய்தல் மற்றும் மறு பயன்பாடு செய்யக்கூடிய கழிவுகளின் அளவு பல ஆண்டுகளாக அதிகரித்துள்ளது. 2023–24 ஆம் ஆண்டில் (அ) மறுசுழற்சி செய்தல் மற்றும் மறு பயன்பாடு செய்யக்கூடிய கழிவுகள், (ஆ) நிலத்தில் பாதுகாப்பாக நிரப்பப்படக்கூடிய கழிவுகள் / எரிப்பான் மூலமாக எரிக்கப்படும் கழிவுகளின் போக்கைக் காட்டும் வரைபடங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:



**6.7.2.5 பயன்படுத்திய எண்ணெய்க்கான விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (EPR).**

ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEF&CC) அபாயகரமான மற்றும் பிற கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை தாண்டிய இயக்கம்) திருத்த விதிகள், 2023 இன் கீழ் பயன்படுத்தப்பட்ட எண்ணெய்க்கான விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (Extended Producer Responsibility EPR) தொடர்பாக 18.09.2023 தேதியிட்ட அறிவிப்பில் வெளியிட்டுள்ளது. பயன்படுத்தப்பட்ட எண்ணெய்க்கான EPR–க்கான இணையவழி முகப்பினை (PORTAL) ஒன்றியமாசு கட்டுப்பாடு வாரியம் (CPCB) https://eprusedoil.cpcb.gov.in என்ற இணையதளத்தில் உருவாகியுள்ளது. இந்த இணையதளம் 24.06.2024 முதல் செயல்பாட்டில் உள்ளது. இதில் உற்பத்தியாளர்கள், சேகரிப்பு முகவர்கள், மறுசுழற்சி செய்பவர்கள் மற்றும்

பயன்படுத்திய எண்ணெய் இறக்குமதியாளர்கள் போன்ற அனைத்து பங்குதாரர்களும் பதிவு செய்ய வேண்டும். EPR இலக்கின்படி, 2024–2025 ஆம் ஆண்டில், பங்குதாரர்கள் முந்தைய ஆண்டில் பெறப்பட்ட பயன்படுத்தப்பட்ட எண்ணெயில் 5 சதவீதத்தை மறுசுழற்சி செய்ய வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, 4 உற்பத்தியாளர்கள் மற்றும் 4 பயன்படுத்திய எண்ணெய் மறுசுழற்சி செய்பவர்கள் போர்ட்டலில் பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளனர்; மற்றும் 2 உற்பத்தியாளர் மற்றும் ஒரு பயன்படுத்திய எண்ணெய் மறுசுழற்சியாளருக்கு EPR சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது

**6.7.3 கலப்பு உப்பின் பயன்பாடு:**

**6.7.3.1 ஜவுளி தொழிற்சாலைகள்**

- தமிழ்நாட்டில், ஜவுளி தொழிற்சாலைகளின் பூஜ்ய கழிவுநீர் சுத்திகரிப்பு (ZLD) அமைப்பிலிருந்து

பெறப்பட்ட சுமார் 2,07,605.053 டன் கலப்பு உப்புகள் தனி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் வளாகத்தில் ஊடுருவாத தரையுடன் மூடப்பட்ட கொட்டகைகளில் சேமிக்கப்படுகின்றன. இவ்வாறு சேகரிக்கப்பட்டுள்ள அடர் கலவை உப்பினை சுத்திகரிப்பு செய்வதற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறையை (Standard Operating Procedure) ஒன்றிய மாசுகட்டுப்பாடு வாரியம் வழங்கியுள்ளது. இராமநாதபுரத்தில் ஒரு நிறுவனமானது இதற்கான அமைப்பினை நிறுவி, வாரியத்தால் 31.03.2028 வரை செல்லத்தக்க இயக்குவதற்கான இசைவாணையை பெற்றுள்ளது. இதுவரை 18707.465 டன் அடர்கலவை உப்பானது சாயத் தொழிற்சாலைகளிலிருந்து பெறப்பட்டு, இந்நிறுவனம் அதனை மீண்டும் சுத்திகரிப்பு செய்யவுள்ளது.

### 6.7.3.2 தோல் பதனிடும் தொழிற்சாலைகள்

தமிழ்நாட்டில், தோல் பதனிடும் ஆலைகளின் பூஜ்ய கழிவுநீர் சுத்திகரிப்பு (ZLD) முறையில் உற்பத்தியான சுமார் 1,27,773.64 மெட்ரிக் டன் கலப்பு உப்பு தொழிற்சாலைகள் / பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் வளாகங்களில் பாதுகாப்பாக சேமிக்கப்பட்டுள்ளன. தோல் பதனிடும் ஆலைகளின் கலப்பு உப்பைப் பயன்படுத்துவதற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறையை (SOP) ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தால் இதுவரை வெளியிடப்படவில்லை. கலப்பு உப்பை சுத்திகரிக்க, பொது உப்பு சுத்திகரிப்பு நிலையத்தை உள்ளடக்கிய மேம்படுத்தும் பணிகளுக்கான முன்மொழிவினை சமர்ப்பித்து, ஒன்றிய அரசிடமிருந்து தி/ள்.வானிடெக் லிமிடெட் நிறுவனம் ஒப்புதல் பெற்றுள்ளது.

### 6.7.4 தேசிய தீங்கு விளைவிக்கும் கழிவு கண்காணிப்பு அமைப்பு (NHWTS)

நாடு முழுவதும் உள்ள தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் உற்பத்தி, நகர்வு, சேர்த்து வைத்தல், மறுசுழற்சி, பயன்பாடு மற்றும் அகற்றல் ஆகியவற்றைக் கண்காணிப்பதற்காக ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியம் "தேசிய தீங்கு விளைவிக்கும் கழிவு கண்காணிப்பு அமைப்பை (NHWTS)" உருவாக்கியுள்ளது. இது சம்பந்தமாக, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தமிழ்நாட்டில் உள்ள தீங்கு விளைவிக்கும் கழிவுகளை உருவாக்கும் தொழிற்சாலைகளை திறம்பட கண்காணிப்பதற்கு தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

### 6.7.5 பாதிக்கப்பட்ட தளத்தை புனரமைத்தல்

#### 6.7.5.1 தி/ள். இந்துஸ்தான் யூனிலிவர் லிமிடெட், கொடைக்கானலல்

கொடைக்கானலில் 1984 முதல் 2001 ஆண்டு வரை தி/ள். இந்துஸ்தான் யூனிலிவர் லிமிடெட் என்ற

தொழிற்சாலை பாதரசத்தை உபயோகித்து தெர்மாமீட்டர் உற்பத்தி செய்து வந்தது. 2001–ஆம் ஆண்டு, அதன் செயல்பாட்டினால், 17858 சதுர மீட்டர் பரப்பளவு பாதரசத்தால் மாசுபட்டது தெரியவந்தது. அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில், அறிவியல் நிபுணர் குழு, தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் (NEERI) மற்றும் ஒன்றியமாசு கட்டுப்பாடு வாரியம் (CPCB) மூலம், சீரமைப்புத் தரம் 20mg/Kg என நிர்ணயிக்கப்பட்டது. மேலும், மண் சீரமைப்பு மார்ச் 2021 முதல் பின்வரும் ஐந்து நிலை பணிகள் (மண் அகழ்வு, சலவை செய்தல், மறுசீரமைப்பு, ஒரே மாதிரியாக மாற்றுதல் மற்றும் நிரப்புதல்). தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் மண் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அறிவியல் நிபுணர் குழு உறுப்பினர்கள், ஒன்றியமாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம்

அதிகாரிகளின் கண்காணிப்பு மற்றும் பரிந்துரையின் கீழ் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சீரமைப்புப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

**6.7.5.2 தி/ள். தமிழ்நாடு குரோமேட்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் (டிசிசிஎல்) நிறுவனம் ராணிப்பேட்டை**

தி/ள். தமிழ்நாடு குரோமேட்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் (டிசிசிஎல்) எள்ற நிறுவனம் வாலாஜா வட்டம், வேலூர் மாவட்டம், ராணிப்பேட்டையில், 1975 ஆம் ஆண்டு அரசால் நிறுவப்பட்டு, இறுதியாக 1995 இல் மூடப்பட்டது. அதன் செயல்பாட்டின் போது, உருவான சுமார் 2.2 இலட்சம் டன் குரோமியம் கழிவுகள் வளாகத்தின் பின்புறத்தில் 2 ஹெக்டேர் பரப்பளவில் திறந்த நிலத்தில் கொட்டப்பட்டன.

இடைக்கால தீர்வு நடவடிக்கைகளை செயல்படுத்த சம்பந்தப்பட்ட தளத்தில் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை பாதுகாப்பன முறையில்

மூடுதல், வடிகால் வலையமைப்பு அமைத்தல், மழைநீர் சேகரிப்புக்கான சேகரிப்பு குளம் அமைத்தல் மற்றும் புதிய எல்லைச் சுவர் கட்டுதல் என மொத்தம் மதிப்பிடப்பட்ட ரூ. 15 கோடி செலவில் இப்பணிகளை செயல்படுத்த திட்டமிடப்படுள்ளது.

திரு/ள்.சென்னை சுற்றுச்சூழல் மேலாண்மை நிறுவனம் (CEMCOT) சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கான நிறுவனத்தினை கண்டறிவதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரும் பணி நடைபெற்று வருகிறது.

**6.8 டயர் கழிவுக்கான விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (EPR)**

ஒன்றிய மாசு கட்டுப்பாட்டு வாரியம், தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை தாண்டிய இயக்கம்) திருத்த விதிகள், 2022–ன் கீழ் டயர் கழிவுகளுக்கான விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புக்காக (EPR) ஆன்லைன்

மையப்படுத்தப்பட்ட இணைய முகப்பினை (PORTAL) அதனுடைய வலைதளத்தில் (www.cpcb.nic.in) உருவாக்கியுள்ளது. டயர் உற்பத்தியாளர்கள், மறுசுழற்சி செய்பவர்கள் மற்றும் மறுஉருவாக்கம் செய்பவர்கள் மேற்கண்ட இணைய முகப்பில் பதிவு செய்ய வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரை, விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (EPR) இணைய முகப்பில் 25 டயர் உற்பத்தியாளர்கள் விண்ணப்பித்து, 19 பேர் சான்றிதழ் பெற்றுள்ளனர். மேலும், 42 மறுசுழற்சியாளர்கள் விண்ணப்பித்து 31 பேர் சான்றிதழ் பெற்றுள்ளனர்.

**7. சட்ட அமலாக்க அமைப்பு**

பல்வேறு சுற்றுச்சூழல் சட்டங்களின் கீழ், தவறு செய்யும்/தவறும் தொழில் நிறுவனுங்களுக்கு எதிராக, நீதிமன்றத்தில் புகார்களைத் தாக்கல் செய்யவும், மூடல் உத்தரவுகளை வழங்கவும், மின் விநியோகத்தை

நிறுத்தவும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அதிகாரம் உள்ளது.

**மேல்முறையீட்டு ஆணையம்**

சென்னையில் உள்ள மேல்முறையீட்டு ஆணையம் 2000 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உத்தரவுகளுக்கு எதிராக தொழிற்சாலைகள் அளிக்கும் மேல்முறையீடுகளை இவ்வாணையம் கையாள்கிறது.

**தேசிய பசுமை தீர்ப்பாயம்**

சென்னையில் உள்ள தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் (NGT) தென் மண்டலம், மாநிலத்தில் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்பான வழக்குகளை கையாள 2012 முதல் செயல்பட்டு வருகிறது.

**7.1 நிகழ்நிலை சட்ட வழக்கு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (OLMMS)**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது கீழ்கண்ட பல்வேறு நீதிமன்றங்களில், தாக்கல் செய்யப்படும்

வழக்குகளை கண்காணிக்க நிகழ்நிலை சட்ட வழக்கு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பை (OLMMS) உருவாக்கி செயல்படுத்தி வருகிறது.

1. மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றம்
2. மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம்
3. மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு
4. மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம்
5. மேல்முறையீட்டு ஆணையம்

நவம்பர் 2022 முதல் அனைத்து வழக்குக் கோப்புகளும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மென்பொருள் மூலம் மட்டுமே தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தால் செயலாக்கப்பட்டு வருகிறது. இந்த மென்பொருள் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தின் சட்ட நடவடிக்கைகளை திறம்பட நிர்வகிப்பதற்கும், தீர்ப்புகள் மீது பெறப்பட்ட தடை ஆணைகள் மற்றும் சரியான

நேரத்தில் தீர்ப்புகளை செயல்படுத்தவும் பெரிதும் உதவுகிறது.

### 8. இதர செயல்பாடுகள்

### 8.1 சுற்றுச்சூழல் பயிற்சி நிறுவனம்

சுற்றுச்சூழல் பயிற்சி நிறுவனம் (ETI) 1994–ல் டேனிஷ் ஆதரவுடன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் நிறுவப்பட்டது. இது மாசு கட்டுப்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான சிறப்பு கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் விரிவான பயிற்சி திட்டங்கள் வாரிய அதிகாரிகள், தொழில்துறை பிரதிநிதிகள், நகராட்சி ஊழியர்கள், சார்நிலை அமைப்புகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியோருக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, சுற்றுச்சூழல் சட்டங்கள், விதிகள் மற்றும் சமீபத்திய சுற்றுச்சூழல் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்த

அவர்களின் திறமையை மேம்படுத்துதலே இதன் நோக்கமாகும்.

ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை, இந்நிறுவனம் 231 வாரிய அதிகாரிகளுக்காக 15 உள்ளக பயிற்சிகளை நடத்தியுள்ளது. மேலும், 201 வாரிய அதிகாரிகள், வாரியத்தின் பணிகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் தொடர்புடைய வெளிப்புற நிறுவனங்கள் வழங்கிய 30 பயிற்சிகளில் கலந்து கொண்டுள்ளனர். 2024 அக்டோபர் மாதத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட உதவி பொறியாளர்களுக்கு, வாரியத்தின் நோக்கமும் செயல் திட்டங்களும் பற்றி நன்கு அறிந்து கொள்ள ஒரு மாதம் தீவிர பயிற்சி நடத்தப்பட்டது. மேலும், இரண்டு வாரிய அதிகாரிகள், நார்வேயின் ஒஸ்லோ நகரத்தில் உள்ள நார்வே நீர் ஆராய்ச்சி நிறுவனத்தில் (Norwegian Institute of Water Research) ஒரு வார காலம் நடைபெற்ற நுண்நெகிழிகள் (Microplastics) மதிப்பீட்டு பயிற்சியில் பங்கேற்றனர்.

அங்கு காற்று மற்றும் நீர் மாதிரிகளில் நுண்நெகிழிகளை மாதிரி எடுக்கும் முறைகள் மற்றும் அளவீட்டு செயல்முறைகள் தொடர்பாக நேரடி பயிற்சி வழங்கப்பட்டது.

**8.2 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்.**

ஒவ்வொரு ஆண்டும், பொதுமக்களை சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஈடுபடுத்த மற்றும் ஊக்குவிக்க பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை வாரியம் மேற்கொள்கிறது. இதில் பேரணிகள், சுற்றுச்சூழல் வினாடி வினா போட்டிகள், மரம் நடுதல், ஆட்டோ ரிக்சா பிரச்சாரங்கள், துண்டு பிரசுரங்கள் விநியோகம், காட்சி பலகைகள் நிறுவுதல், பண்பலை வானொலி ஒளிபரப்பு, குறும்படங்கள் திரையிடுதல் ஆகியவை அடங்கும். இந்த நடவடிக்கைகள் தீபாவளி, போகி, விநாயகர் சதுர்த்தி, கார்த்திகை தீபம் போன்ற முக்கிய பண்டிகை காலங்களில் சிறப்பாக நடத்தப்படுகின்றன.

மேற்கண்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், திடக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வானது உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் ஒருங்கிணைப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் சென்னை தீவுத்திடல் மைதானத்தில் நடைபெறும் வர்த்தக கண்காட்சியில் கழிவு மேலாண்மை, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடு மற்றும் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழி பொருட்களுக்கான தடை பற்றிய சுய விளக்க மாதிரிகள் காட்சிப் படுத்தப்படுகின்றன.

காலநிலை உச்சி மாநாடு 3.0–ன் போது மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம் மற்றும் தமிழ்நாடு மீன் வலை மீட்பு முயற்சிகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் காட்சி பதாகைகள் அமைக்கப்பட்டன.

**தவறு செய்யும் தொழிற்சாலைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது தவறு செய்த 149 தொழிற்சாலைகளை மூடும் உத்தரவையும் மற்றும் இசைவாணை நிபந்தனைகள் மற்றும் சுற்றுச்சூழல் விதிமுறைகளுக்கு இணங்காததற்காக 2949 தொழிற்சாலைகளுக்கு முகாந்திர கோரல் அறிவிப்பையும் ஏப்ரல் 2024 முதல் தற்போது வரை அனுப்பியுள்ளது.

**நேரடி கலந்துரையாடல்**

வாரியத்தின் செயல்பாடுகளை மிகவும் வெளிப்படையானதாகவும், பங்குதாரர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காகவும், வாரியம் ஏப்ரல் 2022 முதல் ஒவ்வொரு மாதமும் 5 ஆம் தேதி " நேரடி கலந்துரையாடல் (Open House Session)", அனைத்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகங்களிலும்

நடத்தப்படுகிறது. அதில், பொதுமக்கள் அதிகாரிகளிடம் நேரடியாக உரையாடி தங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம். ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை, 497 புகார்கள் பதிவு செய்யப்பட்டு 423 புகார்கள் தீர்க்கப்பட்டுள்ளன.

**9. நிலையான வளர்ச்சி இலக்குகள்**

நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) என்பது அனைத்து மக்களும் அமைதி மற்றும் வளம் பெறுவதை உறுதி செய்யும் பன்னாட்டு வளர்ச்சி இலக்குகள் ஆகும். செப்டம்பர் 2015 இல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் உச்சிமாநாட்டில் தீர்க்கப்பட்டபடி 17 மற்றும் 169 இலக்குகளை உள்ளடக்கியது. நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக உறுதியளிக்கப்பட்ட 2030 நிகழ்ச்சி நிரலில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு மாநில அளவில் நிர்ணயிக்கப்பட்ட

கட்டமைப்பின்படி பின்வரும் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**குறிக்கோள்–6, சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம்**

**இலக்கு 6.3**

2030–க்குள், மாசுபாட்டைக் குறைப்பதன் மூலம் நீரின் தரத்தை மேம்படுத்துதல், அபாயகரமான இரசாயனங்கள் மற்றும் பொருட்களின் வெளியேற்றத்தைக் குறைத்தல், சுத்திகரிக்கப்படாத கழிவு நீரின் விகிதத்தை பாதியாகக் குறைத்தல் மற்றும் உலகளவில் மறுசுழற்சி மற்றும் பாதுகாப்பான பயன்பாட்டை கணிசமாக அதிகரித்தல்.

மேற்கூறிய இலக்கை அடைய, 6.3.2 (CPCB விதிமுறைகளின்படி கழிவுநீர் சுத்திகரிப்புக்கு இணங்கும் தொழிற்சலைகளின் சதவீதம்) வகுக்கப்பட்ட குறிகாட்டிகளில் ஒன்றாகும். அனைத்து தொழிற்சாலைகளாலும் நெறிமுறைகளுக்கு இணங்க தங்கள் செயல்முறை கழிவுநீரை சுத்திகரித்து பூஜ்ய

கழிவுநீர் வெளியேற்ற அமைப்பை (ZLD) அடைவதை வாரியம் உறுதி செய்கிறது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மறுசுழற்சி செய்வதன் மூலம், தொழில்துறை நோக்கத்திற்காக மூல நீரின் குறைக்கலாம்.

**குறிக்கோள் – 9, 'தொழில்துறை கண்டுபிடிப்பு மற்றும் உள்கட்டமைப்பு**

**இலக்கு 9.4**

மேற்கூறிய இலக்கை அடைய 9.4.1a (காற்றின் தர கண்காணிப்பு நிலையங்களின் எண்ணிக்கை) வகுக்கப்பட்ட குறிகாட்டிகளில் ஒன்றாகும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாவட்ட தலைமையகம் மற்றும் முக்கிய தொழில்துறை பகுதிகளின் சுற்றுப்புற காற்றின் தரத்தை 85 நிலையங்கள் மூலம் கண்காணித்து வருகின்றது. [தேசிய காற்று தர கண்காணிப்பு திட்டத்தின் (NAMP) கீழ் 52 கையேடு நிலையங்கள், 33 தொடர்ச்சியான

சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்கள் மற்றும் ஒரு நடமாடும் காற்று தர கண்காணிப்பு நிலையம்].

நான்கு நகரங்கள் துகள்களின் நிர்ணயிக்கப்பட்ட அளவைக் கொண்டு அடையாத நகரங்களாக அடையாளம் காணப்பட்டு அந்த நகரங்களில் காற்றின் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு ஒரு தன்னார்வ பசுமை மதிப்பீடு செயல்முறையை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் உருவாக்கியுள்ளது. இது தொழிற்சாலைகளின் சுற்றுச்சூழல் செயல்திறன் அளவுகோள்களில் ஒன்றாக காற்றின் தரத்துடன் மதிப்பிடுவதற்கும், சுத்தமான மற்றும் பசுமையான தொழில்நுட்பங்களின் சிறந்த நடைமுறைகளுக்கு அவற்றை சீரமைக்க ஊக்குவித்து, அவற்றை

பிளாட்டினம், தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம் என மதிப்பிடுகிறது.

**குறிக்கோள்:12, 'பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி'**

**இலக்கு 12.4**

2020 ஆம் ஆண்டிற்குள், ஒப்புக்கொள்ளப்பட்ட சர்வதேச கட்டமைப்பின்படி, இரசாயனங்கள் மற்றும் அனைத்து கழிவுகளையும் அவற்றின் வாழ்நாள் முழுவதும் சுற்றுச்சூழல் ரீதியாக நல்ல மேலாண்மையை அடையவும், மேலும் அவை மனித ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழலில் ஏற்படும் பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்காக காற்று, நீர் மற்றும் மண்ணுக்கு வெளியிடுவதை கணிசமாகக் குறைப்பது.

மேற்கூறிய இலக்கை அடைய 12.4.2a (மாநிலம் முழுவதும் கண்காணிப்பு நிலையங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் தரக் கண்காணிப்பு) வகுக்கப்பட்ட குறிகாட்டிகளில் ஒன்றாகும்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தேசிய நீர் தர கண்காணிப்பு திட்டம் மற்றும் சென்னை நகர நீர் வழி கண்காணிப்பு திட்டத்தின் கீழ் நீரின் தரத்தையும் தேசிய காற்றுத் தர கண்காணிப்பு திட்டம் மற்றும் சென்னையில் 10 இடங்களில் உள்ள சுற்றுப்புற ஒலி தர கண்காணிப்பு நிலையங்கள் ஆகியவை மூலம் சுற்றுச்சூழலின் சுற்றுச்சூழலின் தரத்தை கண்காணித்து வருகின்றது.

**இலக்கு 12.5**

2030–க்குள், தடுப்பு, குறைப்பு, மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு ஆகியவற்றின் மூலம் கழிவு உற்பத்தியை கணிசமாக குறைத்தல்

12.5.4 மற்றும் 12.5.5 ஆகியன மேற்கூறிய இலக்கை அடைவதற்கு வகுக்கப்பட்ட குறிகாட்டிகள் ஆகும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் தீங்கு விளைவிக்கும் தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்த நகர்வு) விதிகள்,

2016–ன் கீழ் மறுசுழற்சி, மறுஉபயோகம், இணை செயலாக்கம் எரிப்பான் மற்றும் அறிவியல் பூர்வமாக நிலபரப்புகளில் வெளியேற்றம் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. சமீபத்திய ஆண்டுகளில் எரிப்பானுக்கும், அறிவியல் பூர்வமாக நிலபரப்புகளில் வெளியேற்றப்படும் கழிவுகளின் அளவு குறைந்துள்ளது. விழிப்புணர்வின் காரணமாக கழிவுகள் உற்பத்தி குறைப்பு, மறுஉபயோகம், மறுசுழற்சி ஆகியவற்றின் பயன்பாடு அதிகமாகியுள்ளது.

**குறிக்கோள்–13:** "காலநிலை நடவடிக்கை"

இலக்கு 13.3

காலநிலை மாற்றத்தைத் தணித்தல், தாக்கத்தைக் குறைத்தல் மற்றும் முன்கூட்டிய எச்சரிக்கை ஆகியவற்றில் கல்வி, விழிப்புணர்வு மற்றும் மனித மற்றும் நிறுவன திறனை மேம்படுத்துதல் மேற்குறிய இலக்கை அடைய 13.3.2 (மாநிலத்தில் தணிப்பு மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும்

மேம்பாட்டு நடவடிக்கைகளை செயல்படுத்த நிறுவன, அமைப்பு மற்றும் தனிப்பட்ட திறன்களை வலுப்படுத்துதல்) வகுக்கப்பட்ட குறிகாட்டிகளில் ஒன்றாகும்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இலக்கு 13–ஐ அடைவதற்கு பின்வருவனவற்றைச் செய்கிறது.

குறுங்காடுகள் என்பது நுண் காடுகள் மூலம் பசுமை பரப்பினை அதிகரிப்பதற்காக உள்நாட்டு மர வகைகளான வேம்பு, ஆலமரம், அரசமரம், மகிழம், பனைமரம் மற்றும் பூவரசு போன்றவற்றை நடவு செய்வதன் மூலம் தமிழ்நாட்டின் பசுமைப் பரப்பை 2030–31 க்குள் 23.7% லிருந்து 33% ஆக அதிகரிக்க வழிவகை செய்யும் முடியும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பருவநிலை மாற்றத்தின் வேகத்தை குறைக்க தொழிற்சாலைகள் மூலம் 1000 குறுங்காடுகளை உருவாக்கி பராமரிக்கப்படுகிறது.

மாநிலத்தின் மரங்களை விரிவுபடுத்துவதன் மூலம் காலநிலை மாற்றத்தை மெதுவாக்கும் முயற்சியில் பூர்வீக மர இனங்களைப் பயன்படுத்தி தொழில்கள் மூலம் TNPCB 1000 குறுங்காடுகளை உருவாக்கியுள்ளது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அதன் சுற்றுச்சூழல் பயிற்சி நிறுவனம் மூலம் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துகிறது. மேலும், வாரிய அதிகாரிகளை தொழில்நுட்ப நிபுணர் நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள ஊக்குவிக்கிறது. மேலும், பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், தமிழ்நாடு முழுவதும் விழாக் காலங்களில் கழிவு மேலாண்மை குறித்த பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களால் நடத்தப்படுகின்றன.

## 10. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நான்காண்டு சாதனைகள்

- **தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தை நவீனமயமாக்கல்:** சிறந்த மேற்பார்வை மற்றும் கண்காணிப்பை உறுதி செய்வதற்காக செங்கல்பட்டில் (மறைமலை நகர்) புதிய இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) அலுவலகம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மாவட்ட நிர்வாகத்துடன் திறம்பட ஒருங்கிணைந்து செயல்பட சென்னை (தெற்கு), திருவாரூர், தென்காசி, ராணிப்பேட்டை மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் ஐந்து புதிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மணலி/சென்னை மற்றும் எண்ணூர்/திருவள்ளூர் ஆகிய இடங்களுக்கு

இரண்டு புதிய பறக்கும் படைகள் உருவாக்கப்பட்டுள்ளன மேலும், செங்கல்பட்டு மண்டலத்தை வலுப்படுத்த சென்னையில் உள்ள பறக்கும் படை மறுவடிவமைப்பு செய்யப்பட்டு செங்கல்பட்டு பறக்கும் படை என பெயரிடப்பட்டுள்ளது.

- **நிகழ்நேர நீர் தர கண்காணிப்பு நிலையங்களை நிறுவுதல்:** நிகழ் நேர நீர் தரக் கண்காணிப்பு நிலையங்கள் மூலம் ஆற்று நீரின் தரத்தினை தொடர்ந்து கண்காணித்து தரவுகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் பதிவேற்ற ஏதுவாக அனுப்புகிறது. இதன் மூலம் மாசு மூலங்கள் கண்டறியப்பட்டு தொழிற்சாலை செயல்பாடுகளின் தாக்கம் மதிப்பிடப்படுகிறது, இது நதி நீரின் தரத்தை பாதுகாக்க பயனுள்ள மாசு குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகுக்கிறது. இக்கண்காணிப்பு நிலையங்கள்,

காலிங்கராயன் கால்வாய், பவானி, நொய்யல் மற்றும் தென்பெண்ணை உள்ளிட்ட ஆற்றின் குறுக்கே முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. எனவே உரிய நேரத்தில் மாசு கட்டுப்பாடு நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டு இப்பகுதிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

- **ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம்:** 2024 ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையத்தை (Integrated Environmental Monitoring Studio) நிறுவிய வாரியம், அபாயகர கழிவுகள், மருத்துவ கழிவுகள், மின்னணு கழிவுகள், தொழில்துறை கழிவுகள் மற்றும் "குறுங்காடுகள்" ஆகியவற்றை பார்வையிட்டு கண்காணிக்கிறது. இது, இணையவழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை, இணையவழி

குறை தீர்க்கும் மனுக்கள் நிவாரண முறைமை, இணையவழி வழக்குகள் மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை, ஒருங்கிணைந்த ஆய்வகக் கண்காணிப்பு (Integrated Lab Module) போன்ற செயலிகளை ஒருங்கிணைக்கிறது. மேலும், 38 தொடர் சுற்றுச்சூழல் காற்று தர கண்காணிப்பு நிலையங்கள், நிகழ் நேர உமிழ்வு கண்காணிப்பு மற்றும் தொழிற்சாலை கழிவு நீர் கண்காணிப்பு வசதிகளையும் கொண்டுள்ளது. கூடுதலாக, இதில் ஆறுகளின் நீர் தரத்தை கண்காணித்து, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், உள்ளாட்சி அமைப்புகளால் இயக்கப்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மேற்பார்வையிடப்படுகிறது.

- **தன்னார்வ பசுமை மதிப்பீடு:** தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைளுக்கான தன்னார்வ பசுமை மதிப்பீட்டை அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் தொழிற்சாலைகளின் சுற்றுச்சூழல் செயல்திறனை மதிப்பிடப்பட்டு, சுத்தமான மற்றும் பசுமையான தொழில்நுட்பங்கள் ஊக்குவிக்கப்படும். இந்த மதிப்பீட்டு முறையானது, காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கான உலகளாவிய சுற்றுச்சூழல் தரநிலைகளுடன் நிலையான நடைமுறைகளை நோக்கி தொழிற்சாலைகள் செல்வதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பசுமை மதிப்பீடு மூலம் தமிழ்நாட்டில் பல்வேறு தொழிற்சாலைகளின் "பசுமை முன்னெடுப்புகள்" மதிப்பீடு செய்யப்பட்டு, மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் முயற்சிகளுக்கு வழி வகுக்கும்.

இதுவரை, 37 தொழிற்சாலைகள் இதில் இணைந்துள்ளன, மேலும் 16 தொழிற்சாலைகள் சான்றிதழுக்கான தகுதிப் படிவத்தைச் சமர்ப்பித்துள்ளன.

- **பசுமை சாம்பியன் விருதுகள்:** 2021 முதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்த பங்களிப்பை வழங்கிய நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், குடியிருப்பு நலச் சங்கங்கள், தனிநபர்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு வாரியம் விருதுகளை வழங்கி வருகிறது. 2023–24 ஆம் ஆண்டில், விருது பெற்ற 94 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களால் பசுமை சாம்பியன் விருதுகள் வழங்கப்பட்டன.

- **சுழற்சி பொருளாதாரத்தில் குப்பை சேகரிப்பவர்களை பிரதானப்படுத்துதல்:** சென்னை மாநகராட்சியின் மண்டலம் 13 மற்றும் 14–ல், கழிவு சேகரிப்பை அதிகரிக்கவும், சுழற்சி பொருளாதாரத்தை மேம்படுத்தவும் மற்றும் குப்பை சேகரிப்பாளர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும், சுழற்சி பொருளாதாரத்தில் குப்பை சேகரிப்பவர்களை பிரதானப்படுத்துதல் என்ற திடடத்தினை செயல்படுத்தியுள்ளது.

- **ஆயிரம் குறுங்காடுகள் திட்டம்:** ஆரோக்கியமான சுற்றுச்சூழலை உருவாக்குவதற்கும், கார்பனை திறம்பட சேகரிப்பதற்கும், நாட்டு மர வகைகளைக் கொண்ட 1000 குறுங்காடுகள் தொழிற்சாலைகளால் உருவாக்கப்பட்டு

பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த முன்முயற்சி காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதற்கும், பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் நோக்கங்களை அடையவும் உதவுகிறது.

- **இணையவழி கழிவு பரிமாற்ற தளம்:** மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் 04.02.2025 அன்று இணையவழி கழிவு பரிமாற்ற தளத்தை துவக்கி வைத்தார். இது கழிவு உற்பத்தியாளர், கழிவு வாங்குபவர் (மறுசுழற்சி செய்பவர்), கழிவு மேலாண்மை நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்கள் போன்ற அனைத்து பங்குதாரர்களையும் ஒன்றிணைக்கும் இணைதள அடிப்படையிலான முயற்சியாகும். இது விலைமதிப்பற்ற மூலப்பொருட்கள்/வளங்களைப் பாதுகாக்கவும், சுழற்சி பொருளாதாரத்தை மேம்படுத்தவும் உதவும். இதுவரை, 104 கழிவு உற்பத்தியாளர்கள்

மற்றும் 40 கழிவு பயன்பாட்டாளர்கள் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

- **மணலி–எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துணர்ச்சி கவுன்சில்:** எண்ணெய் கசிவு மற்றும் அம்மோனியா வாயு கசிவு உள்ளிட்ட குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் சம்பவங்களைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு 2024 ஆம் ஆண்டில் மணலி–எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துணர்ச்சி கவுன்சிலை நிறுவியுள்ளது. இந்த சிறப்பு நோக்க அமைப்பு சுற்றுச்சூழல் மறுசீரமைக்கும் வகையில் பசுமைப்படுத்துதல், நீர்நிலை மற்றும் சதுப்புநில மறுசீரமைப்பு, திடக்கழிவு மேலாண்மை, மாசு கட்டுப்பாடு, மற்றும் சமூக உள்கட்டமைப்பு வளர்ச்சியில் கவனம் செலுத்துகிறது.
- **மண் தர வரைபடங்களை தயாரித்தல்:** தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு

வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, மண் தர வரைபடங்களை தயாரிக்கும் முயற்சியைத் தொடங்கியுள்ளது. இந்தத் திட்டம், தொழிற்சாலை மண்டலங்களைச் சுற்றியுள்ள மண்ணின் தரத்தை மதிப்பிடுவதையும், நிலச் சீரழிவைத் தடுப்பதையும் மற்றும் நிலையான நில பயன்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **"மீண்டும் மஞ்சப்பை" பிரச்சாரம்:** தமிழ்நாடு அரசின் முக்கிய திட்டமாக 2021ல் அறிமுகமான "மீண்டும் மஞ்சப்பை" பிரச்சாரம், சுற்றுச்சூழலுக்கு உகந்த துணி பையை, நெகிழிக்கு மாற்றாக பயன்படுத்த ஊக்குவிக்கிறது. சமூகத்தால் இயக்கப்படும் இப்பிரச்சாரமானது, ஒருமுறை மட்டுமே

பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றாக "மஞ்சப்பை" பரவலாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கிறது, இது உள்ளூர் சுற்றுச்சூழல் மாற்று பொருட்களின் விநியோகச் சங்கிலியை வலுப்படுத்துவதன் மூலம் பொது மக்களிடையே மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிகள் மற்றும் சுற்றுச்சூழல் மாற்றுகள் குறித்த தேசிய கண்காட்சி மற்றும் தொடக்கநிலை மாநாடு 2022:** தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், பிளாஸ்டிக்கிற்கு மாற்றுகளை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல், தடைசெய்யப்பட்ட

பிளாஸ்டிக்கிற்கு பதிலாக அத்தகைய மாற்றுகளைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல் மற்றும் இடைநிலை பயன்பாட்டு பிளாஸ்டிக்குகளுக்கு கிடைக்கக்கூடிய மாற்றுகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்க்காக, செப்டம்பர் 2022–ல் சென்னை வர்த்தக மையத்தில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றான சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுகள் குறித்த தேசிய கண்காட்சி மற்றும் தொடக்கநிலை மாநாட்டை நடத்தியது.

- நாடு முழுவதிலுமிருந்து 5000–க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இந்த கண்காட்சி வெற்றிகரமாக நடத்தப்பட்டது. மேலும் பிளாஸ்டிக்கிற்கு மாற்றுகள், மாற்று தயாரிப்பு உற்பத்தி இயந்திரங்கள், மாசுபாட்டைக்

கண்டறியும் சாதனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் என பலரும் கலந்து கொண்டு 170–க்கும் மேற்பட்ட அரங்குகளை அமைத்தனர். கூடுதலாக, புகழ்பெற்ற நிறுவனங்களின் இருந்து பங்கேற்ற உறுப்பினர்கள் மற்றும் நிபுணர்களினுடன் 5 குழு விவாதங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

- **தானியங்கி மஞ்சப்பை விற்பனை இயந்திரங்கள்:** சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களின் பயன்பாட்டை மேம்படுத்த, மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பொது இடங்களில் "தானியங்கி மஞ்சப்பை விற்பனை இயந்திரங்கள்" நிறுவப்பட்டுள்ளன. இது நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டு இதன் மூலம் பல்வேறு மாநிலங்களில் எடுக்கப்படும் ஒரு முன்முயற்சியாகும். மார்ச் 2025 நிலவரப்படி, 38 மாவட்டங்களில் 203 இயந்திரங்கள்

நிறுவப்பட்டு 11.2 இலட்சம் துணிப் பைகளை வழங்கப்பட்டுள்ளன.

- **ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக்குகள் மீதான தடை மற்றும் மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம் குறித்த விழிப்புணர்வு:** பொது மக்களிடையே மாற்றத்தை ஏற்படுத்தவும், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கிற்கு எதிரான கூட்டு நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிப்பதற்காகாவும், தமிழகம் முழுவதும் 2.65 இலட்சத்திற்கும் அதிகமான விழிப்புணர்வு நடத்தப்பட்டு, சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக 7.4 இலட்சம் துணி பைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. கல்வி தொலைகாட்சி மூலம் ஒளிபரப்பப்பட்ட பிளாஸ்டிக்கினால் ஏற்படும் சுற்றுச்சூழல் அபாயங்கள் மற்றும் நிலையான மாற்றுகளின்

நன்மைகள் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் அனிமேஷன் வீடியோக்கள் 60,000 பள்ளிகளில் ஒளிபரப்பப்பட்டுள்ளன.

- **மஞ்சப்பை படை:** 2023 அக்டோபரில் "மஞ்சப்பை படை" (Manjappai Brigade) சென்னை மாநகரத்தில் அறிமுகமாகி, மின்சார இருசக்கர வாகனங்களை பயன்படுத்தி பிளாஸ்டிக் தடுப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தது. முதல் கட்டமாக 14,000 இடங்களில் 1,25,000 மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது விரிவுப்படுத்தப்பட்டு, 44 சுற்றுச்சூழல் போராளிகள் சென்னை (மெரினா கடற்கரை "நீலப்படை உட்பட), ஊட்டி, கோயம்புத்தூர் மற்றும் கொடைக்கானலில் செயல்பட்டு வருகின்றனர்.
- **மஞ்சப்பை கியோஸ்க்:** நெகிழி தடுப்பு மற்றும் "மீண்டும் மஞ்சப்பை" இயக்கத்தை வலுப்படுத்த,

சென்னையின் பெசன்ட் நகர் மற்றும் நீலாங்கரை கடற்கரையில் "மஞ்சப்பை கியோஸ்க்" (Manjappai Kiosks) நிறுவப்பட்டுள்ளது. இவை சூரிய ஆற்றலில் இயங்கும் நிலையங்களாக செயல்பட்டு, மஞ்சப்பை விற்பனை இயந்திரம், பிளாஸ்டிக் மீள்வாங்கும் இயந்திரம் மற்றும் விழிப்புணர்வு வீடியோக்களை கொண்டு இயங்கின்றன. மேலும், வாரந்தோறும் பள்ளி குழந்தைகளுக்கு பிளாஸ்டிக் தடுப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இம்முயற்சியின் நிலைத்தன்மை மற்றும் நீண்ட கால செயல்பாட்டை உறுதி செய்வதற்காக, இந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் ஒழுங்கமைப்பதற்கும் உள்ளூர் தொழிற்சாலைகளுடன் கூட்டாண்மைகள் நிறுவப்பட்டுள்ளன.

- **மாநிலம் தழுவிய மகத்தான தூய்மைப்படுத்தல் மற்றும் பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு இயக்கம்:** "மீண்டும் மஞ்சப்பை" பிரச்சாரத்தின் மற்றொரு முக்கிய முயற்சியாக, 25.01.2025 அன்று மாநிலம் தழுவிய மகத்தான தூய்மைப்படுத்தல் மற்றும் பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு இயக்கத்தினை தொடங்கி உள்ளது. இந்த இயக்கம் மூன்று முதன்மை செயல்பாடுகளை உள்ளடக்கியது: பிளாஸ்டிக் கழிவுகளை முறையாகப் பிரித்து அகற்றுவதை உறுதி செய்வதற்கான பிளாஸ்டிக் சேகரிப்பு இயக்கம், பொது இடங்களை சுத்தம் செய்வதில் குடிமக்கள் மற்றும் பங்குதாரர்களை ஈடுபடுத்துதல், பிளாஸ்டிக் மாசுபாட்டினால் ஏற்படும் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார பாதிப்புகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் ஆகியனவாகும். இந்த செயல்பாடு 2025 ஆம்

ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாதமும் 4வது சனிக்கிழமையன்று அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், பேரூராட்சிகள் மற்றும் கிராமத் பகுதிகளில் நடத்தப்பட்டு பிளாஸ்டிக் மாசுபாட்டைக் கையாள்வதில் குடிமக்கள் மற்றும் பங்குதாரர்களின் நிலையான ஈடுபாட்டை உறுதி செய்யும்.

- **Bag–Athon ஹேக்கத்தான்:** பிளாஸ்டிக் மாற்று பொருட்களை மலிவாக வழங்க தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நடத்திய "Bag–Athon" "ஹேக்கத்தான்" மூலம், வேட்டி துணி கழிவுகள், தையல் கழிவுகள், மீட்பு கழிவுகள், வாழை தண்டு நார் போன்ற புதிய மூலப்பொருட்களை பயன்படுத்தி ரூ.5–க்குள் விலை குறைந்த துணி பைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- **சுற்றுசூழல் மாற்று பொருட்கள் மாநாடு:** புதுமையான முயற்சிகள் மூலம் நிலைத்தன்மை

மற்றும் சுற்றுச்சூழல் நட்பு நடைமுறைகளை மேம்படுத்தும் பொருட்டு நவம்பர் 13, 2024 அன்று, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் "சுற்றுசூழல் மாற்று பொருட்கள் மாநாட்டை" ஏற்பாடு செய்து, உற்பத்தியாளர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களை ஒன்றிணைத்து பிளாஸ்டிக் தடையை திறம்பட செயல்படுத்துவது மற்றும் சுற்றுச்சூழல் மாற்றுத் தொழிலை வலுப்படுத்துவதற்கான உத்திகள் பற்றி விவாதித்தது. இந்நிகழ்ச்சியின் போது, தமிழகத்தின் 38 மாவட்டங்களில் உள்ள 358 சுற்றுச்சூழல் மாற்று உற்பத்தியாளர்களின் மாவட்ட வாரியான விவரங்களை கொண்ட, திருத்தப்பட்ட சுற்றுச்சூழல் மாற்று கையேடு வெளியிடப்பட்டது.

- **தமிழ்நாடு மீன் வலை முன்முயற்சிகள்:** கடல் பிளாஸ்டிக் மாசுபாட்டை தடுக்கவும், கடல்

பல்லுயிர் பெருக்கத்தை பாதுகாக்கவும் தமிழ்நாடு அரசு தமிழ்நாடு மீன் வலை முன்முயற்சிகளை மேற்கொள்ள அறிவுறுத்தியது. இந்த புதிய முயற்சியின் கீழ், முதல் கைவிடப்பட்ட முதல் மீன்வலை சேகரிப்பு மையம் 2024 ஆகஸ்ட் 14 அன்று சென்னை காசிமேட்டில் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த மையம் கைவிடப்பட்ட மீன்வலைகள் மற்றும் கடல் பிளாஸ்டிக் குப்பைகளை சேகரிக்கிறது, அவை பிரிக்கப்பட்டு மறுசுழற்சிக்கு அனுப்பப் படுகின்றன, இதுவரை சுமார் 13,679 கிலோ நிராகரிக்கப்பட்ட மீன் வலைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. நிலைத்தன்மை பற்றிய அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வையால் வழிநடத்தப்படும் இந்த முயற்சியானது 14 கடலோர மாவட்டங்களில் இதேபோன்ற மையங்களுடன் விரிவடைந்து, கழிவுகளை

மதிப்புமிக்க வளங்களாக மாற்றுவதன் மூலம் சுழற்சி பொருளாதாரத்தை வளர்க்கும்.

- **காலநிலை போராளிகளுக்கு (பெண்கள் சுய உதவிக்குழு) 100 மின்–ஆட்டோக்கள் விநியோகம்:** காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் மகளிரின் பங்கை உணர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 08.03.2025 அன்று 50 மின்–ஆட்டோக்கள் கொண்ட முதல் படையையும் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் 13.03.2025 அன்று 50 மின்–ஆட்டோக்கள் கொண்ட இரண்டாவது படையையும் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். இந்த முன்னோடி முயற்சி, சுற்றுச்சூழல் மாற்றுகளைப் பயன்படுத்துதல், நிலையான போக்குவரத்து மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த

வேலைவாய்ப்புகள் மூலம் பெண்கள் முன்னேற்றம் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.

**தங்கம் தென்னரசு**
**நிதி மற்றும் சுற்றுச்சூழல் &**
**காலநிலை மாற்றத்துறை அமைச்சர்**




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 3.0 வின் போது பசுமை கட்டடங்களுக்கு சான்றிதழ் வழங்கும் வழிமுறைகள் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற வாழ்வியில் முறைகள் குறித்த புத்தகம் வெளியிடப்பட்டது.




மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் பசுமைப் பள்ளிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பசுமைப் புத்தாய்வுத் திட்டத்தின் முதலாமாண்டு நிறைவு விழா.



மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் கழிவு மேலாண்மையின் அனைத்து பங்குதாரர்களையும் ஒன்றிணைக்கும் இணைய வழி கழிவு பரிமாற்ற தளத்தை சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கத்தில் 04.02.2025 அன்று நடைபெற்ற காலநிலை உச்சிநிலை மாநாடு 3.0–ல் துவக்கி வைத்தார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உலக மகளிர் தினத்தையொட்டி 08.03.2025 அன்று, நகர்ப்புற மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு 50 மின் ஆட்டோக்களை வழங்கி, கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



காலநிலை வீரர்கள் முன்முயற்சி திட்டத்தின் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் 13.03.2025 அன்று, நகர்ப்புற மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு 50 மின் ஆட்டோக்களை வழங்கி, கொடியசைத்து தொடங்கி வைத்தார்.




நெகிழி பயன்பாட்டை தவிர்க்கும் பொருட்டு, மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில், தானியங்கி மஞ்சப்பை விற்பனை இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.



ஸ்ரீபெரும்புதூரில் உள்ள செயின்ட் கோபேன் நிறுவன வளாகத்தில் வளர்க்கப்பட்ட குறுங்காடுகள்.



தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம்.




சென்னை நீலாங்கரை கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள மஞ்சப்பை கடற்கரை மையம்.



தடை செய்யப்பட்ட நெகிழிகள் குறித்து சென்னையின் கடலோரப் பகுதிகளில் "மீண்டும் மஞ்சப்பை" திட்டத்தின் கீழ் நீலப்படை மூலம் பிரச்சாரம் மேற்கொள்ளுதல்.



ஊட்டியில் நிலையான நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கும் மலையின் சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாப்பதற்கும் பசுமைப் படை மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.



அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.